
JL
Y211m, N70TA
POR
223670

# தமிழரசு


ஜனவரி 1–31, 2002



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
வரலாற்று ஆராய்ச்சி




மேதகு ஆளுநராக திரு. பி.எஸ். ராம மோகன் ராவ் பதவியேற்பு (18-1-2002)



இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2002

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
28
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2033
மார்கழி – தை
ஜனவரி 1–31, 2002
மலர் : 33 இதழ் : 13 & 14
விலை ரூ.10

## இந்த இதழில்...


- குடியரசுத் திருநாள் ........ 2
- இந்நாள் திருநாள் ........ 12
- உயிரியல் தொழில்நுட்பம் ........ 15
- சமத்துவ விழா ........ 17
- மருத்துவச் செய்திகள் ........ 18
- பன்முகப் பார்வையர் பாவாணர் ........ 23
- ஊனமுற்றோர் முன்னேற ........ 33
- புவியியலமைப்பு ........ 35
- அறிவியல் தமிழ் - தமிழ் பண்பாட்டுக் கருத்தரங்கு ........ 37
- திருவள்ளுவர் திருநாள் ........ 41
- சுகாதாரப் பொங்கல் ........ 45
- பாண்டியர் வரலாறு ........ 49
- தயிர்க்காரி - சிறுகதை ........ 57
- குடிநீர்த்தன்மை ........ 67
- அன்றும் இன்றும் - கவிதை ........ 70
- மருத்துவமனை ஒவ்வொன்றிற்கும் ஆலோசனைக் குழு ........ 72
- அரசு மருத்துவமனைகளில் அமைச்சர் ஆய்வு ... 73
- எயிட்ஸ் கருத்தரங்கம் ........ 74
- இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 80


முதல் மற்றும் கடைசிப்பக்க அட்டையில்...

குடியரசு நாள் விழா


223670

# சென்னையில் குடியரசுத் திருநாள்


இந்தியக் குடியரசு நாள் விழா தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னையிலும், மாவட்டங்களிலும் கொண்டாடப் படுகிறது. சென்னையில் கடற்கரை காமராஜர் சாலையில் மகாத்மா காந்தி சிலை அருகே **26.1.2002** அன்று காலை **7.50** மணிக்கு குடியரசு தின விழாக் கொண்டாட்டம் தொடங்கியது.

காவலர்கள் மோட்டார் சைக்கிள்களில் முன்னே அணிவகுத்துவர, விழாவிற்கு வருகைதந்த மாண்புமிகு முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பார்வையாளர் பகுதியைச் சுற்றி வந்து வாழ்த்துத் தெரிவித்தார். தொடர்ந்து காவலர்கள் மோட்டார் சைக்கிள்களில் அணிவகுத்து வர விழாவிற்கு வருகைதந்த மேதகு ஆளுநர் திரு பி.எஸ். ராமமோகன்ராவ் அவர்கள் பார்வையாளர் பகுதியில் சுற்றி வந்து வாழ்த்துத் தெரிவித்தார்.

பின்னர் முதலமைச்சர் அவர்கள் மேதகு ஆளுநர் அவர்களை அணிவகுப்பு மேடை அருகில் வரவேற்று ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா மற்றும் கோவா மாநிலங்களின் தலைமைப் படைத் தலைவர் மேஜர் ஜெனரல் ஏ.எஸ். ஜாம்வால், விஎஸ்எம், சென்னை கடற்படை பொறுப்பு அதிகாரி கமோடர் பி.ஆர்.ஃப்ராங்க்ளின், ஏவிஎஸ்எம், விஎஸ்எம், சென்னை தாம்பரம் வான்படை அதிகாரி ஏர்கமோடர் எஸ்.கே.சோபட், விஎம், தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு பி.பி.நெய்ல்வால், தமிழ்நாடு கூடுதல் காவல்துறைத் தலைவர் திரு கே.நடராஜன், சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர்








திரு.கே. விஜயகுமார் ஆகியோரை மேதகு ஆளுநர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

இதனையடுத்து காலை **8** மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அரசு ஹெலிகாப்டர் விண்வெளியில் வலம் வந்து மலர் தூவியது.

பின்னர் ஆளுநர் அவர்கள் அணிவகுப்பு மேடையில் நின்று அணிவகுப்பைப் பார்வையிட்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

தரைப்படை, இராணுவப்படை, கடற்படை, கடற்படை ஊர்தி, வான்படை, வான்படை ஊர்தி, முன்னாள்




படைவீரர்கள் பிரிவு, மத்திய ரிசர்வ் காவலர் படை, ரயில்வே பாதுகாப்புப்படை, சென்னை மாநகர இருபால் காவல்படை, கூட்டுக்குழல் முரசிசை, காவல் குதிரைப்படை, காவலர் பயிற்சிக் கல்லூரி, தமிழ்நாடு சிறப்புக் காவல்படை, தமிழ்நாடு கமாண்டோ படை, நீலகிரி ஆயுதப்படை பிரிவினர், தமிழ்நாடு தீயணைப்புப் படை, ஊர்க்காவல் படை, தேசிய மாணவர் படை, சாலை காப்பு சுற்றுக்காவல் படை ஆகியவை அணிவகுப்பில் இடம் பெற்றன.

இவ்வாண்டின் சிறப்பு அம்சமாக முற்றிலும் உள்நாட்டிலேயே நமது பாதுகாப்புத் துறையின் ஆவடி திண் ஊர்தித் தொழிலகத்தில் தயாரிக்கப்பட்ட இந்தியாவின்

இவ்வாண்டு, அண்ணா விருதினைப் பெறும் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த, காலஞ்சென்ற திரு. ல. அரிகிருஷ்ணன், காலஞ்சென்ற திரு. ஜெ.விஜயசீலன், காலஞ்சென்ற உ.உஷா ஆகியோருக்கு ரூ.2,000 மதிப்பிலான தங்க முலாம் பூசிய அண்ணா வீரப்பதக்கமும் ரூ.10,000–க்கான காசோலையும் வழங்கப்பட்டன.

இவ்வாண்டு, தமிழ்நாட்டில் மதநல்லிணக்கத்திற்காக சேவை செய்துவரும் மதுரை திரு.எம்.நவாப்ஜான் அவர்களைப் பாராட்டி ரூ.2,000 மதிப்பிலான கோட்டை அமீர் மதநல்லிணக்கப்பதக்கமும், ரூ.25,000–க்கான காசோலையும், சான்றிதழும் வழங்கப்பட்டன.




பெருமைக்குரிய அஜயா போர்க்கவச டாங்கி அணிவகுத்து வந்தது.

இதனையடுத்து காலை 8.15 மணி அளவில் மேதகு ஆளுநர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வீரதீரச் செயல்களுக்கான அண்ணா பதக்கங்களையும், மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்ட திரு. கோட்டை அமீர் அவர்கள் பெயரிலான மதநல்லிணக்கப் பதக்கத்தையும், கள்ளச்சாராயத்தைத் தடுக்கும் வகையில் ஆற்றிய சீரிய பணிக்காக மாநில காவல்துறையைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் மகாத்மா காந்தி காவல் பதக்கங்களையும் வழங்கினார்.

மயிலாடுதுறை உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு கா.இராஜேந்திரன், நீலகிரி மாவட்ட காவல் ஆய்வாளர் திரு சா.தர்மராஜ், தேனி மதுவிலக்குப் பிரிவு காவல் ஆய்வாளர் திரு க.தமிழ்ச்செல்வன், சேலம் நகர காவல் ஆய்வாளர் திரு ஆ.கணேசன், தஞ்சாவூர் மாவட்ட காவல் ஆய்வாளர் திரு சோ. சீனிவாசன் ஆகிய ஐவருக்கு தலா ரூ.10,000/– ரொக்கத் தொகையும், மகாத்மா காந்தி காவல் பதக்கமும் வழங்கப்பட்டன.


இதனையடுத்து பள்ளி, கல்லூரி மாணவ மாணவியரின் வண்ணமயமான ஆடல் பாடல் கலை நிகழ்ச்சிகள் தொடங்கின. இந்நிகழ்ச்சியில் சென்னை செயிண்ட் ஜான் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஆதர்ஷ்





வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வெங்கடேஷ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கல்யாணம் மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றின் மாணவ மாணவியர் பங்கு பெற்றனர்.

சென்னை இராணி மேரிக் கல்லூரி, ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி கல்லூரி, ஸ்டெல்லா மாரீஸ் கல்லூரி ஆகியவற்றின் சார்பில் நாட்டுப்புற நடனம், ரிதமிக்



வனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதன் மூலம் நாடு செழிக்க வேண்டும் என்பதையும் வனப் பொருட்களினால் மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பொருட்கள் கிடைப்பதையும், வனப் பாதுகாப்பிற்காகவும், மக்களின் தேவைக்காகவும் பண்ணைக் காடுகள்! என வனத்துறையின் அலங்கார ஊர்தி எடுத்து இயம்பியது.

**சுற்றுலாத்துறை**

மன மகிழ்வுக்கும், அறிவு வளர்ச்சிக்கும், ஆன்மீக வழிபாட்டுக்கும் பெரும் துணை புரிவது தமிழகச் சுற்றுலாத்துறையாகும்.

இராமேஸ்வரம் திருக்கோயிலின் மண்டபத் தோற்றத்துடன் எழில்மிகு சிறப்போடு துவங்கும் இவ்வூர்தி, உதகை படகு சவாரியை கண்முன் கொண்டு வந்து காட்டுகிறது. இதன் மறுபுறம் சுற்றுலா அலுவலகமும், சுற்றுலாக்கழகப் பேருந்தும் எடுப்பாக அமையப்பட்டிருந்தன.

இந்து, முஸ்லீம், கிருத்துவர் ஆலயங்கள் ஒருங்கே அமையப்பட்ட நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள வேளாங்கன்னி மாதாகோவில் தோற்றமும், சிக்கல் முருகன் கோவில் தோற்றமும், நாகூர் ஆண்டவரின் தர்காவும் ஒரே நேரத்தில் நம் கண்முன் கொண்டு வந்து காண்போர் கருத்தைக் கவர்வதுடன் உள்ளத்தை நெகிழ வைத்து மத நல்லிணக்கத்திற்கு ஆட்படுத்தவும் வைத்தது சிறப்பாகும்.

**சமூக நலத்துறை**

குழந்தைகள், மகளிர், நலிந்தோர் ஆகியோரின் நலனுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வரும் சமூக நலத்துறை, பெண் சிசுக்கொலையைத் தடுக்கவும், இனி, இந்நிலை ஏற்படாமல் பாதுகாக்கவும், தமிழக அரசு தீட்டிய சீரிய திட்டமே "தொட்டில் குழந்தை" திட்டம்.

ஆண் குழந்தைகள் மட்டுமே வேண்டும் என்ற குறுகிய எண்ணத்தை மாற்றி, பெற்றோர்களால் வளர்க்க முடியாத பெண் குழந்தைகளை அரசே பராமரிக்கும் வண்ணம் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் முக்கிய இடங்களில் அரசு தொட்டில்கள் வைக்கப்பட்டு, இதன் மூலம் பெறப்படும் பெண் குழந்தைகள், வரவேற்பு மையங்களுக்கு அனுப்பப்பட்டு, மறுவாழ்வு அளிக்கப்படுவது, நம் மனதில் இடம் பிடிக்கும் வகையில் இவ்வூர்தி சித்தரிக்கப்பட்டிருந்தது.







**வேளாண்மைத்துறை**

அலங்கார ஊர்தி அணிவகுப்பில் அடுத்ததாக இடம் பெற்றது "உலகிற்கே உணவளிக்கும் உன்னதமான தொழிலாம் உழவுத் தொழிலை ஊக்குவிக்கும் வேளாண்மைத் துறையின்" ஊர்தியாகும்.



ஜிம்னாஸ்டிக் முறையில் 'ரிப்பன்' மற்றும் ஸ்கார்ப் மூலம் வண்ண ஓவியங்களை வெளிக்காட்டும் நிகழ்ச்சிகள் ஆகியவை இடம் பெற்றன.

தொடர்ந்து கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில்அழகர் ஆட்டம், கொக்கலிக்கட்டை ஆட்டம், தென்மண்டல பண்பாட்டு மையம் சார்பில் கர்நாடக மாநிலத்தின் 'டொல்லு குனிதா', பஞ்சாப் மாநிலத்தின் 'பாங்ரா', பாண்டிச்சேரி மாநிலத்தின் திரையாட்டம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் பழங்குடியினர் நடனம் ஆகியவை இடம் பெற்றன.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்புத் தொடங்கியது. ஒவ்வொரு துறையின் முக்கியத்துவத்தையும், செயல்பாடுகளையும் வெளிக்காட்டும் 14 ஊர்திகள் இந்த அணிவகுப்பில் இடம்பெற்றன.

### நாதஸ்வர இசை

எம்மொழி அறிந்தவர்க்கும் இசைவாய் விளங்குவது இசை மொழியே. எத்தரப்பினருக்கும் இன்பம் தருவது, இன்னிசையே. இசைவாணர்களுக்கு இதய கீதமாக விளங்குவது நாதஸ்வர இசையே. அவ்வாறு சிறப்புப் பெற்ற நாதஸ்வர இசை வழங்கும் ஊர்தி, அலங்கார ஊர்திகளின் அணி வரிசையில் முதல் ஊர்தியாக வந்தது.

சென்னையில் உள்ள அரசு இசைக் கல்லூரியில் நாயன இசை பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களும், பயிலுகின்ற மாணவச் செல்வங்களும் நாதஸ்வர இசை முழங்க பவனி வந்தது.

இவ்வூர்தியின் சிறப்புக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் மாமல்லபுரத்தில் உள்ள புலிக்குகையின் எழில்மிக்கதோர் தோற்றம் இவ்வூர்தியில் எடுப்பாய் அமைக்கப்பட்டிருந்தது.

### செய்தி மக்கள் தொடர்புத்துறை

நாடு போற்றும் நல்லாட்சி நடைபெறும் தமிழ்நாடு அரசின் முத்தான திட்டங்களையும், முன்னேற்றப் பணிகளையும் விளக்கிச் சரித்திரம் படைத்தச் சாதனையாளரின் நினைவிடத்தையும் தன்னகத்தே கொண்டு சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்தது, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊர்தி.

அரசுக்கும் மக்களுக்கும் பாலமாய் செயல்படும் சிறப்பைப் பெற்றது செய்தித்துறை. மக்கள் வரவேற்கும் பல்வகை ஊடகங்கள் மூலமாக விளம்பரப் பணியாற்றிவரும் இத்துறை கிராமங்களில் விளம்பர ஊர்தி மூலம் செய்து வரும் விளம்பரப் பணிகளைக் குறிப்பாக எடுத்துக் காட்டும் வகையில், இவ்வலங்கார ஊர்தி வடிவமைக்கப்பட்டிருந்தது.







### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஊர்தி

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்க்கைத்தரம் உயர, இத்துறை பல்வேறு ஆக்கப்பணிகளைச் செய்து வருகின்றது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருஸ்துவ மாணவிகளுக்கு இலவச இரு சக்கர மிதி வண்டி வழங்கிடும் பயனுள்ள திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெண் கல்விக்கு ஊக்கம் அளிக்கும் இத்திட்டம் அழகாக சித்தரிக்கப்பட்டிருந்தது.

### சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம்

சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் மூலம் அமைக்கப்பட்ட அலங்கார ஊர்தியின் முன்புறத்தில், சென்னை, அயோத்தியா குப்பம், காசிமேடு குப்பம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டு இயங்கி வரும் உவர்நீரைக் குடிநீராக மாற்றும் நிலையத்தை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியது. இதன் மூலம் தரமான குடிநீரை பல்லாயிரம் ஏழையர் பெற்றுப் பயன் அடைகின்றனர்.

நிலத்தடி நீர் வளத்தை அதிகரிக்கவும், நிலத்தடிநீர் மட்டம் குறைவதைத் தடுக்கவும் நிலத்தடிநீரின் தரத்தை உயர்த்தவும் கடலோரப் பகுதிகளில் கடல்நீர் ஊடுருவதைத் தவிர்க்கவும் ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேகரிப்பு அவசியம் என்பதை சித்தரித்து விளக்கிடும் காட்சி ஊர்தியின் இறுதிப்பகுதியில் இயல்போடும், ஏற்றச்சிறப்போடும் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது.

### வனத்துறை

வனங்களும், வன உயிரினங்களும் மனித வாழ்க்கையில் முக்கிய அங்கம் வகிப்பதால் அதனை பேணிக்காத்திட அரசு பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

வளர்ந்து வரும் அடிப்படைத் தேவைகளுக்கு, மனிதன் வனத்தையே முழுவதுமாக சார்ந்து வாழ்கின்றான். சுவாசிக்கும் பிராண வாயு முதல் மனிதனின் வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வரை அனைத்தையும் பெற வன வளம் முக்கிய தேவையாகும். அது மட்டுமின்றி மனிதனுக்கு அடிப்படைத் தேவையான தண்ணீரை வழங்குவதும் வனங்களே. மூலிகை மருந்துச் செடிகள் மற்றும் வன உயிரின வாழ்வினங்களுக்குத் தேவையான பயிர்கள் முதலியவற்றை விளைவிக்கின்ற ஆதாரமாக வனம் விளங்குகின்றது.

வனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதன் மூலம் நாடு செழிக்க வேண்டும் என்பதையும் வனப் பொருட்களினால் மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பொருட்கள் கிடைப்பதையும், வனப் பாதுகாப்பிற்காகவும், மக்களின் தேவைக்காகவும் பண்ணைக் காடுகள்! என வனத்துறையின் அலங்கார ஊர்தி எடுத்து இயம்பியது.

**சுற்றுலாத்துறை**

மன மகிழ்வுக்கும், அறிவு வளர்ச்சிக்கும், ஆன்மீக வழிபாட்டுக்கும் பெரும் துணை புரிவது தமிழகச் சுற்றுலாத்துறையாகும்.

இராமேஸ்வரம் திருக்கோயிலின் மண்டபத் தோற்றத்துடன் எழில்மிகு சிறப்போடு துவங்கும் இவ்வூர்தி, உதகை படகு சவாரியை கண்முன் கொண்டு வந்து காட்டுகிறது. இதன் மறுபுறம் சுற்றுலா அலுவலகமும், சுற்றுலாக்கழகப் பேருந்தும் எடுப்பாக அமையப்பட்டிருந்தன.

இந்து, முஸ்லீம், கிருத்துவர் ஆலயங்கள் ஒருங்கே அமையப்பட்ட நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள வேளாங்கன்னி மாதாகோவில் தோற்றமும், சிக்கல் முருகன் கோவில் தோற்றமும், நாகூர் ஆண்டவரின் தர்காவும் ஒரே நேரத்தில் நம் கண்முன் கொண்டு வந்து காண்போர் கருத்தைக் கவர்வதுடன் உள்ளத்தை நெகிழ வைத்து மத நல்லிணக்கத்திற்கு ஆட்படுத்தவும் வைத்தது சிறப்பாகும்.

**சமூக நலத்துறை**

குழந்தைகள், மகளிர், நலிந்தோர் ஆகியோரின் நலனுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வரும் சமூக நலத்துறை, பெண் சிசுக்கொலையைத் தடுக்கவும், இனி, இந்நிலை ஏற்படாமல் பாதுகாக்கவும், தமிழக அரசு தீட்டிய சீரிய திட்டமே "தொட்டில் குழந்தை'' திட்டம்.

ஆண் குழந்தைகள் மட்டுமே வேண்டும் என்ற குறுகிய எண்ணத்தை மாற்றி, பெற்றோர்களால் வளர்க்க முடியாத பெண் குழந்தைகளை அரசே பராமரிக்கும் வண்ணம் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் முக்கிய இடங்களில் அரசு தொட்டில்கள் வைக்கப்பட்டு, இதன் மூலம் பெறப்படும் பெண் குழந்தைகள், வரவேற்பு மையங்களுக்கு அனுப்பப்பட்டு, மறுவாழ்வு அளிக்கப்படுவது, நம் மனதில் இடம் பிடிக்கும் வகையில் இவ்வூர்தி சித்தரிக்கப்பட்டிருந்தது.








**வேளாண்மைத்துறை**

அலங்கார ஊர்தி அணிவகுப்பில் அடுத்ததாக இடம் பெற்றது "உலகிற்கே உணவளிக்கும் உன்னதமான தொழிலாம் உழவுத் தொழிலை ஊக்குவிக்கும் வேளாண்மைத் துறையின்'' ஊர்தியாகும்.



தமிழ்நாட்டில் அதிக அளவு உற்பத்தி செய்யப்படும் ரகப்பயிர்களான சோளம், மக்காச்சோளம், கம்பு, நெல் மற்றும் தென்னங்குலைகள் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்தன.

### கூட்டுறவுத் துறை

"கூட்டுறவே நாட்டுயர்வு'' – "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'' என்னும் உயரிய கொள்கைகளைக் கொண்டுள்ள கூட்டுறவுத்துறையின் சார்பில், எழிலார்ந்த தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார ஊர்தியில், விவசாயிகள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், மகளிர் ஆகியோரின் வாழ்வில் வளம் சேர்க்கும் வகையில் அரசு ஆற்றி வரும் பணிகள் பற்றி அற்புதமாக வடிவமைக்கப்பட்டிருந்தன.

### தோட்டக்கலைத் துறை

தமிழக விவசாயிகளின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களைச் சித்தரிக்கும் வண்ணம் கனிகள், காய்கறிகள், மலர்கள் மற்றும் வாசனைப் பொருட்களால் மெருகூட்டப் பட்டிருந்தது தோட்டக்கலைத் துறையின் ஊர்தி.

தோட்டக்கலைத்துறைக்கு மட்டுமின்றி தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் நலத்திட்டங்களை உருவாக்கிடும் இடமான தலைமைச் செயலகத்தின் பிரதான கட்டடத் தோற்றம் தோட்டக்கலைத் துறைப் பொருட்களால் உருவாக்கப்பட்டு அழகுக்கு அழகு சேர்க்கப்பட்டிருந்தது.



### காவல்துறை

மகளிருக்கென்றே தனியாகக் காவல்நிலையங்களை, இந்தியாவிலேயே முதன் முதலாக, 1992–லிருந்து தொடர்ந்து செயல்படுத்திவரும் பெருமையைப் பெற்றது தமிழ்நாடு என்ற சிறந்த செய்தியைச் சொல்லி வந்தது, காவல்துறை அலங்கார ஊர்தி. சிறந்த இத்திட்டத்தின் சிறப்பான பணிகளை உயிரோட்டமாக விளக்கியது இவ்வூர்தி.

### மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை

"நோய்நாடி, நோய்முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்'' என்ற குறள் வழி நின்று மக்கள் நலனைக் கொள்கையாகக் கொண்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, அரசின் திட்டங்களை எடுத்துக்காட்டி வலம் வந்தது மக்கள் நல்வாழ்வுத் துறையின் ஊர்தி.



### தொழில் துறை

தமிழக அரசின் தொழில் கூட்டுறவு நிறுவனமான ''இன்கோ–சர்வ்'' சிறிய தேயிலை உற்பத்தியாளர் களிடமிருந்து தேயிலையை வாங்கி ''ஊட்டி டீ'' என்ற பெயரில் சுமார் 27,600 நியாய விலைக்கடைகள் மூலம் மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்வதையும், நுகர்வோர்களுக்குக் குறைந்த விலையில் சிறந்த தரத்தில் தேயிலை வழங்கப்படுவதையும் சிறிய தேயிலை உற்பத்தியாளர்களிடமிருந்து கட்டுப்படியாகக் கூடிய விலையில் தேயிலை வாங்கப்படுவதையும் விளக்கி இரு தரப்பினர்களுக்கும் அரசு நன்மை செய்யும் திட்டத்தை அலங்கார ஊர்தியின் முன்புறம் சித்தரிக்கப்பட்டிருந்தது.

காஞ்சிபுரம் மாவட்டம் சிறுசேரியில் 1,000 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள தகவல் தொழில்நுட்ப பூங்கா ஒரு அறிவுப் பூங்காவாகத் திகழ உள்ளது. தக்க தொலைதொடர்பு வசதிகள் மூலம் உலகளாவிய தொடர்புகளை தமிழகத்திற்கு தந்து அதன் மூலம் வேகமான தொழில் மயமாக்கலுக்கு நுழைவு வாயிலாக அமையும் பூங்காவாக அது சித்தரிக்கப்பட்டிருந்தது.

### ஊரக வளர்ச்சித்துறை

ஊரக ஏழை மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புறப் பெண்களுக்கு நிலையான வருமானம் கிடைக்கச் செய்வதன் மூலம் அவர்களை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டு வருவதே 'பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம்'.

சுயஉதவிக் குழுக்கள் மூலம் சுயவேலைவாய்ப்பு மற்றும் சேமிப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த உதவி செய்யும் நோக்கத்தில் 30 ஆயிரம் கிராமப்புற ஏழைப் பெண்களைத் தேர்ந்தெடுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

கிராம ஊராட்சிகளில் கிராமச்சந்தைகள் போதிய வசதி இல்லாமல் செயல்படும் நிலையை மாற்றிட இவ்வரசு, நபார்டு வங்கியின், ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதி உதவியுடன், இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல், குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, கடைகளுக்கு வசதி அளித்தல், கழிப்பிட வசதி ஆகிய அடிப்படை வசதிகளை இக்கிராமச் சந்தைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க உள்ளது.

பிரதமர் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்படி ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் சாலைவசதி செய்துதரத் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொகுதிக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மக்களின் முக்கிய தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஊரக மேம்பாட்டுத் திட்டங்களை விளக்கி ஊரக வளர்ச்சித்துறையின் ஊர்தி ஊர்ந்து வந்தது.

இந்த நிகழ்ச்சிகளை காமராஜர் சாலையின் இருபுறமும் ஏராளமான பொதுமக்கள் கண்டுக் களித்தனர்.



**செல்வத்தில் எல்லாம் சிறந்த செல்வம் கருத்துச் செல்வம். அடுத்து வரும் தலைமுறையினருக்கு அத்தகைய செல்வத்தை நாம் விட்டுச் செல்ல வேண்டும்.**

*- பேரறிஞர் அண்ணா*

# இந்நாள் திருநாள்

– பேரறிஞர் அண்ணா

தம்பி!

தெரிகிறது, தெரிகிறது, உன் முகத்திலே அழகு பொங்கி நிற்கும் காரணம் – புத்தாடையணிந்துள்ள உன் நடை, காட்டுப்பாதையில் செல்லும் வேழம், வேங்கையின் மீது உராய்ந்து செல்லும் போது ஏற்படுவது போன்ற ஓசையை அல்லவா எழுப்புகிறது? கிளியும், புறாவும், நாகண வாயும் சிட்டும், குயிலும் மயிலும் காட்சிக்கினிய பொருளத்தனையும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் கலந்துறவாடிடுவது போலன்றோ இல்லம் விளங்கிட வேண்டுமென விழைகிறாய்!

என்ன அவசரம்! ஏன் அவ்வளவு அவசரம்? சென்று சென்று பார்க்கிறாயே, பால் பொங்கிற்றா என்று! அன்னை அறிவார்களே, எத்துணை நேரம் தழலிடை இருந்தால் பொங்கிப் பதமாகும், புத்தரிசி என்பதனை! உனக்கேன் அந்தத் தொல்லை ஓராயிரம் தடவை சென்று கேட்கிறாயே– ஓஹோ! உன்னை உற்றாரும் நண்பரும், கேட்கிறார்களா – பால் பொங்கிற்றா என்று! 'ஆம்' எனப் பதிலும் கூற வேண்டுமா – அகத்தினழகுதான் முகத்தில் தெரிகிறதே!

இன்று திருநாள்! இல்லந்தோறும் இளைஞரும் முதியோரும், இருபாலரும், 'பொங்கலோ பொங்க'லென்று மகிழ்ச்சியுடன் குரலெழுப்பி, தாமும், தம்மைச் சூழ இருப்பவரை யாவுமே புதியதோர் பொலிவு பெற்றிருப்பது கண்டு, 'நலிவெலாம் ஒழிந்தது; நல்லன யாவையும் இனிக் கிடைத்திடும்' என்று நம்பி, அந்த மகிழ்ச்சிப் பெருக்குடன் மற்றையோரும், மனைதோறும் மனைதோறும் இருத்தல் கண்டு, நாடே விழாக்கோலம் பூண்டுளது என்று பெருமிதம் கொள்வதற்கே அமைந்த விழாநாள்! 'பால் பொங்கிற்றா?' – என்று, அன்பு பொங்கக்கேட்டு, அகமகிழச் செய்யும் நன்னாள்! இன்பம் பொங்கும்! மனையெலாம் வழியும்! புத்தம் புதுக்கோலம் பெற்று, இல்லமெல்லாம் எழிலோவியமாகும்; அன்பு மணம் எங்கும் கமழும்; பூங்கா சென்ற புள்ளினமும், மலரிடை உலவும் வண்டினமும் 'கானம்' கிளப்பிடுவது போன்றதோர் களிப்பொலி எங்கும் எழும்! பனி தொலைந்தது; பரிதி அப்பகையினை விரட்டினான்! நில மடந்தைக்குப் புதிய எழிலூட்டினான் – நடுக்கும் குளிர் இனி இல்லை; வாழ்வை நொறுக்கும் கேடுகட்கு இனி ஆதிக்கம் இல்லை!

விளைந்தது குவிந்திடக் கண்டோம்; வினையின் பயனைக் கொண்டோம்; செயலின் செழுமை விளங்கிற்று; செய்தொழிலின் மேன்மை துலங்கிற்று; உழவன் பெருமையை உலகே புகழ்கிறது; உலகுக்கே அத்தொழில் அச்சாணி என்று உளமகிழ்ந்து உரைக்கின்றனர் அறிஞர் பெருமக்கள்.

அவன் காலில் படிந்த 'சேறும் சகதியும்' வாழ்வுக்குச் சந்தனமாகி மணம் அளிக்கிறது. அவன் பூட்டிய ஏர் அளித்த வளம், பெருந்தேரோடும் நிலையை அரசர்க்கே அளிக்கிறது எனில், மற்றையோர் ஏற்றம் பெறாதிருப்பரோ! அவன் 'கஞ்சி' தான் குடித்தான்; கலயமோ மண்ணாலானது; கழனிப் பக்கம் அமர்ந்து கடும் உழைப்புக்குப் பிறகு, உச்சிப்போதிலே அவன் 'இச்சைக்கினியாள்' தந்தது!

இதோ, அவன் இஞ்சியும், மஞ்சளும், வாழையும், பலாவும், மாவும் பிறவும் அளித்து, தன் திறமையையும், வள்ளற்றன்மையையும் எடுத்துக் காட்டுகிறான், கல்லிலும், முள்ளிலும் நடந்தான் – காரிருள் கலையும் நேரமறிந்து எழுந்தான் – பகலெலாம் பாடுபட்டான் –





முளைவிட்டதும் மகிழ்ந்தான் – களை கண்டு கவலை கொண்டான்; உழைத்தான், உழைத்தான் – கழனி பச்சை நிறம் பெற்றது; மீண்டும் பாடுபட்டான்; இதோ, பொன்னாடை போர்த்திக் கொண்டு புவிப் பெண்ணாள், செந்நெல் மணி மாலைகள் அணிந்து தென்றலுடன் தேனொழுகப் பேசி, தெவிட்டாது பாடி, கோலம் காட்டி நிற்கிறாள்!

ஓவியன், நீல நிற வானிலே பல்வேறு உருவமாக உலவிடும் கார் கண்டு, தீட்டு கோல் எடுப்பான்; ஏரடிக்கும் சிறு கோலுடைய உழவுப் பெருமகனோ, அண்ணாந்து பார்க்கிறான்; அகமகிழ்கிறான். எதன் பொருட்டு? தன் வாழ்வு சிறக்கும் வகை கண்டோம் என்பது பற்றி எண்ணி அல்ல; நாட்டில் நல்லறிவாளர் படித்து இன்புறும் ஏடுகள் குறித்து அல்ல; அவனைப் பற்றித் தமிழ்ப் பேரறிவாளர்கள் – மூதறிஞர்கள் கூறிச் சென்ற பொன்னுரைகள், அகத்திலும் புறத்திலும், தொகையிலும் கலம்பகத்திலும் ஏராளம், ஏராளம், அவன், அவை பற்றி ஏதும் அறியான்! அவனுக்காக வாதாடிய புலவர்களை அவன் கண்டானில்லை; கருத்தூட்டமளிக்கும் கவிவாணர் பலர் அவன் செய்தொழிலின் சிறப்பு குறித்துச் செப்பியுள்ள ஒப்பில் புலமை நிறை மணிகளை அவன் கண்டானில்லை; சேரன் அவையின் சிறப்பு, பாண்டியன் பாசறை அமைந்த பெருமை, சோழ நன்னாட்டான் பாடியும் மாடியும் கண்ட அருமை இவை பற்றி அவன் அறியான்; 'கருக்கலிலே போக வேண்டும் – பசுந்தழை பத்து வண்டி வேண்டும் – பண்ணையாரிடம் இன்னது கூறவேண்டும் – வேலியை இவ்விதம் சரிசெய்ய வேண்டும்' என்று இவை பற்றித்தான் பேசுகிறான். 'பயிர் எவ்வளவு காணும்'

என்பதை உரைக்கிறான் – 'மணி' அவனுக்கல்ல என்பது தெரிந்தும் மகிழ்ச்சியுடன். அவன் அளித்திடும் 'அம்பாரம்' பண்ணையாரைப் பொன்னார் மேனியராக்குகிறது – புவியாளும் வாய்ப்பினைத் தருகிறது! அவன் தன் கண்ணாரப் பயிர் ஏறுவது கண்டு களிப்பெய்துகிறான் – தன் உழைப்பு நற்பலனைத் தந்தது என்பதறிந்து!

'உழவர் திருநாள்', இப்பொங்கற் புதுநாள்' – என்பதை அனைவரும் இன்று அறிந்து போற்றுகின்றனர்.

பண்படுத்திப் பரம்படித்து, எருவிட்டு ஏர்பிடித்து, விதைதூவி நாற்றுநட்டு, களை எடுத்து, கதிர் முற்றிடக் கண்டு அறுத்தெடுத்துப் புடைத்துக் குவித்து உணவுப் பொருளை உலகோர்க்கு உழவர் அளிக்கும் இவ்விழாதான், நாம் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் கொண்டாடும் ஒரே விழா!

ஒருநாள் – ஊரெல்லாம் விழா! ஒரு திங்களும் போதுமானதாக இல்லை – நமக்கு, நாட்டவரிடம் இவ்விழாவில் மாண்பினைக் குறித்து, வியந்து விரித்துரைத்திட!

ஊர், விழாக்கோலம் கொள்ள வேண்டும்; இசையும் கூத்தும், உடற்பயிற்சி விளையாட்டுகளும் இன்ன பிறவும் நடைபெற வேண்டும்; தமிழரின் தொன்மை பற்றியும், மூதாதையர் காலத்தில் இருந்த பொலிவு பற்றியும், அஃதே பிறகு நலிவாக மாறிவிடும்படி செய்த நயவஞ்சகர் போக்குபற்றியும் முத்தமிழ் மூலம் ஆர்வமூட்டி வருதல் வேண்டும்.

பிற எந்த விழாவும், வீட்டோடு அமையும்; அல்லது, கோயிற் பெருவெளியில் நிகழும். மக்கள் மன்றம் கூடி, மகிழ்ச்சிப் பெருக்குடன் கலந்து களிப்பதற்கான விழாவாக இப்பொங்கற் புதுநாளே அமைந்திருக்கிறது.

இந்த ஆண்டும், நாம் விழா கொண்டாடியும், மன்றமதில் நின்று மறத் தமிழன் மாண்பினைக் கூறியும், இன்று வந்துற்ற இழிநிலையைப் போக்குவது குறித்தும் எடுத்தியம்பத் தான் போகிறோம்.

செங்கரும்பு, பலா, மா, வாழை, செந்நெல், ஆவின்பால், புத்தாடை – ஏதேதோ தரலாம், தம்பி, உனக்கு! ஆனால் என்ன செய்வது! இவைகளை எல்லாம்விட என் 'அன்பு' இம்மலர் மூலம் உனக்குக் கிடைத்திடச் செய்தலே முறை என்று எண்ணினேன். உன்னிடம் கூறவேண்டுமென்று எண்ணிய கருத்துக்கள் பல; பலப்பல; ஒரு சிலவற்றைத்தான் கதை, கட்டுரை வடிவாக்கி அளித்திட முடிந்தது. இவற்றினைப் பார்க்கும்போது, உன் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் வேறு பல நற்செயலுக்கு உறைவிடமாக்கி, நமது நாட்டினுக்கு நல்கி, பொங்கலன்று காணும் மகிழ்ச்சி நாட்டின் பொதுமகிழ்ச்சி ஆவதற்கான நற்பணியாற்றிட வரவேண்டும் என்று அழைக்கிறேன் – உரிமையுடன் நம்பிக்கையுடன்.

'இன்று கூடவா, அண்ணா!' என்றா கேட்கிறாய்?

சரி, சரி, போ! போ! அதோ பொங்கும் இன்பத்தைப் பெறு, பொலிவு கண்டு அகமகிழ்ந்திரு; உள்ளம் நிறைந்திடும் உவகையுடன் உரையாடி களிப்புற்று இரு; நின் இல்லம் இன்பப் பூங்காவாகத் திகழட்டும்; அங்கு அறிவு மணம் கமழட்டும்; அன்பு பொங்கட்டும். அறம் தழைத்திடத்தக்க அரும்பணியாற்றிடும் ஆற்றல் எழட்டும்.

பொங்கற் புதுநாளன்று என் அன்பு நிறைந்த வாழ்த்தினை வழங்கி மகிழ்கிறேன்.

அதோ, பெற்றோர் அழைக்கிறார்கள் போலும்; சென்று, செங்கரும்பின்சாறன்ன அன்புரை பெற்று இன்புற்றிரு!

*(1956 திராவிட நாடு பொங்கல் மலரிலிருந்து)*

★ ★ ★





# உயிரியல் தொழில்நுட்பத்திற்கு தமிழகத்தில் சிறப்பான வாய்ப்பு

– மாண்புமிகு முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம்

உயிரியல் தொழில்நுட்பம் குறித்த இந்த சர்வதேச கருத்தரங்கில் கலந்துகொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். சென்னையில் இந்த கருத்தரங்கை நடத்துபவர்களுக்கு என்னுடைய வாழ்த்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் தலைநகரங்களில் முக்கிய இடம் வகித்து வரும் சென்னையில் நடத்தப்படும் இந்த உயிரியல் தொழில்நுட்ப கருத்தரங்கில் வேலை வாய்ப்புகளையும் பொருளாதார வளர்ச்சியையும் உருவாக்க வழிவகுக்கும் என்று நம்புகிறேன்.

உயிரியல் தொழில்நுட்பம் அறிவியல் துறையில் மிக வேகமாக வளர்ந்து விவசாயம், உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய துறைகளில் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

21ஆம் நூற்றாண்டில் உயிரியல் தொழில் நுட்பத்தில் நாம் பல சாதனைகளை செய்ய வாய்ப்பு உள்ளது. உயிரியல் தொழில்நுட்பத்தில் புரட்சி ஏற்படுத்துவதற்கு தமிழகத்தில் நல்ல வாய்ப்பு உள்ளது. நமது மாநிலத்தில் குறைந்த செலவில் திறமையான அறிவியல் பலம் கிடைக்கிறது. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையங்கள், உயிரியல் மாற்றம், பலமான தகவல், தொழில்நுட்ப வசதி மற்றும் ஆங்கிலம் பேசும் மக்கள் ஆகியன தேவையான அளவில் உள்ளன.

சுமார் 22,500 சதுர கிலோமீட்டர் அளவிற்கான காடுகள் 5 ஆயிரம் திட்ட நிலங்கள், ஆயிரம் கிலோ மீட்டர் கடற்கரை பகுதி ஆகியவை இருப்பதால் உயிரியல் ஆய்வு மற்றும் மாற்றங்களுக்கு தமிழகம் ஏற்ற இடமாக உள்ளது.

இதுபோன்ற வசதிகள் கிடைப்பது அரிதாகும். இதை சரிவர பயன்படுத்தினால் அடுத்து 5 ஆண்டுகளில் ரூ.150 பில்லியன் தொகையை நமது நாடு உயிரியல் தொழில்நுட்ப சந்தையில் ஈடுபடுத்த முடியும்.

சிறந்த இயற்கை வளங்கள் தொழில்நுட்ப திறமை, மனித வளம் மற்றும் கடற்கரையோர சுற்றுச்சூழல் ஆகியவை உயிரியல் தொழில் நுட்பத்தை வர்த்தக ரீதியில் பயன்படுத்த நல்ல அடிப்படை வசதிகளை நமது மாநிலத்திற்கு வழங்கியுள்ளது.

உயிரியல் நுணுக்கத்தை வளர்க்கவும், பாதுகாக்கவும், மாநில அரசு இராமேசுவரத்தில் மன்னார் வளைகுடாவிலும், கடலூர் மாவட்டத்தில் பிச்சாவரத்திலும், திருவாரூர்

> உயிரியல் தொழில்நுட்பம் அறிவியல் துறையில் மிக வேகமாக வளர்ந்து விவசாயம், உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய துறைகளில் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

மாவட்டத்தில் முத்துப்பேட்டையிலும் பல திட்டங்களை தற்போது செயல்படுத்தி வருகிறது. மன்னார் வளைகுடா பகுதியை பாதுகாக்க உலக சுற்றுச் சூழல் வசதி அமைப்பு 7.85 மில்லியன் டாலர் ஒதுக்கியுள்ளது.



உயிரியல் தொழில்நுட்ப துறையில் இந்திய மார்க்கெட்டில் தமிழ்நாடு 11 விழுக்காடு பங்கை வகிக்கிறது. மனித வளத்தை மேம்படுத்த தமிழக அரசு தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகளை அனைத்து அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயிரியல் தகவல் மையங்கள் ஆகியவற்றை அறிமுகம் செய்துள்ளது.

உயிரியல் தொழில்நுட்பம் தொடர்பான தொழிற்சாலைகளை வளர்க்க அரசு டிட்கோ மூலம் உயிரியல் தொழில்நுட்ப பூங்காக்களை அமைத்துள்ளது.

மூலிகை மருந்து மற்றும் பாரம்பரிய மருந்துகள் ஆகியவை தயாரிப்பதற்கான அடிப்படை ஆதாரங்கள் மற்றும் சோதனை ஆகியவற்றுக்காக மதுரையில் மருத்துவ பயிர் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும் கேளம்பாக்கத்தில் உள்ள பெண்கள் உயிரியல் தொழில்நுட்ப பூங்காவிற்கு அரசு உதவி செய்து வருகிறது.

அண்ணா பல்கலைக் கழகத்தின் உயிரியல் மையத்தில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமெரிக்காவின் கார்னல் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் உயிரியல் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்பட உள்ளது.

இந்த பூங்கா மூலம் சிறந்த உயிரியல் தொழில்நுட்பங்களும், கருவிகளும் சந்தைப் படுத்தப்படும். கார்னல் பல்கலைக்கழகத்தின் உயர் அனுபவம் நமது தொழில்நுட்ப பூங்காவின் வேகமான வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும். மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ள இந்த உயிரியல் பூங்கா இன்னும் ஓராண்டில் செயல்படத் துவங்கும்.

உயிரியல் தொழில்நுட்பத்தில் தொழிலதிபர்கள் முதலீடு செய்ய முன்வர வேண்டும். அப்படி முதலீடு செய்யும் தொழிலதிபர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் அரசு செய்து தரும்.

*– தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், கார்னெல் பல்கலைக்கழகம், சத்குரு அமைப்பு இணைந்து 31–1–2002 அன்று நடத்திய உயிரியல் தொழில்நுட்பக் கருத்தரங்கில் முதலமைச்சர் ஆற்றிய உரை.* ●



# சமத்துவ விழா

## டாக்டர் **எம்.ஜி.ஆர்.**

தமிழக மக்கள் கொண்டாடும் விழாக்களில் பொங்கல் திருநாள் தனிச் சிறப்புமிக்கதாகும். உழைப்பே உயர்வு தரும் என்பதையும், உழைப்பின் பயனை அனைவரும் பகிர்ந்துண்ணுவதே தமிழகத்தின் பண்பாடு என்பதையும் உலகறியக் கூறிடும் விழாவே பொங்கல் விழா. உழவரும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள உழைப்பாளிகளும் தாங்கள் விளைவித்த செல்வங்களைச் சமுதாயத்துக்கு உரிமையாக்கிடும் சமத்துவ விழா இது. இயற்கை அளிக்கும் வளம் அனைவருக்கும் பொது என்பதை மையக் கருத்தாகக் கொண்டுள்ள திருநாள், பொங்கல் திருநாள்.

பொங்கல் திருநாள் போதிக்கும் நற் கருத்துக்கள் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தத்துவங்கள் ஆகும்.

பல்வேறு ஆற்றல் பெற்றவர்கள் தங்களுடைய திறமைகளையும் உழைப்பையும் பொது நன்மைக்காக ஒப்படைக்கின்ற ஒரு கூட்டு முயற்சியே இன்றைய தேவை என்பதே பொங்கல் விழாவின் அடிப்படை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

பொங்கல் விழா ஊட்டுகின்ற மகிழ்ச்சியும், உற்சாகமும், மன நிறைவும் தமிழகத்தில் உள்ள எல்லோருடைய குடும்பங்களிலும் காணப்பட வேண்டும் என்பதே என் உள்ளத்தின் குறிக்கோள். அந்த இனிய குறிக்கோளை விரைந்து அடைந்திட பொங்கல் விழா நம்மையெல்லாம் ஊக்குவிக்கும் பெரு விழாவாக அமைந்திடும்.

*'உழைப்பே உயர்வு தரும்'*


*'உழைப்போம், உயர்வோம்'*

*'உழைப்போரே உயர்ந்தவர்'*

*'உழைப்பவராலே உலகம் உயர்ந்திடும்'*

என்கின்ற சீரிய இலட்சிய முழக்கங்களை நெஞ்சில் பதிய வைத்திடும் தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவையொட்டி, தமிழக மக்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!





③

# மரணத்தை அழைக்கும் மாரடைப்பு

• மரு. எம்.பால் ஆறுமுகம்

இதயம் மனிதன் உயிர் வாழ இன்றியமையாத ஒரு உறுப்பாக திகழ்கின்றது. இதயம் ஒரு வினாடி செயல்படவில்லையென்றால் மனிதன் உயிர் வாழ முடியாது. இதயம் செயல்பட துணைபுரிவது இதயத்தின் தசைகள். இந்த தசைகள் சுருங்கி விரிய சக்தி தேவைப்படுகிறது. தசை நார்களுக்கு போஷாக்கு அளிப்பதற்கு மெல்லிய இரத்த நாளங்கள் உதவுகின்றன. இத்தகைய இரத்த நாளங்களின் வழியாக செல்லும் ரத்தம் உறைந்து விடுகிறது. இதனால் இரத்தம் செல்வது தடைப்பட்டு விடுகிறது. இரத்த ஓட்டம் இல்லாமையால் தசைகள் செயலிழக்கின்றன. தசை நார்கள் செயலிழப்பதால் இதயம் இயங்க முடியாமல் நின்றுவிடுகிறது. இதனையே நாம் மாரடைப்பு என்று சொல்கிறோம்.

### காரணங்கள்

இதயத்தின் தசைகளுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் இரத்த நாளங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இரத்த குழாய்களில் அடைப்பு ஏற்படுவதாலும், இதயத்தின் தசைகளுக்குச் செல்லும் நாளங்களின் பாதையில் இறுக்கமோ, சுருக்கமோ ஏற்படுவதால் செலுத்தப்படும் இரத்தத்தின் அளவு குறைந்து விக்கம் போன்ற பாதிப்பு ஏற்படுவதாலும் இதயத்தின் இரத்த குழாய்களின் உள்சுவர் கொழுப்பின் மிகுதியினால் அடைத்தோ தடித்தோ போவதால் ஏற்படும் இரத்த ஓட்ட தடையினாலும், இரத்தத்தில் வந்தடையும் பிராண வாயு குறைவாக இருப்பதால் இதய தசைகளுக்குப் போதுமான பிராண வாயு கிடைக்க இயல்பாக தேவைப்படும் இரத்தத்தை விட அதிகமாக இரத்தம் தேவைப்படுகிறது. மாரடைப்பு நோய் ஏற்படுவதற்குரிய முதற் காரணம் இதய தசைகள் இரத்த நாளங்களில் ஏற்படும் அடைப்பு என்பது குறிப்பிட தக்கது. அதிக புகைப் பழக்கம், தூக்கமின்மையினாலும், ஆஸ்துமா நோய், சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு கொலஸ்ட்ரால் அதிகரிப்பதாலும் மாரடைப்பு நோய் அதிகம் ஏற்படுகிறது.


### வகைகள்

உலகச் சுகாதார நிறுவனம் இதயம் சம்பந்தப்பட்ட நோய்களை ஒன்பது வகையாகப் பிரித்துள்ளது.

1. பிறப்பிலே தோன்றுபவை.
2. இதய தசைகளின் இரத்த நாளங்களின் அடைப்புடன் தொடர்புடையவை.
3. மேக நோய் அல்லது பால் உறவு நோய் காரணமாகத் தோன்றுபவை.
4. கிருமித் தொற்றால் ஏற்படுபவை.
5. வாத நோய் காரணமாக ஏற்படுபவை.
6. இரத்தக் கொதிப்போடு தொடர்புடையவை.
7. நுரையீரல் நோய்களோடு தொடர்புடையவை.
8. புரியாத காரணங்களால் தோன்றுபவை.
9. பொதுவானவை.

### அறிகுறிகள்

நெஞ்சுவலி ஏற்படும், மேல்மூச்சு வாங்குதல், களைப்பு, அதிகம் வேர்த்து போகுதல், நெஞ்சிலே வலி தோன்றிய உடனே திடீர் என்று மழையில் நனைந்தது போல் உடல் முழுவதும் வியர்த்து நனைந்து போகும். உடல் நீலநிறமாக மாற ஆரம்பிக்கும். உடல் சில்லிட்டுப் போகும். நாடி தளர்ந்துவிடும். ஏனெனில் இரத்த அழுத்தம் மிக மிக கீழாக குறைந்துவிடும். மார்பு படபடப்பு, உடன் மயக்கம் ஏற்படும், சிலருக்கு வாந்தியோ அல்லது சிலமுறை பேதியும் ஆகலாம். தோள் பட்டை வலி உண்டாகும். தூக்கமின்மை, நெஞ்சில் கோழை கட்டுதல், ஒரு சில நேரங்களில் இருமும்போது இரத்தம் வாய்வழியாக வெளிவருதலும் ஏற்படும்.



### இயற்கை மருத்துவம்

இதய நோயாளிகளுக்கு மலச்சிக்கல் ஏற்படுவது சகஜம். ஆகவே, இயற்கை உப்புகள் மற்றும் நார்த்தன்மை கொண்ட அரைக்கீரை, கொத்தமல்லி, புதினா, முருங்கைக் கீரை, பசலைக்கீரை, பருப்புக் கீரை, தண்டுக்கீரை போன்றவற்றில் ஏதாவது ஒன்றை தினமும் உணவில் சேர்த்து வர வேண்டும். அத்துடன் இரவில் படுக்கைக்கு முன் ஒரு டம்ளர் பாலில் அரை தேக்கரண்டி ஆமணக்கெண்ணெய் சேர்த்து அருந்துதல் நலம். வெள்ளைப் பூண்டையும், பச்சை வெங்காயத்தையும் மஞ்சளையும் அடிக்கடி உட்கொள்ள இதய நோயை கட்டுப்படுத்தி கொலஸ்ட்ராலை நீக்கலாம். கருந்துளசி இலை 25, செம்பருத்திப் பூ 2 ஆகியவற்றை அரை லிட்டர் நீரில் காய்ச்சி 10 நாட்கள் உட்கொள்ள இதயத்திலுள்ள குத்துவலி, பிடிப்புவலி தீரும். கொத்தமல்லி பொடியை நீரில் காய்ச்சி சர்க்கரை சேர்த்து குடிக்க இதயம் பலப்படும். ரோஜாப் பூவுடன் சீனா கற்கண்டு கலந்து பிசைந்து சூரியபுடமிட்டு காலை மாலை உண்டு வர இதயம் உறுதியாகும். தாமரைப் பூ செம்பருத்திப் பூ இவைகளை மருதம் பட்டையுடன் சூரணித்து உட்கொண்டு வர இதய நோய் நீங்கும். ஒரிதழ் தாமரை, சந்தனத் தூளை நீரில் காய்ச்சி வடித்து உட்கொண்டுவர மார்புத் துடிப்பு இதய வலி குணமாகும். திருநீற்றுப் பச்சிலையை முகர்ந்து பார்ப்பதால் இதய நடுக்கம் நிற்கும்.


### உணவு முறைகள்

மாரடைப்பு நோயை பொறுத்த மட்டில் அளவான உணவும் எளிதில் ஜீரணிக்கக் கூடிய உணவையே உட்கொள்ள வேண்டும். அசைவ உணவை அகற்ற வேண்டும். எண்ணெய் வகைகள், எண்ணெய் பலகாரங்களைச் சாப்பிடக்கூடாது. வெண்ணெய், நெய் பொருட்களை உண்ணுதல் கூடாது. உப்பு, காரம், இனிப்பு வகைகளைக் குறைக்க வேண்டும். காய்கறிகளில் அதிக நார்ச் சத்துள்ள கேரட், பீட்ரூட், பீன்ஸ், கருணைக் கிழங்கு , முட்டை கோஸ், முள்ளங்கி, வாழைத்தண்டு போன்றவற்றையும் வைட்டன் 'பி' அதிகமுள்ள ஆப்பிள், சோயா, சோளம், சூர்யகாந்தி எண்ணெய் போன்றவற்றையும், கொய்யா, திராட்சை, பேரிச்சம்பழம், அன்னாசி, ஆரஞ்சு பழம், வாழைப்பழம், மாதுளம் பழம் போன்ற பழ வகைகளையும் உண்ணலாம். வாயுத் தொல்லையை உண்டாக்கக் கூடிய உணவுகளான கடலை, மொச்சை, காராமணி, உருளைக் கிழங்கு, வாழைக்காய் போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது. அருகம்புல்லும் தாமரைப் பூவும் இருதயத்தை பலப்படுத்தக் கூடியவை. ஆகவே, அருகம்புல்லை வேருடன் இடித்துப் பிழிந்து சாறு எடுத்து தினமும் ஒரு டம்ளர் அளவுக்கு உட்கொண்டுவர இருதய இரத்தம் சுத்தமாகும். செம்பருத்திப்பூ, மருதம்பட்டை, சந்தனம் சேர்ந்த கசாயங்கள் ரோஜாப்பூ, வெண் தாமரைப் பூ ஆகியவற்றைச் சேர்த்து செய்யப்பட்ட குல்கந்து லேகியம், இலவங்கப்பட்டை, சடாமாஞ்சில், குக்கில் இவைகளைத் திரிபலாதி சூரணத்துடன் சேர்த்து சாப்பிட இதய நோயாளிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். •

## மருத்துவச் செய்திகள்

• என். விசுவநாதன்

அடிக்கடி விமானத்தில் பறப்பவர்கள், இருக்கையில் ஒரே இடத்தில் காலை வைத்துக் கொண்டு அசைக்காமல் பயணம் செய்பவர்கள், விமானத்தை விட்டு இறங்கியவுடன் நெஞ்சுவலி, மூச்சடைக்கிறது என்று புகார்கள் சொல்வதுண்டு. மருத்துவ நிபுணர்கள் இந்த கோளாறை 'பல்மனரி எம்பாலிசம்' என்று குறிக்கிறார்கள். காலிலுள்ள ரத்தக் குழாயில் ஒரு சிறு உறைவு உண்டாகிவிடுகிறது. பயணி எழுந்து நின்று இறங்கும் போது இந்த 'உறைவு' உடலுக்குள் மேலே பயணித்து நுரையீரலுக்குள் கூட வந்துவிடும்! இந்த 'உறைவு' நுரையீரல் ரத்த ஓட்டத்தைத் தடுக்குமளவுக்கு அமைந்தால், மாரடைப்பு நேர்ந்துவிடும்! கால்களை முறையாக அசைத்தசைத்து அடிக்கடி பயிற்சி செய்யாவிடில் ரத்தம் தேங்கும், இதுபோல 'உறைவும்' நேரும். இப்படி நேராமல் தடுப்பதற்கு விமானப் பயணிகள் என்ன செய்ய வேண்டும் ? அடிக்கடி அல்லது ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறையாவது கேபின் வரை எழுந்து நடத்தல் வேண்டும். இப்படி முடியாதவர்கள் அடிக்கடி குனிந்து கால்களில் குதி மற்றும் கொண்டைச் சதைப் பகுதிகளில் கையால் பிசைந்து மஸாஜ் தர வேண்டும். கால்களை முடிந்தவரை தளர்த்தி, நீட்டியபடி வைக்க வேண்டும்.



ரத்தம் உறைதல் எனும் – ஹை கிளாட்டிங் ரிஸ்க் – ஆபத்தான தன்மையைக் கொண்டவர்கள், அதிகம் குண்டாக இருப்பவர்கள், கர்ப்பிணிகள், வயதானவர்கள், ரத்தச் சுழற்சியில் கோளாறு உள்ளவர்கள், எம்பாலிச நோய்க்குள்ளானவர்கள் யாவருமே விமானம் ஏறும்முன் தங்கள் மருத்துவரை அணுகி, ஆலோசனை பெற்றுச்

செல்வதே நல்லது.

### மூலிகைக் கொசு விரட்டி

சித்தமருத்துவத் தத்துவத்தின் அடிப்படையில் மூலிகைகளைக் கொண்டு தயாரித்த 'கொசு விரட்டி' ஒன்றை சமீபத்தில் கோவை நிறுவனம் ஒன்று வெளியிட்டு உள்ளது. கடந்த இருபது ஆண்டுகளாக பிரான்சு, ஜப்பான், அமெரிக்க நாடுகளுக்கு மலர்களின் இயற்கையான நறுமண திரவத்தை வடித்தெடுத்து ஏற்றுமதி செய்துவரும் கோயம்புத்தூர் ஃபிளேவர்ஸ் அண்ட் ஃபிரேக்ரன்சஸ் லிமிடெட் நிறுவனம் இந்த 'மூலிகைக் கொசுவிரட்டி'யை ஆய்வுகள் மூலம் கண்டுபிடித்து, சென்னை படப்பையிலுள்ள 'டாக்சிகாலஜி' ஆய்வுக்கூடச் சான்றிதழ் பெற்று விற்பனைக்கு விட்டிருக்கிறார்கள்.

இந்த மூலிகைக் கொசுவிரட்டியில் சேர்க்கப்பட்டுள்ள இயற்கையான, மூலிகைத் தாவர இலைகள்:

வேம்பு இலைகள், துளசி இலைகள், கீழாநெல்லி இலைகள், மஞ்சள் கிழங்குப் பொடி, யூகலிப்டஸ் இலைகள், எலுமிச்சைப் புல்லிதழ், லவங்கப்பட்டை, நொச்சித்தழை, வெட்டிவேர், சுகாதாரமான தூய நீர், ஹெக்சேன் நறுமணம்.

இதற்கு மின்சாரம் தேவையில்லை. புகை இல்லை. போதையூட்டம் வாசனையில்லை. மாறாக மூலிகை மணம் கமழ, இயற்கையான வாசனையால் சுற்றுச்சூழலும் மாசு அகன்று கிருமிகள் அகற்றப்படுகின்றதாம். இந்த மூலிகைக் கொசு விரட்டி, திரவ வடிவமாக, பாட்டில்களில் அடைக்கப்பட்டு 75 மில்லி லிட்டர், 125 மில்லி லிட்டர், 275 மில்லி லிட்டர் என்று மூன்றுவித அளவுகளில் விற்பனைக்கு வந்து உள்ளது. தூங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்பாக, படுக்கையறையில் இந்த பாட்டிலைத் திறந்து வைக்க வேண்டும்.

### ஹெபாடிடிஸ் 'சி' வைரஸ்

பொதுவாக ,கல்லீரல் வீக்க நோய்க்கு காரணமாக உள்ள ஹெபாடிடிஸ் ஏ,பி,சி,டி,இ மற்றும் ஜி வைரஸ்களில், ஹெபாடிடில் 'சி' வைரஸ் கிருமி வித்தியாசமானது. இது குறித்த புதிய தகவல்கள்:

1. ஹெபாடிடிஸ் 'சி' வைரஸ் தாக்குதலைத் தடுக்க, பாதுகாப்பான தடுப்பூசி கிடையாது, (ஏ,பி, வைரஸ்களுக்கு உண்டு)
2. 1989–ஆம் ஆண்டு முதல் இந்த 'சி' வைரஸ் தாக்கி, கல்லீரல் வீக்க நோய் பரவுதல் அதிகமாகிக் கொண்டே வருகிறது.
3. 'சி' யின் தாக்குதலால்தான் நோயாளிகளில் 80 முதல் 90 சதவீதம் கல்லீரல் வீக்க நோய் ஏற்படுகிறது.
4. அமெரிக்காவில் 40 லட்சம் அமெரிக்கர்கள் 'சி'யின் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
5. இந்தியாவில் ஆண்டுதோறும் 30,000–க்கும் குறையாமல் இந்த 'சி' வைரஸ் ஈரல் வீக்க நோயாளிகள் உருவாகின்றனர். ஆனால், இதில் 25 முதல் 30 சதவீதம் வரைதான் கண்டறியப்படுகிறார்கள்.
6. ஹெபாடிடிஸ் 'சி' வைரஸ் உடலினுள் புகுந்தால் தானாக வெளியேறும் வாய்ப்பே இல்லை. மருந்தால் ஆறு மாதங்களுக்குள் வெளியேவிட்டால் பயமில்லை. ஆனால், 85 சதவீதம் 'சி' யால் பாதிப்புற்றோர் ஆறு மாதங்களுக்குள் வெளியேற்றாமல், நாட்பட்ட நிலைக்கு வளர்த்துக் கொள்கின்றனர்.
7. அமெரிக்காவில் கல்லீரல் மாற்று சிகிச்சைக்கு பெரிதும் காரணமாக இருப்பது இந்த 'சி' வைரஸ் உண்டாக்கும் கல்லீரல் நோய் பாதிப்புதான்.
8. கல்லீரல் சிதைவு நோய் உண்டாவதும் இந்த 'சி' வைரஸ் தொற்று முற்றுவதால்தான்.
9. 'சி' தொற்றை உடனே அறிகுறிகளால் அறிய முடியாது. மெல்லமெல்ல வளர்ந்து இருபது வருடங்கள் வரைகூட உடலில் அறிகுறியே வெளியில் தெரியாமல் இருக்கும்.

### ரத்தக்கட்டிகள்:

### சில குறிப்புகள்

நம் உடலில் அடிபட்டு ரத்தம் கட்டுவது வேறு, உடலினுள் ரத்தக் கட்டிகள் உண்டாவது வேறு. முதல் வகை ரத்தக்கட்டிகள் தேவை கருதி உண்டாவது, இதனால் ரத்தப் போக்கு குறையும். ஆனால், ஆரோக்கியமான ரத்த நாளங்களில் ரத்தக்கட்டி ஏற்படுவது ஆபத்தானது. ரத்த நாளங்களில் சேதம் ஏற்பட்டாலோ, ரத்த ஓட்டம் வழக்கத்துக்கு மாறாக குறைந்தாலோ ரத்தக் கட்டிகள் ஏற்படும். சிறை அழற்சி காரணமாக ரத்த நாளங்களில் வீக்கம் ஏற்பட்டு ரத்தக் கட்டி உருவாகும். நீண்ட நாட்கள் படுக்கையில் படுத்திருந்தாலோ, அதிக தூரம் விமானத்தில் பயணம் செய்தாலோ, கார் ஓட்டினாலோ ரத்த ஓட்டம் குறையும். இதனால் ரத்தக் கட்டிகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

மேலும், புகைபிடிப்பது, கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்துவது, போதுமான சத்துணவின்மை, அதிக எடை கூடுதல் போன்றவைகளாலும் ரத்தக்கட்டிகள் ஏற்படுகின்றன. ரத்த நாளங்களில் ரத்தக் கட்டி ஏற்பட்டால் இருதய நோய், சிறை அழற்சி போன்றவை ஏற்படும். ரத்த நாளங்களிலோ, இருதயத்திலோ ரத்தம் உறைந்து அப்படியே இருந்தால் அது ரத்த உறைகட்டி ஆகும். இவ்வகைக் கட்டிகள் விரைவில் கரைந்து விடும். அப்படிக் கரையாமல் பயணம் செய்வது ரத்த நாளத்தில் ஏதாவது ஒரு இடத்தில் அப்படியே நின்று, ரத்த ஓட்டத்தைத் தடுத்தால் முக்கிய உறுப்புகளுக்கு ரத்த ஓட்டம் குறையும். இந்த 'கட்டி'யின் உருவ அளவைப் பொறுத்து, உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

மூளை ரத்த நாளத்தில் கட்டி என்றால் பக்கவாதம், இருதய ரத்த நாளம் என்றால் மாரடைப்பு, நுரையீரலில் ரத்தத் துகள்கள் இருந்தால் மூச்சுவிட சிரமம் என்றெல்லாம் வரும். பொதுவாக, ரத்தக்கட்டிகள் வெளிப்படையான அறிகுறிகளைக் காட்டுவதில்லை. கண்களுக்குச் செல்லும் ரத்த நாளங்களில் ரத்தக் கட்டி ஏற்பட்டிருந்தால் திடீரென கண்பார்வையில் குறைவு ஏற்படும். மூளை ரத்த நாளங்களில் ரத்தக் கட்டி ஏற்பட்டிருந்தால் நிற்க முடியாது, நடக்க முடியாது, மயக்கம் வரும், கை அல்லது காலில் திடீரென குறிப்பிட்ட இடத்தில் வலி தோன்றி ,தோல் நிறம் மாறி, மரத்துப் போனாலும் ரத்தக் கட்டிகள் இருப்பதாகக் கொள்ளலாம்.

ஆங்கில மருத்துவத்தில் ரத்தக் கட்டிகளுக்கு முதலில் ஆஸ்பிரின் தருகிறார்கள். அபாய கட்டத்தில் உள்ளவர்களுக்கு இருதயம், நுரையீரலில் ரத்தக் கட்டிகளைக் கரைக்க 'ஸ்ரெப்டோகினாஸ்' என்ற மருந்து தரப்படுகிறது. அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் ரத்தக் கட்டிகள் ஏற்படாமல் இருக்க 'கிபாரின்' கொடுக்கப்படுகிறது. மூலிகை மருத்துவத்தில் இஞ்சி, மஞ்சள், பூண்டு முக்கிய இடம் பெறுகின்றன. மீன் எண்ணெய்க்கு ரத்தக் கட்டியை ஏற்படாமல் தடுக்கும் சக்தி உள்ளது. வைட்டமின் ஈ, மக்னீசியச் சத்து ஆகியவை ரத்தக் கட்டி தோன்றாமல் தடுக்கும். குறைந்த கொழுப்புச் சத்துணவு, உடற்பயிற்சி, உடல் எடை கூடாதிருத்தல் ஆகியவற்றின் மூலம் இயற்கையாகவே ரத்தக் கட்டிகள் உருவாகாமல் தடுக்கலாம். •

## காந்திஜி நினைவு நாளில் தீண்டாமை ஒழிக்க உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படையில் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

# குழந்தைகளின் மனவளர்ச்சிப் பிரச்சினை

• டாக்டர் மா. திருநாவுக்கரசு

குழந்தைகளின் மனவளர்ச்சி குறைக்கான அறிகுறிகள் 3 வயதிலிருந்து 5 வயதிற்குள்ளாகவே தோன்றி விடுவதால் இதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு உருப்படியான மனிதனாக உருமாற முடிவதில்லை. இவ்வாறு இருக்கும் குழந்தைகள் பிற்காலத்தில் என்னவாகிறார்கள் என்று தொடர்ந்து கவனித்து வந்ததில் 10 விழுக்காடுதான் ஓரளவிற்கு தன்னைத் தானே பார்த்துக் கொள்கிற அளவிற்காவது உள்ள மனிதர்களாக ஆகிறார்கள். அப்படி சுமாராக முன்னேற்றம் அடைபவர்கள் என்னென்ன குணாதியசங்கள் என்று பார்த்ததில் அறிவு வளர்ச்சி மற்றும் மொழிவளம் 5 வயதிற்குள்ளாக சுமாராக வளர்ச்சியடைந்திருந்தால், அத்தகைய குழந்தைகளிடம் இந்த முன்னேற்றம் தென்படுகிறது. மேலும், 10 வயதிற்கு மேல் 14 வயதிற்குள்ளாக இத்தகைய குழந்தைகளுக்கு வலிப்பு நோய் ஏற்படுகிறது. மற்றபடி இக்குழந்தைகள் உடல் வளர்ச்சியில் நன்கு வளர்ந்து முதுமைப் பருவம் வரை நல்ல உடல் திடகாத்திரமாக இருக்கிறார்கள். ஆனால், மனவளர்ச்சியடைந்து மற்றவர்களோடு ஒன்றிப் பழகி வாழ முடிவதில்லை. இதுதான் இந்த நோயின் நிலை ஆகும்.

இது பிறவியிலேயே உடல், உறுப்புகளிலேயே அதாவது மூளையில் ஏற்படும் மாறுதல்களினால்தான் இத்தகைய விளைவு ஏற்படுகிறது என்று கணித்துள்ளார்கள். ஆரம்ப காலங்களில் குடும்பச் சூழ்நிலை, பெற்றோர்களின் இறுகிய மனப்பான்மை என்று சுற்றுப்புறத்தினால்தான் என்று கூறி வந்ததை தற்போது உண்மையல்ல என்று உணர்ந்து தெளிந்திருக்கிறார்கள். எனவே, இத்தகைய நோய்க்குக் காரணம் உடலியல் சம்பந்தப்பட்டதுதான் என்று முடிவு செய்துள்ளார்கள். அடுத்து, இதனை எப்படிச் சமாளிப்பது என்ற பார்ப்போம்.

- சாதாரணமாக ஒரு சராசரி மன வளர்ச்சி ஏற்பட ஊக்குவிக்க வேண்டும்.
- அந்தக் குழந்தையிடம் உள்ள ஒரு இறுகிய மனப்பான்மையையும்,. எதைச் செய்தாலும் திரும்பத் திரும்ப ஒரே மாதிரி செய்து கொண்டிருக்கும் செயல்களையும் குறைக்க முயல வேண்டும்.
- விநோதமான வகையில் சமூகப்படுத்தப் படாமல் இருக்கும் வித்தியாசமான நடத்தை மற்றும் பழக்க வழக்கங்களைக் களைய வேண்டும்.
- இந்தக் குழந்தையினால் குடும்பத்தில் ஏற்படும் மன அழுத்தத்தை நீக்க வேண்டும்.

முதலில் கூறிய இந்த நடவடிக்கைகளை மாற்றி தேவையான நடத்தைகளைக் கற்றுக் கொள்ள, நடத்தை மாற்றும் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது, விரும்பத் தகாத, நீக்கப்பட வேண்டிய நடத்தை முறைகளை நீக்கி, தேவைப்படும் விரும்பத் தகுந்த நடத்தை முறைகளைக் கற்றுக் கொடுப்பதுதான் இந்த வைத்திய முறையின் முக்கிய அம்சமாகும். இதற்கு Behaviour Modification என்று பெயர். அடுத்து, மிக முக்கியமானது முடிந்தவரை இக்குழந்தைகளுக்கு மொழிவளத்தை ஏற்படுத்துவது, முதலில் இக்குழந்தைகளில் ஓசைகளை மட்டும் ஏற்படுத்தி

மகிழும் குணத்தை நிறுத்தி, சில வார்த்தைகளை உச்சரிக்க ஊக்கப்படுத்த வேண்டும். அடுத்து, அந்த வார்த்தைகளைத் தகுந்த சமயங்களில் உச்சரித்து பயன்பெற ஊக்குவிக்க வேண்டும். அடுத்து மற்றவர்களோடு தொடர்பு கொள்ள உற்சாகப்படுத்த வேண்டும். இவ்வாறாக இக்குழந்தைகளை ஒரு அமைதியான சூழ்நிலையில் கட்டாயமான சமூகப்படுத்தப்பட்ட நிலையில் வாழ வழிவகை செய்ய வேண்டும். அவ்வாறு அக்குழந்தை மற்றவர்களோடு தொடர்பு கொள்ள முயற்சித்தால் அதற்காக சில பலன்களை அதற்குத் தந்து, அத்தகைய மொழிமூலம் தொடர்பு கொள்ளும் முறையைப் பலப்படுத்த வேண்டும்.

உதாரணமாக, அந்தக் குழந்தையிடம் உரையாட முற்பட வேண்டும். அந்தக் குழந்தை ஓசையை ஏற்படுத்தி, ஒலியை வெளிப்படுத்தி மகிழ்ந்து வருவதைத் தடுத்து, உச்சரிப்பை பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும். ஏதாவது ஒன்றை அக்குழந்தை வேண்டுமென்று சைகையால் கேட்கும் போது அப்பொருளின் பெயரைக் கூறி உச்சரிக்க கேட்க, ஊக்குவிக்க வேண்டும். அப்படிக் கேட்கும்போது அதை உடன் கொடுத்து அக்குழந்தையை திருப்தியடையச் செய்ய வேண்டும். இதனால் அக்குழந்தை இந்த வார்த்தையை உச்சரித்தால் இது கிடைக்கும் என்று உணர்ந்து அந்தப் பொருள் தேவைப்படும் பொழுது அதை உச்சரிக்க முயலும். இவ்வாறாக அக்குழந்தை மொழி மூலம் தொடர்பு கொள்ள ஆரம்பிக்கும்.

அந்தக் குழந்தை தேவையில்லாத, உபயோகமில்லாத செய்கைகளைத் திரும்பத் திரும்ப செய்து வருவதைத் தடுக்க வேண்டும். தடுக்க வேண்டுமேயொழிய கண்டிக்கக் கூடாது. அத்தகைய செய்கைகளை அங்கீகரிக்காமலும், நிராகரித்தும் குறைக்க வேண்டும். அதே சமயம் உபயோகமான தேவையான நடவடிக்கைகளில் கவனத்தைத் திருப்பி அத்தகைய காரியங்களைச் செய்ய பழக்க வேண்டும்.

தன்னுடலிலே சில தூண்டுதல்களை உண்டுபண்ணி, அதனால் உடலில் ஏற்படும் மாறுதல்களைத் தனக்குத்தானே அனுபவித்துமகிழும் குணத்தை மாற்ற வேண்டும். அதாவது தன் உடலுக்கு அப்பாலும் உள்ள விஷயங்கள் மூலம் தொடர்பு கொண்டு அதில் மாறுதல்களை ஏற்படுத்தி அந்த மாறுதல்களை அனுபவித்து மகிழும் தன்மையை அந்தக் குழந்தைக்கு உணர்த்த வேண்டும். அப்படி அது உணர்ந்தால் மேற்கொண்டு அதைச் செய்து அதன் மூலம் பயனை அடையும் போது சுற்றுப்புறத் தொடர்பின் அத்தியாவசியத்தை உணர்ந்து வளர்த்துக் கொள்ளும்.

மேலே கூறிய அனைத்து முறைகளும் எழுதுவதற்கும் படிப்பதற்கும் இலகுவாக இருக்கும். ஆனால், நடைமுறையில் கடைப்பிடிப்பதென்பது மிகவும் கடினமான ஒன்றாகும். சாதாரணமாக, விருப்பமுடன் தொடர்பு கொள்ள நினைப்பவர்கள் கூட சில பழக்க வழக்கங்களை நீக்கியும், புதிதாக ஏற்படுத்துவதும் கடினமாகும். அப்படி இருக்கும்போது சுற்றுப் புறத்தோடு தொடர்பு கொள்ளவே இயலாத ஒரு குழந்தையை மாற்றுவதென்பது எவ்வளவு பெரிய காரியமென்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் ஒருமுகப் படுத்தப்பட்ட நோக்குடன், சேவை மனப்பான்மையுடன் ஈடுபட்டால் தான் இக்காரியத்தில் வெற்றியடைய முடியும். இக்குழந்தையிடம் தொடர்பு கொண்டு, மாற்ற ஒரு வெறியுடன் ஈடுபட்டு மனநலம் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் கூட உண்டு. எனவே, இம்மாதிரி குழந்தைகளை ஒரு குழுவாகச் சேர்த்து, 5, 6 குழந்தைகளை எடுத்துக் கொண்டு ஒரு நபர் ஒருமுறையை அட்டவணைப்படுத்தி, அதன்படி ஒழுங்காகவும், தொடர்ந்தும், கடுமையாகவும், பயிற்சி கொடுத்தால் மாற்ற இயலும்.

அடுத்து, இத்தகைய குழந்தைகள் ஒரு குடும்பத்தில் இருந்தால், அந்த குடும்பத்தின் மனநிலை பாதிக்கப்படும். அந்த குடும்பத்தினர் தீவிரமன அழுத்தத்திற்கு உள்ளாக நேரிடும். எனவே, அவர்களுக்குத் தகுந்த ஆலோசனையும் ஆதரவும், உதவியும் அவ்வப்போது வழங்க வேண்டும். எந்த ஒரு குழந்தையும் நன்றாக வர வேண்டும் நன்றாக இருக்கும் என்று நினைத்துதான் ஒவ்வொரு பெற்றோரும் தனது சுகங்களைத் துறந்து குழந்தைகளை வளர்த்து வருகிறார்கள். 80 விழுக்காடு திருத்தமாக வராது என்று தெரிந்தும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவது எவ்வளவு கடினமாக இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். எனவே, இந்தப் பெற்றோர்களை நன்கு பக்குவப்படுத்தி இந்த சூழ்நிலையை சமாளிக்க தயார்படுத்தி, ஊக்குவிக்க வேண்டும். இவையெல்லாமே கடினமான காரியங்கள் தான். உரிய முறையில் செய்தால் வெற்றி காணலாம்.

*நன்றி :* **மருத்துவ அறிவியல் மலர்**

• • •



காலம் மாறக்கூடியது. மாறிக் கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்து விடும்.

- பேரறிஞர் அண்ணா



# பன்முகப் பார்வையர் பாவாணர் இருபெரும் பண்புகளின் உறைவிடம்

*- முனைவர் இரா. கு. ஆல்துரை*

ஆய்வு நோக்கு, கொள்கைப் பிறப்பு ஆகிய இரு பெரும் பண்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தவர் பாவாணர். ஆய்வு நோக்கு இளம் வயது முதல் உயிர் பிரியும் இறுதிக்காலம் வரை தொடர்ந்து காணப்பட்ட ஒன்று. ஆய்வறிஞருக்கு இது ஓர் எடுத்துக்காட்டு. வகுத்தும் தொகுத்தும் விளக்கும் தன்மை இவருக்கே உரியது எனக் கொள்ளும் வகையில் இவரது ஆய்வுகள் துலங்குகின்றன.

பட்டம், பதவி போன்ற குறுகிய நோக்கங்களுக்காகக் கொள்ளும் ஆய்வு குறிப்பிட்ட கால கட்டத்தில் முடிவு பெறுவதுண்டு. ஆயின் உண்மை ஆய்வறிஞரின் ஆய்வு இடைவிடாதும் நெட்டிடையிட்டதும் தம் இறுதிக்காலம் வரை மேற்கொள்ளப்படுவதுமாகவும் இருக்கும். ஐம்பது ஆண்டுக்காலம் இடையீடுபடாமல் தொடர்ந்த ஆய்வு; அதிலும் குறிப்பிடத்தக்கது ஒரே பொருள் பற்றிய ஆய்வு; தமிழாய்வு! இதுவன்றோ பாவாணரைத் தமிழ் வேழமாக்கியது.

"ஓர் உண்மையான ஆராய்ச்சியாளன் ஒரு நாளும் ஆராயாதிருக்க முடியாது. அவன் ஆராயாவிடினும் அவன் உள்ளம் ஆராயும். அதற்குக் கனவென்றும் நனவென்றும் ஊண்வேளையென்றும் உறக்கவேளையென்றுமில்லை'' (1988:54) என்று ஓர் ஆராய்ச்சியாளனின் தன்மையை வரையறுத்துக் காட்டினார் பாவாணர். அவரே இவ்வரையறைக்கு உரியவராகவும் திகழ்ந்தார்.

"கல்வி வேறு; ஆராய்ச்சி வேறு'' (1973: முக. 11) என வகைப்படுத்தி, நிறை கல்வியுடன் ஆராய்ச்சி மேற்கொண்டவர் பாவாணர். பாவாணரின் ஆய்வுகள் தனிப் பண்புடையன; மூலத்தன்மை பொருந்தியன; ஆய்வாளர்களை உருவாக்கும் திறமுடையன; ஆர்வத்தைத் தூண்டுவன. சொல்லாய்வு என்னும் புதுவகை ஆய்வினைத் தமிழுக்கு அறிமுகப்படுத்திய பெருமை இவருக்குண்டு.

தனித் தமிழ்க் கொள்கை, தன்மானவுணர்வு, வறுமையிலும் செம்மாப்பு, எதிர்ப்பிலும் மனம் குலையாத உறுதி, ஊக்கம் கிடைக்காத போதும் உறுதிகுன்றா மனநிலை போன்றவற்றில் தம் கொள்கைப் பிடிப்பினைக் காட்டியவர் பாவாணர். அதனாலன்றோ இவர் கொள்கைக்குன்றம் என்று போற்றப்பட்டார்.


கொள்கை குன்றிக் குலைந்துபோன குமுகாயத்தைத் தட்டி எழுப்பினார்; தமிழ்க் குமுகாயத்தின் தனிச் சிறப்பை எடுத்துக் காட்டினார்; மறைப்புண்டு கிடந்த தமிழின் ஏற்றத்தை வெளிச்சமிட்டுக் காட்டினார்.

கொள்கை சிலவிடங்களில் பற்றின் காரணமாக அமைவதுண்டு. அவ்வாறாயின் ஒரு பக்கம் சாயும் குற்றத்திற்கு ஆளாவதும் உண்டு. ஆய்பவனும் நானே! ஆய்ந்து கண்ட முடிபினை நடைமுறைப் படுத்துபவனும் நானே! என்று வீறுகொண்டு நின்றவர் பாவாணர்.

"இயற்கை, மென்மை, ஒழுங்கு, வளம் என்னும் திறங்களை ஒருங்கே கொண்டது தமிழ்'' (1967:முன்.12) எனக் காட்டினார். தம் ஆய்வு தமிழின் தொன்மையைச் செந்தமிழாகக் காட்டியது. தமிழைச் செந்தமிழாகவே நிலைநிறுத்தத் தாமே நடைமுறைப் படுத்தினார்; தமிழிலேயே பேச வேண்டும் என்று சூளிட்டுக் கொண்டார்; வாழ்நாள் இறுதிவரை கடைப்பிடித்தும் காட்டினார்.

**சொல்லாய்வுக் கிலக்கணம் வகுத்தவர்**

"மொழியாராய்ச்சியும், நடுநிலை, அஞ்சாமை, தன்னலமின்மை, மொழியறியவா என்னும் நாற்பண்பும்



உடையவரால் தான் வேர்ச்சொற்களைத் தொகுக்க இயலும்'' (1973: முக.11) என்று சொல்லாய்வாளருக்கு இலக்கணம் வகுத்தவர் பாவாணர். அவ் விலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவரும் பாவாணர்.

வாழ்நாள் முழுவதும் வேர்ச்சொல்லாராய்ச்சியில் மூழ்கிக் கிடந்தவர் பாவாணர். வேர்ச் சொல் காண்பதற்கு எளிதாகவும் மிகுதியாகவும் இடந்தரும் மொழி தமிழ் என்றும், இங்ஙனம் கூறும் நிலை வேறு எம்மொழிக்கும் இல்லை என்றும் உறுதிப்படுத்தித் தந்தவர் பாவாணர்.

''பிளேட்டோ (கி.மு. 427–345) சொற்களின் தோற்றத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, குறிப்பாகப் பொருளுக்கும் அதைக் குறிக்கும் சொல்லுக்கும் இடையே இயல்பாக, தேவையான அடிப்படையில் தொடர்பு உள்ளதா ? இல்லை மரபால் ஏற்பட்டதா ? என்பதைப் பற்றிச் சொல்லாடுவார். இச் சொல்லாடல் நூறு ஆண்டுகளுக்குமேல் அறிஞர் பெருமக்களுக்கிடையே நடந்துவந்தது.

ஒப்புமை காண்பவர்கள் மொழி இயல்பானது என்றும், அடிப்படையில் ஒழுங்கானது என்றும், ஏரண முறையில் அமைந்தது என்றும் நம்புகின்றனர். இதை மறுப்பவர் மொழியில் நிலவும் ஒழுங்கற்ற இடங்களை எடுத்துக் காட்டுவர்'' (புளூம்பீல்டு 1935:4)

பாவாணரது ஆய்வு தமிழ்மொழி இயல்பாகவும் சீராகவும் ஏரண அடிப்படையிலும் வளர்ந்து வந்துள்ள நிலையைக் காட்டிற்று. "தமிழ் இயன்மொழியாதலால், பெரும்பாற் சொற்களின் வேர்வடிவை அல்லது வேருருப்பை இன்றுந் தாங்கி நிற்கின்றது'' (1973: முக.9) என்று தமிழின் அடிநாதத்தை இனங்காட்டிய பெருமைக்குரியவர் பாவாணர்.

பொருள், கருத்து, சொல் ஆகிய மூன்றிற்குமிடையே காணும் தொடர்பு தற்செயலானது அன்று; காரணத்துடன் அமைந்தது என்பதே பாவாணரின் சொல்லாய்வு உணர்த்தும் அடிப்படைப் பொருள். "எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே'' எனச் சொன்ன தொல்காப்பியர் கருத்தை மெய்ப்பிக்கவே பாவாணரின் சொல்லாய்வு எழுந்தது.

"கருத்து, சொல் ஆகியவற்றைத் தனித்தனியாகப் பிரிப்பது இயலாத ஒன்று. இவை இரண்டனுள் ஒன்றன் துணைகொண்டே மற்றது நிலைகொள்கிறது. கிரேக்க மொழியில் லோகோசு (logos) (இலத்தீனில் oratio) என்னும் சொல் பேசும் ஆற்றல், கருத்து ஆகிய இரண்டையும் குறிப்பதை, இதை விளக்குவதற்கு எடுத்துக்காட்டுவர்.

மனித மனத்திலிருந்து வெளிப்படும் கருத்தில் முதல் புறவடிவமாகச் சொல் விளங்குகிறது. சொல்லே கருத்தின் நிரந்தரப் பேணிடமாகவும் விளங்குகிறது.'' (மாக்கசு முல்லர் 1888:முன்.X)

இக்காலமொழி சொல்வளம் மிக்கதாக இருந்தாலும் அவற்றை விளக்க மிகச் சிறிய அளவு வேர்ச்சொற்கள் போதுமானவை.



இன்றுள்ள சொற்கள் அனைத்தும் குறைந்த அளவிலான வேர்களினின்று வளர்ந்தன என்று காட்டுவதன் மூலம் சொற்கள் காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள நிலையை அறியலாம். சொல்வளங்கள் அனைத்தையும் உருவாக்கும் ஊற்றுகளாக வேர்கள் விளங்குகின்றன. தமிழ் பேசுவோர் மனத்திடைத் தோன்றும் எண்ணம் நேரிடையாகவோ மறைமுகமாகவோ இவ்வடிப்படை வேர்க்கருத்துகளுடன் தொடர்பு கொண்டிருக்கும் என்பது திண்ணம்.

"வேர்ச் சொற்கள் 1. ஆணிவேர்ச் சொற்கள் (Primary Roots), 2. பக்கவேர்ச் சொற்கள் (Secondary Roots), 3. சல்லிவேர்ச் சொற்கள் (Tertiary Roots) என மூவகைப்படும். வேர்ச்சொற்களுக்கு மூலமான விதைச்சொற்கள் என்பன உண்டு.'' (1944:முன்.10) என்பார் பாவாணர். இப்படி வேருக்கும் முந்தைய நிலையைத் தமிழ்போன்ற இயன்மொழியிலேயே தெளிவாகக் காண இயலும் என்று விளக்கினார் அவர்.

மொழி காலந்தோறும் மாறும் இயல்புடையது. பழைய இலக்கியங்களில் உள்ள மொழியின் மாற்றத்தை அதன் இலக்கியங்களுடன் ஒப்பிட்டுத் தெரிந்து கொள்ளலாம். காலந்தோறும் புதியதாக வரும் பொருளையும் கருத்தையும் குறிக்கப் புதுச்சொற்கள் பிறக்கின்றன. இப் புதுச்சொற்களும் அம்மொழியில் இருந்து வந்த பழைய சொற்களிலிருந்தே உருவாக்கப்படுகின்றன. இதற்கு "ஒரு கருத்தினின்று மற்றொரு கருத்துத் தோன்றும்போது, ஒரு சொல்லினின்று மற்றொரு சொல் பிறக்க இடமுண்டாகின்றது. கருத்து வேறுபடும்போது சொல்லும் வேறுபடல் வேண்டும். அன்றேல் பொருள் மயக்கம் உண்டாவதோடு மொழியும் வளர்ச்சியுறாது. இதுவே சொல்லாக்க அடிப்படை நெறிமுறை'' (1973:முக.9) என்று மொழியின் சொல் வளர்ச்சிக்கு நெறிமுறை வகுத்துக் காட்டியவர் பாவாணர். சொல்லாய்வையே வாழ்வாகக் கொண்டவர் பாவாணர்.

"மக்களைப் போன்றே சொற்களும் குடும்பங் குடும்பமாகவும் கூட்டங் கூட்டமாகவும் இயங்குகின்றன. குடும்பத்தினின்று குடும்பும், குடும்பினின்று குடியும், குடியினின்று குலமும், குலத்தினின்று இனமும், இனத்தினின்று வரணமும், மக்கள் மரபில் கிளைத்துப் பெருகுவது போலச் சொன்மரபிலும் கிளைத்துப் பெருகுகின்றன'' (1949:108) என்று சொன்மரபிற்குப் புதுவகை வரையறையிட்டு விளக்கியவர் பாவாணர்.

**தனித் தமிழ்க் கொள்கை, தன்மானவுணர்வு, வறுமையிலும் செம்மாப்பு, எதிர்ப்பிலும் மனம் குலையாத உறுதி, ஊக்கம் கிடைக்காத போதும் உறுதிகுன்றா மனநிலை போன்றவற்றில் தம் கொள்கைப் பிடிப்பினைக் காட்டியவர் பாவாணர்.**


### மொழியின் கருநிலையைக் காட்டியவர்

மொழியியல் அறிஞர்களுள் சிலர் மொழி ஒருமுறைதான் தோன்றியது; இன்றைய பல்வேறு மொழிகள் அந்த மூலமொழியிலிருந்து பரவுதலினால் உருவாகின என்னும் கருத்துடையவர்கள். மொழி பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு இடங்களில் தோன்றின என்னும் கருத்துடையோரும் உள்ளனர்.

பாவாணர் மொழி ஓரிடத்தில் தோன்றியது என்னும் கருத்துடையவர். மொழி தோன்றிய இடம் மாந்தன் தோன்றிய இடமான குமரிக்கண்டமே என்பது அவரது ஆய்வுத் துணிபு. இம்மூலமொழியிலிருந்தே உலகமொழிகள் அனைத்தும் உருவாயின என்பதும் அவரது ஆய்வு முடிபாகும்.

"அறிஞர்கள் மனிதக் குலத்தின் பழங்கால வரலாற்றில் மொழி உருவாகின என்றும் ஒரு மில்லியன் அல்லது இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவாகின என்றும் கணக்கிடுகின்றனர். நீண்ட காலத்திற்கு முந்தைய நிலையை அறிவியல் நோக்கோடு ஆராய வாய்ப்பில்லை அல்லது முடியாது எனக் கொள்ளத் தேவையில்லை என்றும் குறிப்பிடுவர்''. (மோரிசு சுவடேசு 1972:2)

மொழியியலாளர்கள் ஒப்பிட்டும் மீட்டுருவாக்கம் செய்தும் மொழியின் பழங்காலத் தன்மையைக்



கணக்கிடுவர். அவர்கள் மீட்டுருவாக்கம் செய்ததை ஒப்பிட்டுப் பார்க்கப் பதிந்து வைக்கப்பட்ட சான்று எதுவும் நமக்குக் கிடைப்பதில்லை. பாவாணர் பழந்தமிழ் வழக்குகள் பலவற்றை மீட்டுருவாக்கம் செய்து காட்டுவார்; அவற்றை ஒப்புநோக்கப் பல சான்றுகளைக் காட்டுவார்; குடியேற்றப் பாதுகாப்பு என்று இனமொழிகளில் நிலைபெற்றுள்ள நிலையைக் காட்டித் தெளிவுபடுத்துவார்.

பலர் மொழித்தோற்றம் கடந்த காலத்தில் நிகழ்ந்தது என்று குறித்துவிட்டு, அதன் வளர்ச்சியை விளக்காது சென்றுவிடுகின்றனர். ஆனால், பாவாணர் மொழிக் கருநிலையைக் காட்டி, அதனின்று வளர்ந்து வந்த நிலைகளைத் தெளிவுபடுத்தினார்.

**மொழிவளர்ச்சி**

"மொழியியலறிஞர் ஆட்டோ எசுபெர்சன் (1860–1943) ஆய்வு முடிபு மொழி பொதுத்தன்மையிலிருந்து எளிமைப்பட்டு வந்துள்ளது என்கிறது. இது இக்கால முடிபுக்கு எதிராக உள்ளது. இக்கால ஆய்வாளர்கள் ஆய்வுகள் மொழி எளிய ஓரசைச் சொற்களுடன் உருவாகிப் பின்னர் சிக்கலான தன்மைக்கு வளர்ந்து வந்துள்ளது என்கின்றனர். எசுபெர்சன் மொழி காலவோட்டத்தில் எளிமைப்பட்டு வந்திருப்பதைக் குறிப்பிடுகிறார். சில விதிவிலக்குகள் இருந்தாலும் மொழி எளிமைப்பட்டு வந்திருக்கிறது என்பது அவரது முடிபாகும். இதனை அவர் மொழிவளர்ச்சி என்றே குறிப்பிடுகிறார்'' (மோரிசு சுவடேசு 1972:3)

பாவாணரது சுட்டடிக் கொள்கை மொழி எளிய சுட்டுகளிலிருந்து தோன்றியதை விளக்குகிறது. சுட்டடிகளே தமிழின் சொல்வளத்தைப் பெருக்கிய விதைகள். இவற்றினின்று பிறந்தவை அல், இல், உல் என்னும் முளைகள். இம் முளைகள் குல், சுல், துல், நுல், முல் என்னும் ஆணிவேர்ச் சொற்களை உருவாக்கின. இவற்றினின்று மொழிக்குத் தேவையான பல்லாயிரக்கணக்கான சொற்கள் தோன்றின.

"பெரும்பாலும் ஒரு மொழியின் வேர்கள் அமைப்பில் ஒரே சீரான அமைப்பைக் கொண்டன'' (புளூம்பீல்டு 1935:243)

"மொழியின் பழங்கால வரலாற்றில் ஆணிவேர்ச் சொற்கள் மிகவும் இன்றியமையாதன'' (மாக்சு முல்லர் 1861:273)

"திராவிட மொழிகள் வடமொழிக்கு முந்தையதும் மிகப் பழமையானதுமான பல கூறுகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன அவற்றின் சுட்டுகள்'' (கால்டுவெல் 1857:422)

மிகப் பழமையானதாக விளங்கும் சுட்டடி களினின்றே மொழிவளர்ச்சியை வகுத்துக்காட்டிய சிறப்பு எண்ணி எண்ணிப் பாராட்டத்தக்கது.

மொழிவரலாற்றில் முதலில் தோன்றியவை எளிய சொற்களே. அவை காலவோட்டத்தில் திரிபு, சேர்க்கை போன்றவற்றால் சிக்கலானவையாக உருவாகியிருக்கக் கூடும். இத்தன்மையிலிருந்து மீண்டும் எளிமைப்படுவது இயல்பு. எசுபர்சனின் ஆய்வு மொழி தோன்றிய நிலையிலிருந்து கொள்ளப்படாததாலும் இடையிலிருந்து கொள்ளப்பட்டதாலும் மொழி சிக்கலிலிருந்து எளிமைப்பட்டு வந்திருக்கிறது என்கிறது. ஆயின் பாவாணர் ஆய்வு மொழி எளிய ஒசையிலிருந்து பிறந்ததைக் காட்டுகிறது.

"உண்மையில் ஒவ்வொரு சொல்லும் தொட்டிலில் சில காலமும் குழந்தை வளர்ப்பொலியாகச் சில காலமும் செலவழிக்க வேண்டும். அச் காலகட்டத்தில் நுண்பொருளுக்கும் உயிர்ப் பொருளுக்கும் குறைந்த அளவே கருத்தோட்டம் இருக்கும்'' (மாக்சு முல்லர் 1888:17)

**"ஒரு கருத்தினின்று மற்றொரு கருத்து தோன்றும்போது, ஒரு சொல்லினின்று மற்றொரு சொல் பிறக்க இடமுண்டாகின்றது. கருத்து வேறுபடும்போது சொல்லும் வேறுபடல் வேண்டும். அன்றேல் பொருள் மயக்கம் உண்டாவதோடு மொழியும் வளர்ச்சியுறாது. இதுவே சொல்லாக்க அடிப்படை நெறிமுறை" (1973:முக.9) என்று மொழியின் சொல் வளர்ச்சிக்கு நெறிமுறை வகுத்துக் காட்டியவர் பாவாணர். சொல்லாய்வையே வாழ்வாகக் கொண்டவர் பாவாணர்.**

சொற்களின்இயல்பு எளிமையான தோற்றம் கொண்டது. இதனை நுணுகி ஆராய்ந்து வெளிப் படுத்தினார் மொழிஞாயிறு.

**வேர் மூலம்**

பாவாணரது ஆய்வுநெறி, வழக்கிழந்த சொற்களை மீட்டுருவாக்கம் செய்வதற்கும், சுட்டடிகளிலிருந்து ஞாலமுதன்மொழி தோன்றி வளர்ந்திருப்பதைக் காட்டுவதற்கும், ஞாலமுதன்மொழி தமிழே என்று நிறுவுவதற்கும், அதன் தன்மையை உலக மொழிகளோடு ஒப்பிட்டு ஆராய்வதற்கும் முன்னுரிமை கொண்டு திகழ்கிறது. என்றாலும் இவை அனைத்திற்கும் அடிமனையாகத் திகழ்வது சொல்லுக்கு வேர்மூலம் காண்பது.

"ஒரு சொல்லிற்கு வேர்மூலம் காண முயல்வதற்கு முன் அச் சொல்லின் பழைய வடிவத்தையும், பயன்பாட்டையும், காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள நிலையையும் கண்டறிய வேண்டும். அச்சொல் தன் சொல்லாக (native origin) இருந்தால் இனமொழிகளில் அதன் வரலாற்றைக் காணவேண்டும் (கீற்று 1892:9)

சொல்லாராய்ச்சி மூலம் தமிழ்ச் சொற்களுக்கு வேர்மூலம் காண்பதில் வெற்றி கண்டவர் பாவாணர். சொல்லின் பழைய வடிவத்தை இலக்கிய வழக்கிலிருந்து காட்டும் திறனில் தன்னேரில்லாதவர்; வழக்கிழந்த சொற்களை மீட்டுருவாக்கம் செய்தில் வல்லவர்; இனமொழிகளிலிருந்து சொல் வளர்ச்சியைக் காட்டுவதைத் தவறாது கடைப்பிடித்தவர்; இருவகை வழக்கிலும் சொல் வழக்குப் பெற்ற தன்மையைக் காட்டி, சொல் காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள நிலையைக் காட்டுவதில் ஈடிணையற்றவர்.

பாவாணர் தமிழ்நாட்டின் பல இடங்களில் பணியாற்றினார். அதனால் அவருக்குத் தமிழ்நாட்டின் நாட்டுப்புற வழக்குகள், கிளைமொழி வழக்குகள், பழமொழிகள் என்று அனைத்தும் அத்துப்படியாய் இருந்தன. அவற்றை வேண்டுமிடங்களில் பயன்படுத்தும் பெற்றியராகவும் இருந்தார்.

"சொன்மூலம் காண்பது அறிவியல் முறையில் அமையவேண்டும். அது உன்னிப்பின் அடிப்படையில் அமையக்கூடாது. காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள சொன்னிலை உண்மைநிலையைக் காட்ட உதவும் வழியாகக் கொள்ள வேண்டும்'' (கீற்று 1892:6)

சொற்பிறப்பியல் வகைகளாகப் பத்தினைப் பட்டியல் இட்டுக் காட்டி அவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்கும் அளவிற்குச் சொற்பிறப்பியல் தன்மைகளை முழுமையாகவும் நுட்பமாகவும் ஆய்ந்தவர் பாவாணர்; சொல் காலந்தோறும் மாறிவந்துள்ள நிலையைச் சொற்றிரிபின் தன்மைகொண்டு விளங்கும் நுண்ணறிவுடையவர் பாவாணர். சொல்லின் உண்மைப் பொருளை நுணுகி ஆய்ந்து சொன்மூலங் காணவிழை வதையே அவரது சொல்லாய்வு தெளிவாகக் காட்டுகிறது.

"சொன்மூலம் காண்பது அறிவியல் முறையில் அமையவேண்டும். அது உன்னிப்பின் அடிப்படையில் அமையக் கூடாது. காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள சொன்னிலை உண்மைநிலையைக் காட்ட உதவும் வழியாகக் கொள்ள வேண்டும்" (கீற்று 1892:6)

"எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே'' (தொல். சொல். 155)

"ஒவ்வொரு சொல்லும் தன் சொந்த வரலாற்றைக் கொண்டிருக்கும்'' (எமனோ 1965:6)

"மொழியிலுள்ள அனைத்தும் பொருள் உணர்த்து வனவாக இருக்கின்றன.'' (மாக்கசுமுல்லர் 1861:43)

"மொழியிலுள்ளது மிகச் சிறியதாக, இன்றியமையாமை அற்றதாக இருந்தாலும் அது பொருளுடன் இருக்கும்போது இன்றியமை யாததாகிறது'' (புளூம்பீல்டு 1935:27)

சொல்லுக்கும் பொருளுக்கும் இயைந்த தொடர்பை ஆய்ந்து காட்டினார் பாவாணர். அதுவும் இயனமொழியாகிய தமிழிலேயே இவ் வியைபைச் செம்மையாகக் காட்ட இயலும் என்றும் விளக்கினார்.

"மொழி கருத்துகளின் வைப்பிடமாக இருப்பதால் உன்னதமான நிலம் என்று அழைக்கலாம்'' (மாக்கசு முல்லர் 1861:3)

தமிழ்மொழியின் கருத்துப் பொதிந்த சொற்களின் நிலையை விளக்கிய பெருமை பாவாணரையே சாரும்.

**தமிழின் தூய்மை**

பிறமொழிச் சொற்கள் கலப்பதால் தமிழின் இனிமை குறைகின்றது. நாளடைவில் தமிழில் கலந்து பிறமொழிச் சொற்கள் நிலைபெற்று அச் சொற்களுக்கு நேரே வழங்கி வந்த தமிழ்ச்சொற்கள் மறைந்து விடுகின்றன. தனித்தமிழில் பேசுதல் வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.


"தமிழ் திராவிட மொழிகளுள் பழங்காலந் தொட்டு வளமையுடன் வாழ்ந்து வரும் மொழி, தமிழ் தன்னிடத்துக் கொண்டுள்ள வட சொற்கள் அனைத்தையும் நீக்கி இயங்கும் திறம் கொண்டது; தமிழ் வடமொழித் துணையின்றித் தனித்து இயங்கவல்லது; தமிழ் வடமொழி . உதவியின்றி வளமைபெற்று வளர்ச்சி காணத்தக்கது''. (கால்டுவெல் 1857:45)

"தமிழிற் கலந்துள்ள வடசொற்கள் எல்லாம் அதைக் கெடுத்தற்கென்றே ஆரியரால் புகுத்தப் பட்டவையேயன்றித் தமிழறிஞர் அவற்றின் தேவையுணர்ந்து விரும்பிக் கடன் கொண்டவை அல்ல'' (1969:732) என்று வட சொற்கள் தமிழில் நுழைந்த வகையை விளக்கியவர் பாவாணர்.

தமிழ்ச் சொற்கள் பலவற்றை அயர்சொற்கள் என மயங்கிக் கிடந்த நிலை இருந்தது. அவற்றில் பெரும்பான்மை தமிழ்ச் சொற்களாய் இருக்கும் தன்மையை விளக்கிய பெருமை இவருக்கு உண்டு.

வடசொற்களுள் குறைந்த பக்கம் ஐந்திலிருபகுதி தமிழ்... நூற்றுக்கான வடசொற்கட்கு மூலம் அல்லது முதனிலை தமிழிலிருக்கிறது'' (1967:294) என்று வடசொற்கள் எனக் கொள்ளப்பட்டு வந்த சொற்கள் பல





தமிழாய் இருப்பதைக் காட்டினார் பாவாணர். வடசொல் பலவற்றிற்குத் தமிழில் மூலம் காட்டினார்.

கலைச்சொல் படைப்பதில் சொன்மை மாறாமல் படைத்துத் தமிழ்மொழிக்கு அழகு சேர்த்தவர்; கலைச்சொல் படைப்பதற்கு வழிவகையும் காட்டிச் சென்றவர்.

எத்துறைப் பொருள் குறித்தும் விளக்கக் கூடிய சொல்வளம் மிக்க மொழி தமிழ் என்பதை வெளிச்சமிட்டுக் காட்டியவர்; பாவாணர் பிறமொழிச் சொற்களை நீக்கி அவற்றிற்கிணையான தமிழ்ச் சொற்களை உலக வழக்கு, இலக்கிய வழக்கு ஆகியவற்றினின்று எடுத்தும் புதுச்சொல் புனைந்தும் தமிழுக்கு ஏற்றத்தைக் காட்டியவர்.

மொழித் தூய்மைக் கோட்பாடு தமிழ்மொழிக்கு மட்டுமே உரியதன்று. பிறமொழிச் சொற்களை நீக்கி மொழியைத் தூய்மைப்படுத்தும் முயற்சி பலவிடங்களில் நிகழ்ந்துள்ளது. மொழித்தூய்மை மொழியை வளப்படுத்துவதற்கு இன்றியமையாதது. மொழியின் தனித்தன்மை அழிந்துவிடும் என்னும் அச்சம், தங்கள் மொழி மீது கொண்டிருக்கும் பெருமித உணர்வு போன்ற காரணங்களினால் மொழித்தூய்மை முயற்சி கொள்ளப்பட்டுள்ளது.

ஆங்கில மொழியில் மொழித் தூய்மைக் கோட்பாடு கி.பி. 1913-இல் தொடங்கிய 'தூய ஆங்கிலக் கழகம்' என்னும் அமைப்புத் தோன்றக் காரணமாயிற்று. பிரெஞ்சு மொழியில் கி.பி. 1635இல் ஏற்படுத்தப்பட்ட பிரெஞ்சுக் கழகம் (Academic Francaise) மொழியைத் தூய்மைப் படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டது.

கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் முறையே கி.பி. 9, 17, 18ஆம் நூற்றாண்டுகளில் மொழித் தூய்மை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட தற்கான சான்றுகள் கிடைக்கின்றன. தூய கன்னடம் திருள் கன்னடம் அல்லது அச்ச கன்னடம் என்றும், தூய தெலுங்கு அச்ச தெலுங்கு என்றும் தூய மலையாளம் பச்ச மலையாளம் என்றும் வழங்கப்பட்டன. இதேபோல் இந்தி, சூர்ச்சரம் பஞ்சாபி, வங்கம், திரிபுரி, அரபி, சிங்களம், கொரியா, வியத்நாமி, சீனம், செருமானியம், உருசியா, துருக்கி, பல்கேரியா, இத்தாலி போன்ற மொழிகளிலும் பல்வேறு காலகட்டங்களில் மொழியைத் தூய்மையாக்கும் முயற்சிகள் நடந்துள்ளன.

புதுவகை

ஒரு குடும்ப மொழிகளுக்கிடையே உள்ள உறவுகளை ஆராய்வது ஒப்பியன் மொழியியல். தமிழைத் தமிழின மொழிகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து, தம் ஒப்பியன் மொழிநூல் திறமையைக் காட்டியவர் பாவாணர். இது அனைவரும் கடைப்பிடிக்கும் ஒரு நிலை. தமிழைப் பிறமொழிக் குடும்பங்களுடன் ஒப்பிட்டு ஆய்ந்தது ஒப்பியன் மொழியியல் அவர் கண்ட புதுநிலை.

தமிழ்ச்சொற்களுக்குத் திராவிட மொழிகளில் இனச்சொல் காட்டியது குடும்பமொழிகளுக்கிடையே இனச்சொல் காட்டும் நில. தமிழ்ச் சொற்களுக்கு உலக மொழிகள் பலவற்றினின்று இனச்சொல் காட்டியது பாவாணர் காட்டிய புதுநிலை.

ஒப்பியன் மொழியியல் ஒரு மொழியின் பல்வேறு நிலைகளையறியத் துணைசெய்வதோடு அதனோடு தொடர்புடைய மொழிகளின் இயல்பினை யறியவுந் துணை செய்கின்றது.

பாவாணர் உலகமொழிகள் பலவற்றினின்று சான்று காட்டி நிறுவும் திறமையுடையவர்; இதனைக் கொண்டு மொழிகளுக்கிடையே நிலவும் தொடர்பினை வகைப்படுத்திக் கருத்தியல் (theory) உருவாக்கும் வல்லமை படைத்தவர்.

உலகமொழிகளை இயன்மொழி (primitive language) என்றும், திரிமொழிகள் (derivative languages) என்றும் வகைப்படுத்தியவர். திரிமொழிகளிலிருந்து திரிந்த திரிபில் திரிமொழிகளை அடையாளம் காட்டியவர்.

## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி

தமிழை ஞால முதன்மொழி என நிறுவுவது பாவாணர் ஆய்வுப் பணியின் மைய நோக்கம். இக்கொள்கையை நிலைநாட்டத் தமிழின் வளமை, தொன்மை, ஆற்றல் முதலியவற்றைக் கொண்டு அதை நிறுவினார். தமிழின் வளமையை நிலைபெறச் செய்ய வேண்டும் என்னும் அளவிலேயே தனித்தமிழ் பேணுதல் என்னும் கருத்துடையவரானார்.

அகரமுதலி பொதுவாகச் சொற்பொருள் உணர்த்தும் பாங்கில் அமைக்கப்படுகிறது. சொற்பிறப்புத் தன்மையிலான சிறப்புவகை அகரமுதலி சொல்லின் வேர்மூலம் காட்டுவதோடு நிற்கும். ஆனால் பாவாணருக்குச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி அவரது ஆய்வுகள் அனைத்திற்கும் உறைவிடமாக விளங்கியது; தமிழ்ச் சொற்களைப் பிறமொழிச் சொற்களினின்று பிரித்துக்காட்டும் களமாகவும் விளங்கியது.

தமிழ் தென்னாட்டுப் பழங்குடி மொழி, குமரிநாட்டு மொழி, தமிழ் திராவிடத் தாய்மொழி, ஆரியத்திற்கு முந்தியமொழி, ஆரியத்திற்கு மூலமொழி, சொல்வளமிக்க தற்சார்பு மொழி, உலக முதன்மொழி, வேர்ப்பொருள் காட்டும் மொழி, உயர்தனிச்செம்மொழி, தூய மரபுமொழி, ஒப்புயர்வில்லாத் தனிமொழி என்னும் பொருள்களை அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டு உருவாக்கப்படுவதே செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி எனக் கருதினார் பாவாணர்.

இதிலும் பாவாணரின் தனித்தன்மை விளங்குகிறது. இதுவரை பிறர் எவரும் கடைப்பிடிக்காத ஒரு

*"தமிழ் திராவிட மொழிகளுள் பழங்காலந் தொட்டு வளமையுடன் வாழ்ந்து வரும் மொழி, தமிழ் தன்னிடத்துக் கொண்டுள்ள வட சொற்கள் அனைத்தையும் நீக்கி இயங்கும் திறம் கொண்டது; தமிழ் வடமொழித் துணையின்றித் தனித்து இயங்கவல்லது; தமிழ் வடமொழி உதவியின்றி வளமைபெற்று வளர்ச்சி காணத்தக்கது''.*
***(கால்டுவெல் 1857:45)***

''மொழியாராய்ச்சி, சொல்லாராய்ச்சி, இலக்கணத் தேர்ச்சி, சொற்றொகுப்பு ஆகிய நாற்றிறம் கொண்டவரால்தான் ஒரு அகரமுதலியைத் தொகுக்கவோ திருத்தவோ இயலும்'' (1968:67) என்றார் பாவாணர். இந் நாற்றிறங்களுடன் அகரமுதலிப் பணியில் ஈடுபட்டார். அகரமுதலியிலும் ஒரு புதுவகையை நிலைநாட்டினார்.

புதுவகையில் சிந்தித்தார். தமிழின் ஒட்டுமொத்த வளமைகள் அனைத்தையும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியில் இடம்பெறுமாறு செய்யவேண்டும் எனத் திட்டமிட்டார். சொற்பிறப்பியல் அகரமுதலிக்குக் கலைக்களஞ்சிய அமைப்பினைப் புகுத்தினார். இதற்குக் கலைக்களஞ்சியத்திற்கு இல்லாத ஒரு புதுப்பண்பு உண்டு. சொற்கள் அனைத்திலும் சிறியதும் பெரியதுமான விளக்கங்கள் இடம் பெறுவதால் எல்லா இடங்களிலும் சொற்பிறப்பு, விளக்கம் ஆகியன இடம்பெறச் செய்யலாம். கலைக்களஞ்சியச் செய்திகளையும் சொற்பிறப்பியல் அகரமுதலியில் இடம்பெற வழிகாட்டினார்.

''மொழியாராய்ச்சி, சொல்லாராய்ச்சி, இலக்கணத் தேர்ச்சி, சொற்றொகுப்பு ஆகிய நாற்றிறம் கொண்டவரால்தான் ஒரு அகரமுதலியைத் தொகுக்கவோ திருத்தவோ இயலும்'' (1968:67) என்றார் பாவாணர். இந் நாற்றிறங்களுடன் அகரமுதலிப் பணியில் ஈடுபட்டார். அகரமுதலியிலும் ஒரு புதுவகையை நிலைநாட்டினார்.

சொற்பிறப்பியல் சொல்லின் தோற்றம் அல்லது அதன் வரலாற்றைக் கண்டறிவதோடு அதன் மெய்யான தன்மையையும் விளக்குவது. பாவாணருக்குச் சொற்பிறப்பியல் சொற்களின் வரலாற்றைப் பற்றிய படிப்பாகவும் சொற்களின் மூலங்களைக் காண்பதற்கு உதவுவதாகவும் இருந்தது என்பது உண்மை. என்றாலும் அடிப்படையில் சொற்பிறப்பியல் மொழியின் இயல்பைக் காட்டுவதாக இருக்கிறது எனக் கொண்டார் பாவாணர்.

வரலாறு, மொழி வரலாறு, பண்பாடு, நாகரிகம், மொழிநூல், சொல்லாய்வு, கட்டுரை வரைவியல், தமிழ் மரபு போன்ற பல கோணங்களில் ஆய்வு மேற்கொண்டவர் பாவாணர். தம் ஆய்வின் மூலம் கண்டவை அனைத்தையும் பிறவற்றையும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியில் இடம்பெறச் செய்து முழுநிறைவான, தமிழின் ஒட்டுமொத்த நிலையைச் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலி வடிவில் காண முயன்றார் பாவாணர்.

## இசைத்தொண்டு

பாவாணர் இயற்றமிழ் தொண்டோடு இசைத்தமிழ் தொண்டும் புரிந்தார். இசைத்தமிழை முறையாக மன்னார்குடிக் கோபாலய்யரிடம் கற்றார்; கருவியிசை இசைக்கவும் பயின்றிருந்தார். இசைத் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். பாவாணரின் ஐந்து இசைப்பா நூல்கள் வெளியாகியுள்ளன. 1. சிறுவர் பாடல் திரட்டு, 2. கிறித்துவக் கீர்த்தனம், 3. செந்தமிழ்க் காஞ்சி, 4. இசைத் தமிழ்க்கலம்பகம், 5. இசையரங்கு இன்னிசைக் கோவை.

பாவாணர் தனிப்பாடல் தொகை 'பாவாணர் பாடல்கள்' என்னும் தலைப்பில் புலவர் இரா. இளங்குமரன் நூலாக வெளியிட்டுள்ளார்.

திருவள்ளுவரைக் குறித்தும் கலைச்சொல் குறித்தும் பாவாணர் இசைப் பாடல்கள் இயற்றியுள்ளார்.

பெயர்

பாவாணரது இயற்பெயர் தேவநேசன். அக்காலத்தில் நிலவிவந்த ஒரு நடைமுறையின்படி தமிழாசிரியரா வதற்கு இவர் தமிழ் கற்பிக்கத் தகுதியுடையவர் என்று ஒருவர் சான்று வழங்கினால் போதும். அவ்வடிப்படையிலேயே தமிழாசிரியர் பணியில் சேரலாம். பண்டிதர் மாசிலாமணி என்பவர் பாவாணருக்குச் சான்றிதழ் வழங்கும்போது அவரது கவிபாடுந் திறமையைக் குறிப்பிடும் வகையில் தேவநேசக் கவிவாணன் என்று குறிப்பிட்டுள்ளார். பின்னர் அனைத்திலும் மொழித்தூய்மை வேண்டும் என்று கொண்ட விருப்பத்தினால் 'தேவநேசன்', தேவநேயமாகவும் 'கவிவாணன்' பாவாணனாகவும் மாற்றப்பட்டன. அதிலும் பாவாணர் என்னும் பின்னொட்டுச் சிறப்புப் பெயரே நிலைத்து நின்றது.

'பா' இயற்றும் திறமையடிப்படையில் கிடைத்த சிறப்புப்பெயர் இன்று சொல்லாய்வு அறிஞர் என்னும் பொருளையே முதன்மையாகக் கொண்டு உலாவருகிறது. 'பா' த்திறம் வழிநிலைப் பொருளுக்குத் தள்ளப்பட்டது.

"தமிழிற் கலந்துள்ள வடசொற்கள் எல்லாம் அதைக் கெடுப்பதற்கென்றே புகுத்தப் பட்டவையேயன்றித் தமிழறிஞர் அவற்றின் தேவையுணர்ந்து விரும்பிக் கடன் கொண்டவை அல்ல'' (1969:732) என்று வட சொற்கள் தமிழில் நுழைந்த வகையை விளக்கியவர் பாவாணர்.

பாவாணர் கொள்கையைப் பரப்பும் வகையில் தனித்தமிழ் அன்பர்களும் பிறரும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர். அறிஞர்கள் பாவாணர் படைப்புகளைத் திறனாய்வு செய்து வருகின்றனர். இவரது மொழியாய்வு பற்றிய ஆய்வுகள் அறிஞர்களுக்கு மட்டும் உதவுவன. என்றாலும் அவரது மொழிக்கொள்கை பாமர மக்களையும் உள்ளடக்க முயல்கிறது.

பாவாணர் வாழ்க்கை வரலாறு அவர் வாழ்ந்த காலகட்டத்தில் நாடு, மொழி, இனம், தழுவிய ஓர் இயக்க வரலாற்றைக் காட்டுகிறது. தாமே தன் வரலாற்றை வரைய எண்ணியிருந்தார். ஆனால் அது நிறைவேறவில்லை.

உண்மை, உழைப்பு, துணிபு, ஒழுக்கம் முதலான தனிமாந்தப் பண்புகளையும் பாவாணர் படைப்புகள் தூண்டுவனவாக இருக்கின்றன.

பாவாணரின் பன்முகப் புலமையாழம் அளவிடற்கரியது. இவர் தமக்கெனத் தனித்த ஆராய்ச்சிப் போக்கை வகுத்துக் கொண்டு ஆராய்ந்தார். மேனாட்டு அறிஞர் அல்லது பிறர் கொள்கைகளைக் கண்ணை மூடிக்கொண்டு ஒப்புக்கொள்ள மாட்டார். தம் வாழ்நாள் முழுமையும் ஆராய்ச்சியில் தம்மை ஆழ்த்திக் கொண்டார். தமிழ் மொழி, வரலாறு, இனம், பண்பாடு தொடர்பான பலவற்றைத் தம் ஆய்வின் மூலம் தெளிவுபடுத்தினார். இவர் ஓர் வியக்கத்தக்க அறிஞர்.

**வெளியீடு:**

*தமிழ்மண் பதிப்பகம்,*

*சென்னை – 600 014.*

○ ○ ○



தமிழகத்தில் சுமார் 10 இலட்சம் பேருக்கும் மேற்பட்டவர்கள் ஊனமுற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்களிலே, பார்வையற்றவர்கள், செவித்திறன் குறையுடையோர், கை, கால் ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர், மூளைமுடக்கு வாதத்தினால் பாதிக்கப்பட்டோர், ஆட்டிசம் என்று அழைக்கப்படும் குறையுடையோர், பல்வகை ஊனத்தினால் பாதிப்படைந்தோர், தொழுநோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் என பலவகையாக உள்ளார்கள்.

இத்தகைய ஊனமுற்றவர்களுக்காக நமது மாநில அரசு தனியாக ஒரு துறையை ஆரம்பித்து, அவர்களின் மறுவாழ்வுக்காகப் பேருதவி ஆற்றி வருகிறது.

## ஊனமுற்றோர் தேவை அறிந்து அவர்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தீட்டவேண்டும்

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்

திருமதி **பா. வளர்மதி**

ஊனமுற்றவர்கள் பரிதாபத்துக்கு உரியவர்கள் அல்ல. அவர்களுக்கு சமுதாயத்தில் நிகர் அந்தஸ்து மற்றும் வாய்ப்புகள் வழங்கி, தன்னிச்சையாகச் செயல்படும் நிலை வளர வேண்டும் என்பதற்காகவே ஊனமுற்றோருக்கான சட்டம், 1995-இல் இயற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக தனி மாநில ஆணையர் நியமிக்கப்பட்டு மறு வாழ்வுப் பணிகளும் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ஊனமுற்றவர்கள் வாழ்வில், கல்வி, சமூகம், பொருளாதாரம், சுகாதாரம் ஆகிய நிலைகளில் முன்னேறுவதற்காக அரசு தீவிரமாக ஆய்வு செய்து பல்வேறு மறுவாழ்வுத் திட்டங்களை ஏற்படுத்தி உதவி வருகிறது.

இவ்வாறாக உதவி செய்யும் முன், ஊனமுற்றவர்களின் தேவையை அறிந்து அதற்கு ஏற்றவாறு திட்டமிட்டு பணிசெய்தல் மிகவும் ஏற்றதாகும். ஊனத்தின் தன்மைக்கும் அவர்களின் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் இத்தேவையானது மாறுபடுகிறது.

இதனை நாம் ஆய்வு செய்யும் பொழுது, மூளை பாதிக்கப்பட்டு, மனவளர்ச்சி குறைந்த ஊனமுற்றவர்களுக்கு அடிப்படையான பாதுகாப்பு மிகவும் அவசியமாகிறது. தாம் யார் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் யார் என்றே அறியாதவர்களுக்குப் பாதுகாவலாக அவர்களைப் பெற்ற பெற்றோர்கள் இருப்பார்கள். அவர்களின் வாழ்நாளுக்குப் பின் யார்? என்பதுதான் இன்றைய கேள்விக்குறி?





⑤

இதற்கு விடைக்காணத்தான் இன்றைய கருத்தரங்கில் தேசிய அறக்கட்டளை மத்திய அரசினால் உருவாக்கப்பட்டு, அதன் கீழ் வாரியம் அமைக்கப்பட்டு, அதன் தலைவராக திருமதி அலோக்க குஹா அவர்கள் கலந்து கொள்ள வந்துள்ளார்கள். இதற்கான வழிமுறைகளை விரிவான முறையில் நம்மிடையே எடுத்துக் கூறுவார்கள்.

ஊனமுற்றோருக்காக சேவை செய்யும் வல்லுநர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தைச் சார்ந்த சேவையுள்ளம் கொண்ட சமூகப் பணியாளர்கள் இங்கு வந்துள்ளார்கள். ஊனமுற்றோரை எவ்வாறு பாதுகாப்பது? அவர்களைப் பாதுகாப்பதில் உள்ள பொறுப்புக்தளையும், அனுபவத்தினையும் பகிர்ந்துக் கொள்ள பெற்றோர்கள் வந்துள்ளார்கள்.

ஊனமுற்றோருக்கான சிறந்த திட்டங்கள் செயல்பட எவ்வாறு அரசுத் துறைகளும், தொண்டு நிறுவனங்களும், ஊனமுற்றோரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கவும், ஊனத்தினை தடுத்திடும் வழிமுறைகளை நம்மிடையே பகிர்ந்து கொள்ளவும், நீலகிரி மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியர், திருமதி சுப்ரியா சாஹு" அவர்களும், டானிடா திட்டத் துறையிலிருந்து திரு. எம்.பி. விஜயகுமார் அவர்களும் கலந்து கொண்டுள்ளார்கள்.

தேசிய அறக்கட்டளை உருவாக்கப்பட்டதன் நோக்கத்தினை நிறைவேற்றுவதில் முக்கியப் பணி வகுக்கும் உள்ளூர் மட்டக் குழுவின் தலைவர்களாக மாவட்ட ஆட்சியர்களும் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த இதர உறுப்பினர்களும் கலந்து கொண்டு இக்கருத்தரங்கினை சிறப்பிக்க வந்துள்ளது மேலும் இதன் வெற்றிக்கு அறிகுறியாகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தேசிய் அறக்கட்டளையின் திட்டங்கள் நமது தமிழகத்திற்கு பெரிதும் பயன்படும் வகையில் அதிக அளவில் வந்து சேரும் என்ற நம்பிக்கை நமக்கு அதிகம் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் கடந்த 15 ஆண்டுகளாக பணிபுரிந்த ஒரு பெண்மணி திருமதி அலோக்கா குஹா இதன் தலைவராக அமர்ந்திருப்பது இதற்குச் சான்றாகும்.


நமது மாநிலத்தில் தேசிய அறக்கட்டளை சட்டம் எனப்படும் சட்டத்தினை நிறைவேற்றும் வகையில் முதல் கட்டமாக உள்ளூர் மட்டக் குழுக்கள் மாவட்டந்தோறும் தமிழகத்தில் அமைக்கப் பட்டுள்ளன. இக்குழுக்களை அங்கீகரிக்க தேசிய அறக்கட்டளைக்கு கருத்துருக்களும் அனுப்பப் பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக நடைபெறும் இக் கருத்தரங்கில், ஊனமுற்றோருக்கான உதவிகள் மத்திய அரசிடமிருந்து எவ்வாறு பெறுவது? ஊனமுற்றோரின் குறைகள் என்ன? அவற்றை எவ்வாறு சீர் செய்வது? ஊனமுற்றோரை பெற்றோருக்கு அடுத்தபடியாக யார் காப்பாற்றுவது? அவர்களது சொத்தை யார் பாதுகாப்பது? போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு செய்யும் செயல் திட்டங்களை இக்கருத்தரங்கிலே கலந்துரையாடல் செய்து முடிவு செய்யப்பட வேண்டும். இவை பற்றிய செய்திகள், கிராமப்புறங்களுக்கு சென்றடைய வேண்டும். மத்திய அரசின் திட்டங்களை தொண்டு நிறுவனங்கள் நல்ல முறையில் பயன்படுத்தி ஊனமுற்றோருக்கு உதவ வேண்டும்.

இக்கருத்தரங்கில் பங்கேற்றுள்ள அரசு அலுவலர்களும், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும், ஊனமுற்றோர் மறுவாழ்வு நிபுணர்களும், கடும் ஊனமுற்றோரின் பெற்றோர்களும் தங்களது திறன், அனுபவம் ஆகியவற்றை உபயோகித்து, இக்கருத்தரங்கிற்குத் தேவையான கருத்துக்களை எடுத்தியம்பி, அதன் மூலம் ஊனமுற்றோருக்கு நல்ல பலன்களை ஏற்படுத்தித் தருமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் தரும் ஆலோசனைகளை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த மாநில அரசு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கும் என்று உறுதி கூறுகிறேன்.

ஊனமுற்றோருக்கு நிகழும் அநீதிகளிடமிருந்து காப்பாற்ற நாம் எல்லோரும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இக்கருத்தரங்கின் மூலமாக தேசிய அறக்கட்டளையின் சிறந்த நோக்கங்கள் நிறைவேறிட எனது வாழ்த்தினை தெரிவித்து இக்கருத்தரங்கினை துவக்கி வைத்து வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

*– ஊனமுற்றோர்களின் எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கும் நோக்குடன் செயல்படும் ஊனமுற்றோருக்கான தேசிய அறக்கட்டளை கருத்தரங்கில் சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.*






# புவியியலமைப்பு

இந்திய தீபகற்பத்தின் தென்கோடியில் தெற்கு வடக்காக அட்ச ரேகை 8.5° – 13.35° இடையிலும்; கிழக்கு மேற்காக தீர்க்கரேகை 16.15° – 80.20° இடையிலும் தமிழ்நாட்டின் இருப்பு அமைந்துள்ளது.

வடக்கே ஆந்திரமும், வடமேற்கில் கர்நாடகமும், மேற்கே கேரளமும், தெற்கில் இந்தியப் பெருங்கடலும், கிழக்கில் வங்காள விரிகுடாவும் இதன் எல்லைகள். இந்தியாவைச் சுற்றியுள்ள வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல், அரபிக்கடல் என்னும் மூன்று கடல்களும் தொட்டுச்செல்லும் ஒரே மாநிலம் தமிழகமே.



தமிழக மலைகள்

முற்காலத்தில் நிலவளத்தை ஆதாரமாகக் கொண்டும், இயற்கைச் சூழலுக்கு ஏற்றவாறும் நிலம் நான்கு பகுதிகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. அவை குறிஞ்சி நிலப்பகுதி, முல்லை நிலப்பகுதி, மருத நிலப்பகுதி, நெய்தல் நிலப்பகுதி என்பவை யாகும். ஐந்தாவது அமைப்பான பாலை நிலப்பகுதி தமிழகத்தில் தனியாய் இல்லை. அதனால் தமிழகத்தில் நானிலப் பகுப்பே வழங்கப்பெற்று வந்தது.

குன்றுகளும், மலைகளும் அவற்றைச் சார்ந்த இடங்களும் குறிஞ்சி நிலப்பகுதியாகும். காடுகள், அவற்றைச் சார்ந்த இடங்கள் முல்லை நிலப்பகுதி. புன்செய்ப் பயிர்கள் விளையும் வளமான நிலப்பகுதி இது. இயல்பாகவே நீர்வளமும் நிலவளமும் நிறைந்த பகுதியை மருத நிலப்பகுதி என வகுத்தனர். வயல்களும் அவற்றைச் சார்ந்த இடங்களும் மருத நிலப்பகுதியாகும். கடற்கரையோர நிலப்பகுதி நெய்தல் நிலம் எனப்பட்டது. கடலும், அதனைச் சார்ந்த இடங்களும் நெய்தல் நிலப் பகுதியாம். காலம் செல்லச் செல்ல நால்வகை நிலப்பகுப்புகள் மாறி, நீர்வளம் நிறைந்த நிலப் பகுதியை நன்செய்நிலப்பகுதி என்றும், நீர்வளம் குறைந்த நிலப் பகுதியைப் புன்செய் நிலப்பகுதி என்றும் இரு பிரிவுகளாகக் கொண்டனர்.


பொதுவாக ஒரு நாட்டில் உள்ள மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் ஆகியவற்றின் அமைப்பையே இயற்கையமைப்பு என்பர். இவ்வகையில் தமிழக நில அமைப்பை மலைப்பகுதிகள் என்றும், சமவெளிப்பகுதிகள் என்றும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவ்விருபெரும் பிரிவுகளுள் மலைப்பகுதிகள் தமிழகத்தின் மேற்குப் பகுதியிலும், சமவெளிப் பகுதிகள் கிழக்குப் பகுதியிலும் அமைந்துள்ளன.

## மேற்கு மலைப்பகுதிகள்

தமிழக நிலப்பரப்பின் வடபகுதி அகன்றும் தென்பகுதி குறுகியும் அமைந்துள்ளன. தென் இந்தியாவின் பெரும்பகுதியில் தக்காணப் பீடபூமி அமைந்துள்ளது. இப்பீடபூமியின் மேற்கு விளிம்பு மேற்குத் தொடர்ச்சி மலைகளாகவும், கிழக்கு விளிம்பு கிழக்குத் தொடர்ச்சி மலைகளாகவும் விளங்குகின்றன. மேற்கு மலைகள் தொடர்ச்சியானவை. உயரம் கூடியவை. கிழக்குத் தொடர்ச்சி மலைகள் இடையே விட்டுவிட்டும், குறைந்த உயரம் உடையனவாகவும் இருக்கின்றன.

இவ்விரு வகை மலைகளும் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் சந்திக்கின்றன. இவை சந்திக்கும் இடத்தில்தான் நீலகிரி மலைகள் அமைந்துள்ளன. நீலகிரிக்குத் தெற்கே மேற்கு மலைத்தொடர், மேலும் தொடர்ந்து குமரிமுனை வரை செல்கின்றது. நீலகிரி மலைகளின் உயர்ந்த சிகரம் தொட்டபெட்டா. இதன் சராசரி உயரம் 2,677 மீ ஆகும்.

மேற்கு மலைத்தொடரில் நீலகிரிக்குத் தெற்கே சுமார் 24 கி.மீ. தூரம் இடைவெளி உள்ளது. இதுவே பாலக்காட்டுக் கணவாய். இக்கணவாய்க்குத் தெற்கிலும், மேற்கிலும்



மலைத்தொடர் தொடர்ந்து செல்கின்றது. இது வெவ்வேறு பகுதிகளுக்குச் செல்லும்போது வெவ்வேறு பெயர்களால் வழங்கப்படுகின்றது. நீலகிரி மலைகளுக்குத் தெற்கே ஆனைமலைகள் அமைந்துள்ளன.

ஆனைமலைக்குத் தெற்கே பழனி மலைகளும், அவற்றின் கிழக்குப் பகுதியில் கொடைக்கானல் மலைகளும் உள்ளன. இங்கேயே கொடைக்கானல் இருக்கின்றது. பழனிமலைக்குத் தெற்கே ஏலமலையும், அகத்தியமலையும் அமைந்துள்ளன.

அகத்தியமலையில் ஆரியன்காவுக் கணவாய், ஆராம்பளிக் கணவாய் என்னும் இரு கணவாய்கள் உள்ளன. மேற்கு மலைத் தொடரில் அடர்ந்த காடுகள் உள்ளன. இக்காடுகளில் தேக்கு, நூக்கு, மூங்கில் போன்ற மரங்கள் அதிகம் உள்ளன. மலைச்சரிவுகளில் ஏலம், தேயிலை, பாக்கு தோட்டங்கள் உள்ளன.

கிழக்கு மலைத்தொடர் நீலகிரியில் முடிவடைகின்றது. இம்மலைத் தொடரில் உள்ள மலைகள் விட்டுவிட்டு அமைந்துள்ளன. இவை 300 முதல் 1000 மீ. வரை உயரமுள்ளவை: இவற்றுள் சவ்வாதுமலை, சேர்வராயன்மலை, கல்ராயன் மலை, கொல்லி மலை, பச்சைமலை, கஞ்சமலை போன்றவை முக்கியமானவை. சேர்வராயன் மலை சேலம் மாவட்டத்தில் உள்ளது. இதில் ஏற்காடு என்னும் மலை வாழிடம் உள்ளது.

### கிழக்கு சமவெளிப் பகுதிகள்

கிழக்குச் சமவெளிப் பகுதியை கர்நாடகச் சமவெளி என்றும், கடற்கரைப் பகுதி சோழமண்டலக்கரை என்றும் இரு பிரிவாக பகுக்கப்படுகிறது.

கர்நாடகச் சமவெளியை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை : காவிரி பாயும் சமவெளி, வைகையும், தாமிரபரணியும் பாயும் சமவெளி, வடக்கே உள்ள தாழ் நிலங்கள் என்பவையாகும். இச்சமவெளியில் கிழக்கே மலைத்தொடரைச் சார்ந்த சிறு குன்றுகளும் மலைகளும் உள்ளன.

காவிரிபாயும் சமவெளிப் பகுதியில் தருமபுரி, சேலம், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் உள்ளன. வைகை, தாமிரபரணி பாயும் சமவெளிப் பகுதியில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் உள்ளன.

வடக்கில் உள்ள தாழ்நிலப் பகுதிகள் என்பவை, காவிரி பாயும் சமவெளிக்கும் கடற்கரைக்கும் இடைப்பட்ட தாழ்நிலங்களாகும். இத்தாழ்நிலப் பகுதியில் சென்னை, செங்கற்பட்டு, கடலூர் போன்ற மாவட்டங்கள் உள்ளன.

### காலநிலை

வருடம் முழுமையும் மிதமான கால நிலையே காணப்படுகிறது. வெப்பநிலை 18 டிகிரி செல்சியஸிற்கும் 43 டிகிரி செல்சியஸிற்கும் இடையிலேயே உள்ளது. தமிழகத்தில் பெய்யும் பெரும்பகுதி மழையும் வடகிழக்குப் பருவக்காற்றினாலேயே ஏற்படுகிறது. அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக் காற்று வீசுகிறது. தென்மேற்குப் பருவக் காற்று மேற்குத் தொடர்ச்சி மலைகளால் தடுக்கப்பட்டு விடுவதால் இதனால் பெரும் பயன் ஏதும் இல்லை. மாநிலத்தின் வருட சராசரி மழையளவு 925.2 மி.மீ.

*நன்றி : மனோரமா இயர் புக் 2001*



# அறிவியல் தமிழ் - தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கம்



தமிழக அரசின் சார்பில் 'அறிவியல் தமிழ்–தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கம்' 5.1.2002 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழாக் கலையரங்கத்தில் தொடங்கியது. தொடர்ந்து ஐந்து அமர்வுகள் நடைபெற்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடக்கவுரையாற்றி, தொடங்கிவைத்தார்கள். நிறைவு விழாப் பேருரையும் ஆற்றினார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர்கள், அறிஞர் பெருமக்கள், சான்றோர்கள் ஆகியோர் உரையாற்றினர்.

### சமயத் துறையில் தமிழ்

தமிழும் சமயமும் பின்னிப் பிணைந்தவை. சமய இலக்கியங்கள் இல்லாமல் தமிழை மதிப்பிடுவது இயலாததாகும். அதுமட்டுமல்லாமல் உலகளாவிய நிலையில் உயர்ந்தோங்கிய மொழிகளோடு தமிழை ஒப்பிட்டு நோக்கிய அறிஞர்கள் எல்லாம் தமிழை 'இறை மொழி' (Devotional Language) எனக் குறிப்பிட்டார்கள்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

– என்பது திருமூலர் வாக்கு. இறை உணர்வு என்பதையே தமிழ் உணர்வாகக் கருதியவர்கள் நம் முன்னோர்கள். சைவ, வைணவ இலக்கியங்களால் நிரம்பி வழியும் தமிழின் சுவையை எவ்வளவு எடுத்தியம்பினாலும் போதாது.

சமயத்துறைக்கும் தமிழுக்கும் நிறைய தொடர்பு உள்ளதால், இதனை மேலும் சிந்திக்கும் நோக்கில் 'சமயத் துறையில் தமிழ்' எனும் அமர்வு கருத்தரங்க முதல் அமர்வாக அமைந்தது, இதில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் தலைமை ஏற்றார்.

மதுரை ஆதீனம் 292–ஆவது குருமகா சந்நிதானம், திருப்பனந்தாள் காசிமடம் சுவாமிகள், பேரூர் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம் 23வது குருமகா சந்நிதானம், முனைவர் வை.இரத்தினசபாபதி, முனைவர் தெ.ஞானசுந்தரம், திரு.மு.தெ.ப. சத்தியவேல் முருகனார், திரு.நடனகாசிநாதன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

### 'மருத்துவத் துறையில் தமிழ்'

மக்களின் அன்றாட வாழ்வோடு பின்னிப் பிணைந்த துறை மருத்துவத் துறை ஆகும். நமது தமிழ் மொழியில்

மருத்துவத்துறை தொடர்பான குறிப்புகளும் செய்திகளும் நிறைய இடம் பெற்றுள்ளன. திருமூலர் திருமந்திரம், சித்தர் பாடல்கள் முதலியவற்றில் மருத்துவம் பற்றிய செய்திகளைக் காண்கிறோம்.


இன்றைய நாளில் 'மருத்துவத் துறையில் தமிழ்' இடம் பெற வேண்டியது இன்றியமையாதது. இதுபற்றி ஆய்ந்து பார்த்திடவே 'மருத்துவத் துறையில் தமிழ்' எனும் அமர்வு நடைபெற்றது. இந்த அமர்வில் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் தலைமையுரை ஆற்றினார். மருத்துவர் வே.ப.நாராயணன், மருத்துவர் ச.டொமினிக் சுவாமிநாதன், மருத்துவர் சு.நரேந்திரன், மருத்துவர் மு.குமரேசன், சித்த மருத்துவர் பிரேமா ஆகியோர் கருத்துரையாற்றினர்.

## வேளாண்மைத் துறையில் தமிழ்

நம் இந்திய நாட்டின் – தமிழ் நாட்டின் தலையாய தொழில் வேளாண்மை. தமிழகத்தில் வேளாண்மைத் தொழில் தொன்றுதொட்ட தொழில் என்பதை 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. சங்க இலக்கியங்களில் தாவரங்கள் பலவும், விலங்குகள் பலவும், தொழில்கள் பலவும் இடம் பெற்றுள்ளன. உலகப் பொதுமறையாம் திருக்குறளில் உழவுத்தொழில் உலகு தொழும் தொழிலாக உயர்த்திக் கூறப்பட்டுள்ளது. இத்தகு வேளாண்மைத் துறையில் இன்று அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றங்களால் வியத்தகு வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. இந்த வளர்ச்சிகள் யாவும் நமது தமிழ் மொழியில் இடம் பெற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதற்கு உதவும் வகையில் தான் "வேளாண்மைத் துறையில் தமிழ்'' எனும் அமர்வு நடைபெற்றது. இந்த அமர்வில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தலைமையுரை ஆற்றினார். வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் கண்ணையன், கால்நடைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் கதிர்வேல், முனைவர் அருணா இராசகோபாலன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

## சட்டத் துறையில் தமிழ்

நம்நாடு ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் கூட அவர்கள் மொழித்தளையிலிருந்து நாம் முற்றிலுமாக நம்மை விடுவித்துக் கொள்ளவில்லை.



அடிப்படைக் கல்வி கூட இல்லாமல் அல்லற்படுகின்ற கோடிக்கணக்கான மக்கள் உள்ள நம் நாட்டில் சட்டங்கள் அனைத்தும் ஆங்கில மொழியிலேயே அமைந்துள்ளன.

இன்றைய நிலையில், தமிழகத்தில் உயர்நீதிமன்றம் நீங்கலாகக் கீழமைந்துள்ள நீதிமன்றங்கள் அனைத்திலும் தமிழே தீர்ப்பு மொழி எனச் சட்டம் இருக்கிறது.

## பொறியியல் துறையில் தமிழ்


பொறியியல் கல்வியைத் தமிழில் அளிப்பதற்குத் தடையாக முதலில் கருதப்படுவது தேவையான நூல்கள் தமிழில் இல்லை என்பதே. தமிழில் இத்துறை நூல்கள் பல வெளிவரவும், தமிழில் இக்கல்வியும் வளரவும் சட்டக்கல்வி, கலை, அறிவியல், பொறியியல் துறைகளில் தமிழ் கருத்தரங்க அமர்வு நடைபெற்றது.

மாண்புமிகு நிதி மற்றும் சட்டத்துறை அமைச்சர் தலைமையுரை ஆற்றினார். முனைவர் வா.செ.குழந்தைசாமி, முனைவர் பொற்கோ, முனைவர் ச.முத்துக்குமரன், முனைவர் இ.சுந்தரமூர்த்தி, முனைவர் டி.ஆதிகேசன், முனைவர் அ.இளங்கோவன், முனைவர் அ.ஆறுமுகம், முனைவர் மு.ஆறுமுகம் ஆகியோர் கருத்துரை யாற்றினார்கள்.

## ஆட்சித்துறையில் தமிழ்

நமது தமிழ் மொழி தன்னேரிலாத மொழி. இலக்கண நலமும் இலக்கிய வளமும் நிறைந்த மொழி. அரசியல், சமூகம், பண்பாடு, கலை, நாகரிகம் என அனைத்துத் துறைகளிலும் நீக்கமற நிறைந்த மொழி. வரலாறு தெரிந்த காலம் முதல் ஆட்சிகள் பல மாறினாலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆட்சிமொழியாகக் கோலோச்சிய மொழி. ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின் ஆட்சித்துறையில் தமிழின் செல்வாக்கு குறையத் தொடங்கியது. இந்த அவல நிலையைப் போக்குதற்கு 1956–ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் தமிழகத்தின் ஆட்சிமொழி தமிழ் என வரையறுத்தது. இதனை நிறைவேற்றத் தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்பல; வெளியிட்ட ஆணைகள் பல. இவற்றால் நமது தமிழ்மொழி இன்றைக்கு அரசு அலுவலகங்களில் ஆட்சி செலுத்தும் சீரிய நிலையைப் பெற்றுள்ளது. இதனை மேலும் முழுமையாகவும், செம்மையாகவும், செயற்படுத்த வேண்டியது நமது கடமையாகும். இதற்கு உதவும் வகையில் தான் 'ஆட்சித் தமிழ்' எனும் இவ்வமர்வு மற்றும் நிறைவு விழா மாலை 5 மணிக்கு நடைபெற்றது. இதில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிறைவுப் பேருரை ஆற்றினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தலைமையுரையாற்றினார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து, திரு.கி.வீரமணி, புலவர் புலமைப்பித்தன், முனைவர் மு.தமிழ்க்குடிமகன், திரு.பெ.சீனிவாசன், உவமைக் கவிஞர் சுரதா, திரு.கோ.கலிவரதன், திரு.கா.செகவீரபாண்டியன், பேராசிரியர் காதர்மொய்தீன், திரு செ.கு.தமிழரசன், திரு.கா.சேக்தாவூது ஆகியோர் சிறப்புரையாற்றிப் பெருமைப்படுத்தினார்கள்.





## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களின் தொடக்கவுரை :

"தமிழக அரசின் சார்பில் இன்று நடைபெறும் 'அறிவியல் தமிழ் – தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கத்தின்' தொடக்கவிழா இப்போது மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் கருத்தரங்கம் ஐந்து அமர்வுகளாக நடைபெற்று இன்று மாலை 5 மணிக்கு நிறைவுவிழா நடைபெற உள்ளது. இத்தகு சிறப்புமிக்க கருத்தரங்கத்தினைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றவும், நிறைவு விழாப் பேருரையாற்றவும் எனக்கு இந்நல்வாய்ப்பு கிடைத்ததற்கு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தப் பெருவிழா தமிழுக்கு ஒரு திருவிழா ஆகும். நமது தமிழ் மொழி மிகவும் தொன்மையான மொழி. இலக்கண இலக்கிய வளம் நிறைந்த மொழி. தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம் என இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தலைசிறந்த நூல்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் கலை, பண்பாடு, நாகரிகம், வரலாறு, வாழ்க்கைமுறை ஆகியவற்றை இந்நூல்களின் வழியாக அறிகிறோம். பின்னர் காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், உரை நூல்கள், கவிதை, சிறுகதை, புதினம், புதுக்கவிதை என்று காலந்தோறும் தமிழ் வளர்ந்து வந்துள்ளது. இப்போது பல்வேறு துறைகளில் வளர்ந்து வருகிறது. தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடும் தமிழ்க் கவிஞர்கள், அறிஞர்கள், அறிவியல் துறைகளைச் சார்ந்த வல்லுநர்கள் அனைவரும் பாராட்டுதலுக்கு உரியவர்கள் ஆவார்கள்.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''

என்று தேசியக்கவி பாரதியாரும்,

"கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்''
என்று பாவேந்தர் பாரதிதாசனும் பாடியுள்ளனர்.

தாய்மொழி வளர்ச்சியடையாத நாட்டில், அம்மொழி பேசும் சமுதாயம் வளர்ச்சியடைய முடியாது. மொழியானது ஒவ்வொரு காலகட்டத்திலும் மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப, மாற்றம் பெற்றாக வேண்டும். மாற்றம் பெறாத எந்த மொழியும் வளர்ச்சியடைவது கடினம். இந்த வகையில் நமது ஒப்பற்ற தமிழ் மொழி, காலந்தோறும் எதிர் நீச்சல் போட்டு வளர்ந்து வந்திருக்கிறது. கலை, இலக்கியம், பண்பாடு, கவிதை, சிறுகதை, புதினம், புதுக்கவிதை, உரைநடை என ஒவ்வொரு காலகட்டத்திலும் தேவையான மாற்றங்களுடன், பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. சமய இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், புரட்சிக் காப்பியங்கள், நவீன இலக்கியம் முதலிய பல்வேறு பிரிவுகளில் சிறப்பானதொரு இடத்தை நம் தமிழ் மொழி பெற்றிருக்கிறது. ஆனாலும், தமிழில் இல்லாதது எதுவும் இல்லை என்ற நம்பிக்கையுடனும் பெருமையுடனும் நாம் வாளாயிருந்துவிட முடியாது. காரணம் இன்றைய உலகம், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் ஒவ்வொரு நாளும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு துறையிலும் புதிய புதிய கண்டுபிடிப்புகள் வந்த வண்ணமுள்ளன. அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிகள் மனித வாழ்க்கையை மேம்படுத்தும் காரணிகளாக அமைந்துள்ளன. இத்தகைய அறிவியல் முன்னேற்றத்தை நம் தமிழ் மொழி உள்வாங்கிக் கொண்டு வளமடைவதுடன் நம்மையும் வளப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. அப்போது தான், தமிழ்மொழி, உலக மொழிகளுடன் ஒன்றிணைத்துப் பேசப்படும் மொழியாகவும், எதிர்காலச் சமுதாயத்திற்கு வழிகாட்டக் கூடிய மொழியாகவும் திகழ முடியும். எனவே தான் தமிழக அரசு பல்வேறு தமிழ் வளர்ச்சிப் பணிகளோடு அறிவியல் – தமிழ் வளர்ச்சியில் அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழகத்தின் முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மதுரையில் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்புற நடத்தித் தமிழுக்குப் பெருமை சேர்த்தார்கள். மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை நிறுவியும், தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தியும் அவர்கள் தமிழுக்கு ஆற்றியுள்ள பணிகள் காலத்தை வென்று என்றும் நிற்பனவாகும். தமிழக அரசு அறிவியல்–தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. அப்பணிகளிலே ஒன்றாகத் தான் "அறிவியல் தமிழ் – தமிழ் பண்பாட்டுக் கருத்தரங்கம்'' இப்போது மிகச் சிறப்பாக நடக்கிறது.

இந்த நேரத்தில், ஒரு செய்தியைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழ் மொழி என்பது, யாரோ ஒருவருக்குச் சொந்தமானது மட்டுமல்ல; தமிழ் மக்கள் அனைவரின் உயிர் மொழியாகும். இத்தகைய தமிழ் மொழியை வளர்த்தெடுக்கும் பொறுப்பு அரசுக்கும், தமிழ்க் கவிஞர்களுக்கும் மட்டுமே உடையதல்ல. அவர்களோடு வளர்ந்து வரும் அனைத்து அறிவியல் – தொழில்நுட்பத் துறைகளைச் சார்ந்த அறிஞர்களின் பங்கு இதில் மிகவும் முக்கியமானதாகும். எனவே, இந்த வகையில், இக்கருத்தரங்கம், சிறப்பாக அமைந்திட எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐந்து அமர்வுகளிலும் பங்கு கொள்கின்ற மாண்புமிகு அமைச்சர்

பெருமக்களும் அறிஞர் பெருமக்களும் நமது தமிழ்மொழி பல்வேறு துறைகளிலும் வளம்பெற ஆக்கபூர்வமான கருத்துரைகளை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கின்றேன். அறிஞர்களின் கருத்திற் கிணங்கவும், காலத்தின் தேவைக்கேற்பவும் தமிழக அரசு தமிழ் மொழி வளர்ச்சிக்கு உரிய நற்பணிகளை ஆற்றத் தயங்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கருத்தரங்கங்கள், சிறப்பாக நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகளைக் குறுகிய காலத்தையும் பொருட்படுத்தாமல் சிறப்பாகச் செய்துள்ள அனைவரையும் பாராட்டுகிறேன். கருத்தரங்கம் சிறந்திட மீண்டும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து அனைவருக்கும் வணக்கம் கூறி விடைபெறுகிறேன்''.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிறைவுரை :**

"அறிவியல் தமிழ் – தமிழ்ப் பண்பாடு பற்றி நிறைவாகவும், மிகுதியாகவும் இன்றைய நிகழ்ச்சியில் அறிஞர்கள் எல்லாம் கருத்துக்களை எடுத்துக்கூறி உள்ளார்கள்.

நமக்குத் தாய் மொழியாக விளங்குகின்ற தமிழ்மொழி பல சிறப்பான தகுதிகளைப் பெற்ற மொழி.

★ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கூறப்படும் தொல்காப்பியம் தமிழின் இலக்கணத்தைக் கூறுகிறது.

★ கி.மு. 200க்கு முற்பட்ட கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

★ தமிழ்மொழி உலகப் பொதுமைக்குமான சமயச் சார்பற்ற இலக்கியங்களைக் கொண்டிருக்கிறது.

★ இலத்தீன் மொழியைப் போன்றும் அராபிய மொழியை விடவும் தொன்மை மிக்கது.

★ ஏனைய இந்திய மொழிகளைப் போல் இல்லாமல், தமிழ் மொழி திராவிட மொழிக் குடும்பத்தின் தாய்மொழியாகவும், தனித் தன்மைகளைக் கொண்டதாகவும் விளங்குகிறது.

★ சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன், சீனமொழிகளைப் போன்றே இலக்கிய இலக்கணச் செழுமை உடையது.



★ கவிதை நெறிகளிலும், இலக்கண மரபுகளிலும் அழகியல் உணர்வுகளிலும் மற்ற இந்திய மொழிகளில் இருந்து மாறுபட்டு, தனித்தன்மை கொண்டது.

★ உலக பொதுமை நோக்குடைய தன்னேரில்லாத திருக்குறளைப் பெற்றது.

★ தற்கால இந்தியப் பண்பாட்டிற்கும் மரபிற்கும் தனித்துவம் மிக்க ஆதாரங்களைக் கொண்டது.

இத்தகைய பெருமைகளைக் கொண்டதால் 'உயர்தனிச் செம்மொழி' எனப் போற்றப்படுகிறது.

இத்தகைய தமிழ் இன்றைய அறிவியல் தொழில்நுட்ப உலகில் எப்படி வளர வேண்டும், எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதை இக்கருத்தரங்கில் அதிகமாகவே சிந்தித்திருக்கிறோம்.

ஒரு காலத்தில் தமிழால் முடியாது, தமிழ் அறிவியலுக்கு ஏற்ற மொழியில்லை என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் இன்றோ உலகளாவிய நிலையில் இணைய தளங்களில் உலா வரும் மொழியாகத் தமிழ் உயர்ந்து நிற்கிறது என்பதை மறுக்க முடியாது. ஆனால், இந்த முன்னேற்றம் மட்டுமே போதுமென்று கருதிவிட முடியாது. அறிவியல் தமிழ் வளர்ச்சியில் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அறிவியல் தமிழ் என்பது பள்ளிகள் தொடங்கிப் பல்கலைக்கழக ஆராய்ச்சிகள் வரையில் வளர்ந்தோங்க வேண்டிய துறையாகும். பொறியியல், மருத்துவம் போன்ற பெரிய துறைகளில் அவற்றின் உட்பிரிவுகளில் எல்லாம் தமிழைப் பயன்படுத்தும் முயற்சியும் உறுதியும் நமக்கு வரவேண்டும். இந்த முயற்சியில் ஈடுபடும் அனைவரையும் அரசு பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறது.

எந்த ஒரு மொழிக்கும் அதன் இலக்கிய, இலக்கணங்கள், வரலாற்றுத் தொன்மைகள் அதன் பெருமையை, அந்த மொழி பெற்றிருந்த பெருவாழ்வை எடுத்து இயம்புவனவாகவே அமையும். அந்தப் பெருமையை, புகழை அடிப்படையாகக் கொண்டு மொழியை இன்றைய நிலைக்கேற்ப வளர்க்க வேண்டிய பொறுப்பு வாழ்கின்ற மக்களைச் சார்ந்தது. வெறும் முழக்கங்களால் எந்த மொழியும் வளர்ந்து விடாது. மொழி வளர்ச்சியில் தமிழ் அறிஞர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் எனப் பல துறைகளைச் சார்ந்த வல்லுநர்களின் உழைப்பும், கூட்டு முயற்சியும் மிகவும் தேவையாகிறது.

இக்கருத்தரங்கின் வாயிலாக அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள நாம் நம்மைத் தயாரப்படுத்திக் கொண்டோம் என்றால் அது மிகையல்ல.

காலையிலிருந்து அரிய கருத்துகளால் நிரம்பி வழிந்த இக்கருத்தரங்கில் நிறைவுரையாக அறிவியல் தமிழ் வளர்ப்போம் – தமிழ் பண்பாட்டை உலக நாடுகள் உணரச் செய்வோம் – அதற்காகப் பாடுபடுவோம் என்று கூறி, கருத்தரங்கை நிறைவு செய்கிறேன்''.

• • •







# திருவள்ளுவர் திருநாள்

இந்தத் திருநாளில் திருவள்ளுவர் விருதும் சிறந்த நூல்களுக்குப் பரிசுகளும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. திருக்குறள் நெறிபரப்பும் வகையில் சீரிய பணியாற்றியுள்ள தகுதியாளருக்குத் திருவள்ளுவர் விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதினைப் பெற்றுள்ள முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கிறேன்.

நமது தமிழ்மொழி காலத்தின் தேவைக்கு ஈடு கொடுக்கும் வகையில் வளர்ச்சியடைய வேண்டியது இன்றியமையாதது ஆகும். இதற்குத் தமிழில் துறைதோறும் நூல்கள் வெளிவர வேண்டியது மிக மிக அவசியம்.



கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும் என்றும் துறைதோறும் நூல்கள் ஒருத்தர் தடையில்லாமல் ஊரறியும் தமிழில் சலசலவென எவ்விடத்தும் பாய்ச்சிவிடல் வேண்டும் என்றும், பாவேந்தர் பாரதிதாசன் சுட்டிக்காட்டுகிறார். இந்த வகையில் 2000ஆம் ஆண்டில் துறைதோறும் வெளிவந்துள்ள நூல்களுள் சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து நூலாசிரியர்களுக்கும் அவற்றைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் இந்த விழாவில் பரிசும் பாராட்டிதழும் வழங்கப்பட்டுள்ளன. பரிசு பெற்றுள்ள அனைவரையும் வாழ்த்துகிறேன்.

தமிழுக்காகப் பணிசெய்வோர் வயதான காலத்தில் வறுமையில் வாடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் இந்த விழாவில் 9 தமிழறிஞர்கள் மாதாந்திர நிதியுதவிக்கு ஆணை பெற்றுள்ளார். இவர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன்.

திருவள்ளுவப் பெருந்தகைக்குத் தமிழக அரசு விழாக் கொண்டாடுவது என்பது தமிழ்த் தாய்க்குச் செய்யப்படும்

சிறப்பு என்பதில் ஐயமில்லை. ஏனெனில் திருக்குறள், தமிழ் மொழிக்குக் கிடைத்துள்ள விலைமதிக்க முடியாத கருவூலம் ஆகும். தமிழ்மொழியின் சிறப்பு, தமிழ் மக்களின் நாகரிகம், பண்பாடு, செம்மாந்த வாழ்க்கை முதலியவற்றைத் திருக்குறள் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. உலக இலக்கியங்களோடு ஒருங்கு வைத்துப் பேசப்படுகின்ற தனிச் சிறப்புக்கு உரியது திருக்குறள்.

திருக்குறள் தமிழ்மொழியில் எழுதப்பட்டிருந்தாலும் மொழி கடந்து நாடு கடந்து சமயமும் மதமும் கடந்த



உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளத்தக்க விழுமியங்களைக் கொண்டிருக்கிறது. தனிமனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? சமுதாயம் எப்படி இருத்தல் வேண்டும்? இல்லறத்தாருக்குரிய கடமைகள் என்ன? துறவறத்தார் மேற்கொள்ள வேண்டிய ஒழுகலாறுகள் யாவை? ஓர் அரசு எப்படிச் செயற்பட வேண்டும். வாழ்வில் பின்பற்ற வேண்டியன யாவை? பின்பற்றக் கூடாதன யாவை? என்பன போன்ற பல்வேறு செய்திகளை வள்ளுவப் பெருந்தகை வகுத்துக் கூறுகிறார். திருக்குறளில் இடம்பெறாத கருத்துக்களே இல்லை எனும் அளவில் செய்திகள் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு குறளும் ஒன்றே முக்கால் அடி அளவே உடையது என்றாலும், அதில் பொதிந்துள்ள கருத்துக்கள் அளவிடற்கு அரியவை. அதனால்தான் 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்று திருக்குறள் பாராட்டப்படுகிறது. திருக்குறளில் கட்டு மீறிய கற்பனைகள் இல்லை. வெறும் கதைகள் இல்லை. ஒரு தனி மனிதனும் சமுதாயமும் வாழ்வாங்கு வாழ்வதற்கு உரிய வழிகாட்டுதல்களே இதில் இடம் பெற்றுள்ளன. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனை வானுறையும் தெய்வத்துள் வைக்கும் அளவிற்கு உயர்நெறியைத் திருக்குறள் எடுத்துரைக்கிறது. திருவள்ளுவப் பெருந்தகை எடுத்துரைத்துள்ள கருத்துக் கருவூலங்கள் யாவும் எந்தத் தனி ஒருவருக்கும் உரியதாக அல்லாமல் உலகம் முழுவதற்குமே பொருந்தக் கூடியதாக உள்ளதைக் காணலாம்.

"வேண்டுதல் வேண்டாமை இலான் அடி
சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

என்ற குறள், விருப்பு வெறுப்பு இல்லாதவன் இறைவன் என்றும், இத்தகைய இறைவனுடைய திருவடியை வணங்குபவர்களுக்கு எக்காலத்தும் துன்பம் இல்லை என்றும் குறிப்பிடுகிறது.



ஒவ்வொரு மதமும் கடவுளை வணங்குபவர்களுக்கு எக்காலத்தும் துன்பம் இல்லை என்று குறிப்பிடுகிறது. ஒவ்வொரு மதமும் இறைவனைப் பற்றிக் குறிப்பிடும்போது, யார் மீதும் விருப்பு வெறுப்பற்றவன் இறைவன் என்றும், எல்லோருக்கும் அருள் செய்யும் பேரருளாளன் இறைவன் என்றும் கூறுகிறது.





எனவே வள்ளுவரின் இந்தக் குறள், அனைவருக்கும் பொதுவானதாக இருத்தலைக் காண்கிறோம். இப்படி மதம் – சமயம் சார்ந்த கருத்துக்கள் மட்டுமல்ல, ஒரு செயல் செய்யும்போது அச்செயலை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைக் கூடப் பொதுவுடைமையாக்கித்தான் காட்டுகிறார் திருவள்ளுவர்.

"இதனை இதனால் இவன் முடிக்கும்
என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

இக்குறளில் உள்ள 'இதனை இதனால் இவன் முடிக்கும்' என்ற சொற்கள் எந்தச் செயலை என்றோ, எதனால் முடிப்பது என்றோ, யார் முடிப்பது என்றோ குறிப்பிடுவதாக அமையாமல் பொதுவாக அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். இப்படி வள்ளுவப் பெருந்தகை வழங்கியிருக்கிற குறட்செல்வங்கள் அனைத்தும் உலகம் பொதுமறை எனப் போற்றப்படுகிறது.

அதனால்தான் திருக்குறள் இந்திய மொழிகள் பலவற்றிலும் உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சிறப்பினைப் பெற்றிருக்கிறது. ஒரு வகையில், தமிழ் மொழியின் தொன்மையையும் சிறப்பினையும் உலகம் அறிந்து கொள்வதற்கு முதற்காரணமாக விளங்குவது திருக்குறள் என்பது மிகையாகாது.

திருக்குறளின் அருமை பெருமைகளை உணர்ந்த தேசியக்கவி பாரதியார் 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்று பாடினார். மேலும் யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று தமிழ் மொழியின் பெருமையைப் புகழ்ந்துள்ள பாரதியார் தரமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்று கூறுகிறார். நமது திருக்குறளை இந்திய மற்றும் உலக மொழிகள் பலவும் மொழி பெயர்த்துக் கொண்டுள்ளதை எண்ணும் போது நமக்கு மிகவும் பெருமை ஏற்படுகிறது.



திருக்குறள் தமிழ் இலக்கியத்துள் தலை சிறந்த படைப்பு, மனித இனத்தில் சிந்தனையில் முகிழ்த்த உயர்வும் தூய்மையும் வாய்ந்த இலக்கியப் பெட்டகம். அதனுடைய ஆசிரியர் சாதி சமய இன வேறுபாடுகளை யெல்லாம் கருத்தில் கொள்ளாமல் மனித இனம் முழுமைக்கும் பொருந்தக்கூடிய கட்டற்ற சிந்தனையையும் பெருஞ்சிறப்பு வாய்ந்த அறங்களையும் அறிவுறுத்துவது நம்மை வியப்பிலாழ்த்துகிறது என்று எம். ஏரியல் எனும் பிரெஞ்சு நாட்டு நல்லறிஞர் 1848ஆம் ஆண்டில் குறிப்பிட்டுள்ள செய்தி நமது சிந்தனை மரபின் செழுமையை வெளிப்படுத்துகிறது.

இவருக்குப் பிறகு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1886ஆம் ஆண்டில் வெளியிட்ட டாக்டர் ஜி.யு. போப் எனும் ஆங்கிலேய அறிஞர், திருவள்ளுவரைப் பற்றிக் குறிப்பிடும்போது, உலகில் உள்ள பொருட்கள் எல்லாம் மாறுகின்றன. மறைகின்றன. ஆனால் திருவள்ளுவருடைய புகழ் குன்றவில்லை. பெருகிக் கொண்டே

போகிறது. அனைத்துலக மனிதனைப் பாடிய பாவலன் ஆயிற்றே வள்ளுவன் என்று பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்.

1925ஆம் ஆண்டில் திருக்குறளின் ஜெர்மன் மொழி பெயர்ப்பைப் படித்து வள்ளுவரைப் புரிந்து கொண்ட ஆல்பிரட் சுவைட்சர் எனும் ஜெர்மன் நாட்டு அறிஞர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'ஒழுக்கமே மனிதனுடைய உயர்ந்த குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதை மிகுந்த உறுதிப்பாட்டோடு வள்ளுவர் அறிவிக்கிறார். ஒவ்வொரு வரும் தனக்குத் தானே செய்து கொள்ள வேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்யவேண்டிய கடமை என்ன? என்பனவற்றையெல்லாம் சிறந்த பண்பாட்டோடும் மதிநுட்பத்தோடும் வள்ளுவர் பேசுகிறார். உலக இலக்கியத்தில் இத்தகைய மாண்புமிக்க மெய்யறிவு வேறு எந்நூலிலும் இத்துணைச் சிறப்பாகப் பொலிவுறவில்லை' என்று ஜெர்மானிய அறிஞர் ஆல்பிரட் சுவைட்சர் முத்தாய்ப்பாகக் கூறுகிறார். இப்படி உலக அறிஞர்கள் பலரும் போற்றி, பாராட்டி, பின்பற்றும் ஒப்பற்ற இலக்கியமாகத் திருக்குறள் திகழ்கிறது. அதனால்தான் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று பாரதியார் குறிப்பிடுகிறார். இதற்கு சிறப்பு வாய்ந்த திருக்குறளுக்கு – திருவள்ளுவருக்கு தமிழக அரசு விழா எடுக்கிறது என்றால், இவ்விழா தமிழுக்கு எடுக்கும் விழா ஆகிறது. தமிழ் இலக்கியம், தமிழ் மக்களின் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை உலகுக்கு எடுத்துரைக்கும் ஒப்பற்ற பெருவிழாவாக இவ்விழா அமைகிறது.

காஞ்சிபுரத்தில்
15-1-2002 அன்று நடைபெற்ற
திருவள்ளுவர் திருநாள் விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் ஆற்றிய உரை.



## 2000ஆம் ஆண்டில் வெளியான சிறந்த நூல்களுக்குப் பரிசு

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாகச் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்திவருகிறது. இதுவரை 15 தலைப்புகளில் நடத்தப்பெற்று வந்த சிறந்த நூல்களுக்குரிய பரிசுப்போட்டியை இவ்வாண்டில் 30 தலைப்புகளில் விரிவுபடுத்தி நடத்துமாறும், ஒவ்வொரு தலைப்பிலும் சிறந்ததெனத் தெரிவு செய்யப்படும் ஒரு நூலுக்கு மட்டும் ரூ.10,000/- பரிசுத் தொகையாக வழங்குமாறும், பரிசுக்குரிய சிறந்த நூல்களைப் பதிப்பித்த பதிப்பகங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 2,000/- பரிசுத் தொகையாக வழங்குமாறும் அரசு ஆணையிட்டுள்ளது. (தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசாணை (நிலை) எண். 157 நாள் 20.7.2001)

இதன்படி 26 நூல்கள் பரிசுக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பரிசுபெறும் 26 நூல்களுக்கு ரூ.2,60,000/-மும், பரிசு பெறும் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தார்களுக்கு ரூ.52,000/-மும் ஆக இந்தஆண்டு பரிசுத் தொகையாக ரூ.3.12 இலட்சம் 15.1.2002 அன்று காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா கலையரங்கில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.



### பெரம்பலூர் மாவட்டம் கவுல்பாளையம் கிராமத்தில்

# "சுகாதாரப் பொங்கல்"

பெரம்பலூர் மாவட்டத்தில் முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிவறை, அங்கன்வாடி கழிவறை, பள்ளிக் கழிவறை, மகளிருக்கான சுகாதார வளாகம் கழிவுநீர் கால்வாய் உறிஞ்சிக் குழி குப்பைத் தொட்டி ஆகியவை கட்டட அரசு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மாவட்ட மக்கள் அனைவரும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை அருந்த வேண்டும், சுகாதார முறையில் அமைக்கப்பட்ட கழிப்பறைகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றால் நோயற்ற வாழ்க்கை வாழ வழி செய்தல் நோக்கமாகும்.

மிகவும் பின்தங்கிய பகுதியான பெரம்பலூர் மாவட்டத்தில் பாதுகாப்பற்ற குடிநீர், திறந்தவெளிகளைக் கழிப்பிடமாக பயன்படுத்துதல், தனிநபர் சுகாதாரமின்மை மற்றும் முறையற்ற உணவுப் பழக்கங்களினால் பல நோய்கள் தோன்றுகின்றன. இதுபோன்ற சுகாதாரமின்மை குழந்தைப் பருவ இறப்பிற்கு காரணமாகின்றன. சாக்கடைகள், குழிகள் போன்றவைகள் மூலமாக முற்காலங்களில் மனித கழிவுகள் அகற்றப்பட்டன.

தற்பொழுது முழுமையான சுகாதாரம் என்பது மனித கழிவுகளை அகற்றுதல், சுகாதாரமான உணவு முறை, தனிநபர், வீடு மற்றும் சுகாதாரமான சுற்றுபுறச் சூழல் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும். முறையான சுகாதாரம் என்பது பொதுவான ஆரோக்கிய வாழ்விற்கு மட்டுமல்லாமல் தனிமனித மற்றும் சமுதாய வாழ்க்கைக்கும் உகந்ததாகும். சுகாதாரம் என்பது தனிநபர் சுத்தம், சுத்தமான வீடு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், குப்பைகள் அகற்றுதல், கழிவுகள் அகற்றுதல் மற்றும் அசுத்த நீரை முறையாக அப்புறப்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகக் கொண்டு விரிவு படுத்தப்பட்டது.

சுகாதாரப் பணிகள் குறித்து 5 கிராமப்புறங்களில் நடத்தப்பட்ட ஆய்வில் 5 சதவீத மக்கள் தாமாக கழிப்பிடங்கள் அமைத்துக் கொள்வதில் ஆர்வமாய் உள்ளது தெரிய வந்துள்ளது. இரண்டு சதவீத மக்கள்






அரசு மானியம் காரணமாக கழிப்பிடம் அமைப்பதில் ஆர்வம் கொண்டுள்ளனர். 51 சதவீத மக்கள் கழிப்பிடம் அமைக்க ரூ.1,000 வரைசெலவழிக்க தயாராய் இருப்பதும் தெரிய வந்துள்ளது.

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் தேவை உண்டாக்கும் அணுகு முறையில் ஒதுக்கீடு முறை உருவாக்கப்பட்டது. இதில் போதிய தகவல், சுகாதாரம் பற்றிய அறிவு மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகள் அதிகப்படுத்தப்பட்டு பங்கு கொள்வோரின் எண்ணிக்கை அதிகப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது. சிறார்கள் இதில் முக்கிய பங்கேற்பளிக்க முடியும் என்பதால் கிராமப்புற பள்ளிகளில் மாணவ, மாணவியருக்கு தனித்தனியாக கழிவறைகள் அமைத்தலும் இதன் நோக்கமாகும்.

மேலும் கிராமப்புறங்களில் பொது வாழ்க்கைத் தரம் உயர்த்துதல், சுகாதாரம் பற்றிய கருத்தை கிராமப் புறங்களில் பரவலாக்கச் செய்வது, ஆரோக்யம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி தேவையை ஏற்படுத்துதல், கிராமப்புற பள்ளிகளில் சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், பொருத்தமான செலவு குறைவான வழிமுறைகளை ஊக்குவித்தல், நீர் மற்றும் சுகாதாரக் குறைவு தொடர்பான நோய்களைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு முழு ஊரக சுகாதாரத் திட்டத்தில் சுய உதவிக் குழுக்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தி சுகாதாரப் பணிகளைக் கிராமப்புற மக்களிடையே பழக்கத்திற்கு கொண்டுவருதல்.

பெரம்பலூர் அருகேயுள்ள கவுல்பாளையம் கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளிலும் தனிநபர் இல்லக் கழிவறைகள் அமைத்து மாவட்டத்தில் மாதிரி கிராமமாக செயல்படுத்திட 7.1.2002 முதல் இம்மாவட்டத்தில் செயல்படும் 8 தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் ஒன்றிணைந்து பொங்கல் பண்டிகை முதல் நாளான ஜனவரி 13–ஆம் தேதி போகிப் பண்டிகை அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் கவுல்பாளையம் கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளிலும் கழிவறைகளைத் திறந்து வைத்து "சுகாதாரப் பொங்கல் விழா'' கொண்டாட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் இராஜேஷ் லக்கானி தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், கவுல்பாளையம் கிராமத்தில் கழிவறைகள் இல்லாத 294 வீடுகளிலும் முழு சுகாதார திட்டத்தில் ரூ.500 அரசு ஊக்கத் தொகையுடன் குறைந்த செலவின மதிப்பீட்டில், இருக்கும் இடவசதியில் ஜனவரி 13–ஆம் தேதிக்குள் கழிவறைகள் கட்டி முடித்திடவும், அக்கிராம மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட ஜனவரி 7–ஆம் தேதி முதல் கழிவறைகளின் அவசியம் குறித்த விழிப்புணர்வு வீடியோ படக்காட்சிகள், தெரு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்திடவும் ஒவ்வொரு அரசு துறைகளின் பணிகளையும் எடுத்துக் கூறி அவற்றில் தகுதியுடையவர்களுக்கு உதவிகள் உடனுக்குடன் வழங்கிடவும் முடிவெடுக்கப்பட்டன.


7.1.2002 இப்பா மற்றும் ஸ்கோப் ஊரக பயிற்சி மையங்கள் ஒருங்கிணைப்புடன் வீடு, அகிலபாரதி, சுபிக்ஷா, இன்டோ டிரஸ்ட், டி.எம்.ஐ., கிராப், பெரம்பலூர் சமூக சேவை சங்கம் ஆகிய 8 தொண்டு நிறுவன அமைப்பினரும் கவுல்பாளையம் கிராமத்தில் முகாமிட்டு, ஒவ்வொரு வீட்டிற்கும் நேரில் சென்று கழிவறைகள் கட்டுவதற்கான அவசியத்தை எடுத்துரைத்து, அன்றே மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் 8 வீடுகளில் கழிவறைகள் கட்டுவதற்கான ஆரம்ப கட்ட பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சியர் இராஜேஷ் லக்கானி தலைமையில் நடைபெற்ற சுகாதாரப் பொங்கல் விழிப்புணர்வு, நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் (பொ) ஆ.பொன்னுசாமி, மகளிர் திட்ட அலுவலர் சந்திரகாசன், கோட்டாட்சியர் மனோகரன், பெரம்பலூர் ஒன்றிய குழுத் தலைவர் மு.இராஜாராம், கவுல்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் ராஜமாணிக்கம், மத்திய அரசு கள விளம்பர அலுவலர் தெரசநாதன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லாரன்ஸ், இப்பா பயிற்சி மைய இயக்குநர் பாலசுப்ரமணியன், ஸ்கோப் இயக்குநர் சுப்புராமன், பெரம்பலூர் சமூக சேவை சங்க இயக்குநர் சந்தனம் அடிகளார், பெரம்பலூர் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெயராமன் ஆகியோர் சுகாதாரக் கழிவறைகள் குறித்துப் பேசினார்கள்.

ஜனவரி 8–ஆம் தேதி நடைபெற்ற வருவாய்த்துறை விழிப்புணர்வு தினத்தில் கவுல்பாளையம் கிராமத்தில் 15 நபர்களுக்கு பட்டா பாஸ் புத்தகம், 4 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை, ஒருவருக்கு பட்டா நகல் மற்றும் கழிவறை கட்டி முடிக்கப்பட்ட 5 நபர்களுக்கு



பக்கெட் மற்றும் கழிவறை துடைப்பான்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பி.கோபால், வட்டாட்சியர் அப்துல்காதர் மற்றும் வருவாய்த்துறை வளர்ச்சித்துறை அலுவலர்கள் பங்கேற்றனர். ஜனவரி 10–ஆம் தேதி நடைபெற்ற மருத்துவ முகாமில் 315 நபர்களுக்கு மருத்துவ சிகிச்சையளிக்கப்பட்டது. கால்நடை மருத்துவ முகாமில் 450 கால்நடைகளுக்கு தடுப்பூசி மற்றும் மருத்துவ சிகிச்சையளிக்கப்பட்டது. ஊரக முழு சுகாதார



திட்டத்தில் பெரம்பலூர் அருகேயுள்ள கவுல்பாளையம் கிராமத்தில் ஜனவரி 13–ஆம் தேதி வரை கட்டி முடிக்கப்பட்ட தனிநபர் இல்லக் கழிவறைகளைத் திறந்து வைத்து, அக்கிராம மக்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் இராஜேஷ் லக்கானி, போகிப் பண்டிகையை சுகாதாரப் பொங்கல் பண்டிகையாக கொண்டாடினார். இந்நிகழ்ச்சியில் கவுல்பாளையம் கிராம மக்கள் அனைவரும் ஒரே இடத்தில் ஒட்டுமொத்தமாக பொங்கல் வைத்து மாவட்ட ஆட்சியருடன் அனைவரும் உண்டு மகிழ்ந்தார்கள். இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சியர் இராஜேஷ் லக்கானி இக்கிராமத்தில் 317 வீடுகளில் இதுவரை 151 வீடுகளில் தனிநபர் இல்லக் கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுக்குரியதாகும். மீதமுள்ள வீடுகளிலும் குடியரசு தினமான ஜனவரி 26–க்குள் தனிநபர் இல்லக்கழிவறைகளைக் கட்டி முடித்து பெரம்பலூர் மாவட்டத்தில் கவுல்பாளையம் கிராமம் முன்னோடி கிராமமாக திகழ அனைவரும் ஒத்துழைப்பு நல்க கேட்டுக்கொண்டார்.

முழு சுகாதாரத் திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் பயன்பெறலாம். இதற்காக தனிநபர் இல்லக் கழிவறை கட்ட ரூ.500/–ம் அங்கன்வாடி கழிவறை அமைக்க ரூ.9 ஆயிரமும், பள்ளிக்கழிவறை அமைக்க ரூ.18 ஆயிரமும் மகளிருக்கான சுகாதார வளாகம் அமைக்க ரூ.88 ஆயிரமும் அரசு ஊக்கத்தொகையாக வழங்குகிறது. கிராமப் பகுதிகளில் கழிவுநீர் கால்வாய் உறிஞ்சிக்குழி குப்பைத் தொட்டி அமைக்க ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தலா ரூ.2.19 இலட்சமும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வசதிகளைப் பயன்படுத்தி பெரம்பலூர் மாவட்ட மக்கள் அனைவரும் கழிவறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நோயற்ற வாழ்வு வாழவும், இம்மாவட்ட மக்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக திகழவேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியர் இராஜேஷ் லக்கானி தெரிவித்துள்ளார்.

சுகாதாரப் பொங்கல் விழாவில் பெரம்பலூர் ஒன்றிய குழுத் தலைவர் மு.இராஜாராம், கவுல்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் ராஜமாணிக்கம், துணைத் தலைவர் கோவிந்தசாமி, வாட்டர் எய்டு பரமசிவம், ஸ்கோப் சுப்புராமன், இப்பா பாலசுப்பிரமணியன், பெரம்பலூர் சமூக சேவை சங்கம் இயக்குநர் சந்தனம் அடிகளார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் (பொ) ஆ.பொன்னுசாமி, பெரம்பலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெயராமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

*தொகுப்பு:*
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*பெரம்பலூர்*



# பாண்டியர் வரலாறு

டாக்டர் பத்மஜா ரமேஷ்
வீ.பி.புருஷோத்தமன்

சங்கப் பாடல்களில் பதினான்கு பாண்டியர்கள் காணப்படுகிறார்கள். இவர்கள் கி.மு. 350 முதல் கி.மு. 75 வரை – ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் – பாண்டிய நாட்டை ஆண்டுள்ளனர். பாண்டிய நாடு என்பது ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் காலத்தில் கொற்கையைச் சூழ்ந்த சிறு நிலப்பகுதியாகும். அவன் மகன் நெடியோன் கூடலின்மேல் படையெடுத்துச் சென்று, அங்கு ஆட்சி செய்து வந்த அகுதையைத் தோற்கடித்துக் கூடலில் பாண்டிய அரசை நிறுவினான். நெடியோன் மகன் பசும் பூண்பாண்டியன் பல நாடுகளை வென்று பாண்டிய அரசை விரிவாக்கினான். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காலத்தில் பாண்டியநாடு பரப்பிலும் செல்வாக்கிலும் வலிமையிலும் உச்சகட்டம் அடைந்தது. நெடுஞ்செழியனுக்குப் பிறகு, அவன் புதல்வர்களும் பேரர்களும் பாண்டிய நாட்டைப் பங்கு போட்டுக் கொண்டு ஆண்டு வந்தார்கள். அவர்கள் ஆட்சிக்குப் பிறகு பாண்டியநாடு களப்பிரர்க்கு அடங்கி வாழ்ந்தது. களப்பிரர் காலத்தில் சேர சோழர் தம் நாட்டை விட்டு ஓடி ஒளிந்து வாழ்ந்தார்கள். ஆனால் பாண்டியரோ, களப்பிரருக்கு அடங்கி, பாண்டிய நாட்டை ஆட்சி செய்தனர். கலித்தொகை, பரிபாடல் ஆகியவை களப்பிரர் காலத்தில் பாண்டிய நாட்டில் எழுதப்பட்ட நூல்களாகும்.

இனி, சங்ககாலப் பாண்டியர் வரலாற்றைச் சுருக்கமாகக் காண்போம்.



### ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் (கி.மு. 350-325):

சங்கப் பாடல்களில் வரும் பாண்டியர்களுள் காலத்தால் முந்தியவன் ஒல்லையூர் தந்த

பூதப் பாண்டியன் ஆவான். இவன் கூடலில் இருந்து ஆட்சி புரியவில்லை. கொற்கையைச் சூழ்ந்த சிறுநிலப் பகுதியையே ஆண்டு வந்தான். இவன் காலத்தில் கூடலை அகுதை என்ற பெருவேந்தன் ஆண்டு வந்தான். பொதியமலைப் பகுதியை ஆய் அரசனான திதியன் ஆண்டு வந்தான். பூதப் பாண்டியன், நாட்டைவிடப் பொதியில் நாடு மிகப் பெரிதாக இருந்தது. 'பொதியில் செல்வன் பொலந்தேர்த்திதியன்' என்று பூதப்பாண்டியனே ஆய் அரசனைப் பாராட்டினான். பூதப்பாண்டியன் நாட்டைச் சூழ்ந்து சின்னஞ்சிறு நாடுகள் பல இருந்தன. இவற்றை ஆண்ட குறுநிலத் தலைவர்களான மையல் கோமான், ஆந்தை, அந்துவஞ் சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் என்பவர்கள் பூதப்பாண்டியனின் நண்பர்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்த ஒல்லையூர்க் கூற்றத்தை இவன் வென்றதால் இவனுக்கு 'ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்' என்று பெயர் வழங்கியது.

பூதப்பாண்டியன் மனைவி, தனுசுகோடிப் பகுதியை ஆண்டுவந்த கவுரியர் குடியைச் சேர்ந்தவள் என்றும், பூதப்பாண்டியன், ஆட்சி புரிந்த நிலப்பகுதி அவன் மனைவிக்கு அவள் தந்தையால் தரப்பட்டது என்றும், பாண்டியன் மனைவியான இவளைப் 'பண்டையா' என்று மெகஸ்தனிஸ் தமது இண்டிகாவில் குறிப்பிட்டுள்ளார் என்றும் கருத இடமுண்டு. (திருமணங்கள் மூலம் கவுரியர் குடி பாண்டியர் குடியோடு இணைந்ததால், பிற்காலத்தில் கவுரியர் என்ற சொல் பாண்டியர் என்ற பொருளில் வழங்கலாயிற்று).

பூதப்பாண்டியன் காலத்தில் கூடலில் ஆட்சி புரிந்த அகுதை, கூடலுக்கு வடக்கே இருந்த எவ்விநாட்டின்மேல் படையெடுத்து முதலாம் எவ்வியைக் கொன்றான். பிறகு பூதப்பாண்டியன் நாட்டின் மேலும் படையெடுத்து அவனைக் கொன்றான். பூதப் பாண்டியன் மனைவி கணவனோடு உடன்கட்டை ஏறினாள்.



## நெடியோன் (கி.மு. 325-300):

பூதப்பாண்டியன் இறந்த பிறகு அவன் மகனான நெடுந்தேர்ச் செழியன் கொற்கையின் தலைவனானான். இவன் தன் தந்தையைக் கொன்ற அகுதை ஆண்டுவந்த கூடல்மேல் படையெடுத்து அகுதையை விரட்டி அடித்து, பாண்டிய அரசைக் கூடலில் நிறுவினான் அகுதை வேறொரு வேந்தனைப் படைத்துணையாகச் சேர்த்து கொண்டு,

இழந்த அரசை மீண்டும் பெறக் கூடலின் மேல் படையெடுத்தான். செழியன் இருவேந்தரையும் தோற்கடித்து, பாண்டிய அரசைக் கூடலில் நிலை நிறுத்திக் கொண்டான். அதன் பிறகு நெடியோன் வேறுபல போர்களைச் செய்து, நாடுகள் பலவற்றைக் கைப்பற்றி, பாண்டிய நாட்டின் எல்லையை விரிவாக்கி, 'நிலந்தரு திருவின் நெடியோன்' என்ற பெயரைப் பெற்றான்.

நெடியோன் நீர்வளத்தைப் பெருக்கப் பஃறுளி என்ற சிற்றாற்றை அகலப்படுத்தி, ஓர் அணையைக் கட்டினான். பஃறுளி ஆறு பறளி ஆறு என்று இப்போது அழைக்கப்படுகிறது.

நெடியோன் புலவர்களைக் கூட்டி அவர்கள் கவிதைகளைப் படிக்கச் செய்து, புலவர்களை ஊக்குவித்தான். பிற்காலத்தில் தமிழ்ச் சங்கம் மதுரையில் உருவாவதற்கு வித்திட்டவன் நெடியோனே என்று கூறலாம்.

பாண்டிய அரசைக் கூடலில் நிறுவிய நெடியோனைச் சுற்றி, காலப்போக்கில் கதைகள் பல எழுந்தன. இவன் காலத்தில் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது என்றும், தொல்காப்பியம் இவன் அவையில் அரங்கேற்றப்பட்டது என்றும், இவனே கடலை வற்றச் செய்த வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்றும் வழங்கும் கதைகள் சங்ககால நெடியோன் பெருமையை உயர்த்திக் காட்டுவதற்காக எழுந்தவை என்று கருத வேண்டும்.

### பசும்பூண் பாண்டியன் (கி.மு. 300-275):

நெடியோனுக்குப் பிறகு கூடலை ஆண்டவன் அவன் மகனான பசும்பூண் பாண்டியன் ஆவான். இவன் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டின் எல்லையும் ஆதிக்கமும் விரிவடைந்தன. பசும்பூண் பாண்டியன் படைகள் பொதிய மலைப் பகுதிக்குள் புகுந்து அதன் தலைவனான அதிகனைச் சரண் அடையச் செய்தன. (அகம். 162). இதன் பிறகு, அதிகன் பசும்பூண் பாண்டியனின் படைத்தலைவனாகப் பணியாற்றினான். பசும்பூண் பாண்டியன் ஏவலின்படி இவன் கொங்கர்களோடு வாகைப் போர்க்களத்தில் போர்செய்த போது, யானையோடு போர்க்களத்தில் வீழ்ந்து இறந்தான்.

கூடலின் வடக்கே நீடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த இரண்டாம் எவ்வியும் பசும்பூண் பாண்டியன் மேம்பாட்டை ஒப்புக்கொண்டு, அவனோடு நட்பாக வாழ்ந்தான். ஒரு சமயம் நெடுமிடல் என்பவன் எவ்வியின் ஏவலைக் கேளாமல் எதிர்த்தபோது, பசும்பூண் பாண்டியன் நெடுமிடலைச் சாய்ந்தான்.

தன் படைத்தலைவனான அதிகனைக் கொன்ற கொங்கர்களை அடக்குவதற்கு, பசும்பூண் பாண்டியன்தானே படை நடத்திச் சென்றான். கொங்கர்களை விரட்டி அடித்து வெற்றிவிழா கொண்டாடினான்.

இவ்வாறு பல போர்களைச் செய்து பாண்டிய அரசை விரிவாக்கிய பசும்பூண் பாண்டியன் அறநெறியைக் கடைப்பிடித்து, செங்கோல் ஆட்சி செலுத்தி, அரசர்களிலே சிறந்தவன் என்று பலரால் போற்றப்பட்டான்.

### கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி (கி.மு. 275-250):

பசும்பூண் பாண்டியனுக்குப் பிறகு கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்தான். இவனைப் பாராட்டும் இரும்பிடர்தலையார், இவனை

தவிரா ஈகைக் கவுரியர் மருக!
செயிர்தீர் கற்பின் சேயிழை கணவ! (புறம். 3:5–6)

என்று அழைக்கிறார். இவன் கவுரியர் குடியில் பிறந்தவன் என்றும், பாண்டியர் குடியில் பிறந்த பெண்ணை மணந்து பாண்டிய நாட்டின் ஆட்சியைப் பெற்றான் என்றும் கருதுவதற்கு மேற்காட்டிய பாடல் அடிகள் இடந்தருகின்றன.

இவனைப் பாடிய இரும்பிடர்த்தலையார் முதலாம் கரிகால் வளவன் அம்மான் என்றும், கரிகால் வளவன் சோழநாட்டின் அரச உரிமையைப் பெற உதவி புரிந்தார் என்றும் பழமொழிப் பாடல் ஒன்று கூறுகிறது.

### பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (கி.மு. 250-225):

கருங்கை ஒள்வான் பெரும் பெயர் வழுதிக்குப் பிறகு முதுகுடுமிப் பெருவழுதி பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்தான். வடநாட்டுத் தருமசாஸ்திரங்களிலும் வேதங்களிலும் சொல்லியபடி யாகங்கள் பலவற்றைச் செய்து, யாக சாலைகளில் யூபங்களை (வேள்வித் தூண்களை) நட்டு, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பெயரைப் பெற்றான். தான் வேள்வி செய்ததோடு நில்லாமல் பிறர் வேள்வி செய்வதற்கும் இவன் ஊர்களைத் தானமாக வழங்கினான் என்று வேள்விக்குடி சாசனம் கூறுகிறது. போர்புரியும் போதும் இவன் வடநாட்டுத் தரும சாஸ்திரங்கள் கூறிய அற நெறியைப் பின்பற்றினான் என்று நெட்டிமையார் கூறுகிறார். 'பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளிகள், இறந்து போய்த் தென்புலத்தில் வாழும் மூதாதையர்க்குப் பிதிர்க் கடன் செய்ய வேண்டிய புதல்வர்களைப் பெறாதவர்கள் – ஆகிய நீங்கள் பாதுகாவலான இடத்தில் சென்று சேருங்கள். நாங்கள் எங்கள் அம்பை விரைவில் செலுத்தப்போகிறோம்' என்று எச்சரிக்கை செய்தபின்னரே, முதுகுடுமி போரைத் தொடங்குவானாம்:

*ஆவும், ஆன் இயல் பார்ப்பன மாக்களும்,*
*பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்*
*தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்*
*பொன்போல் புதல்வர்ப் பெறா அதீரும்,*
*எம் அம்பு கடிவிடுதும், நும் அரண் சேர்மின் என*
*அறத்து ஆறு நுவலும் பூட்கை.* (புறம். 9:1–6)

இந்து சமயத்தைத் தழுவி, யாகங்கள் செய்த முதல் தமிழ் மன்னன் முதுகுடுமி என்று கருதலாம். (இவனையடுத்து, இரண்டாம் கரிகால் வளவனும், சேரமன்னர் சிலரும் யாகங்கள் செய்துள்ளனர்.)

'பெருவழுதி' என்ற பெயர் பொறித்த நாணயங்களை, முதுகுடுமி அசுவமேத யாகம் செய்தபோது வெளியிட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. இந்த




நாணயங்களின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என்று கருதப்படுவதால், முதுகுடுமியின் காலநிலையை உறுதிப்படுத்திக் கொள்ள இவை உறுதுணையாகின்றன.

### கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி (கி.மு. 250-225):

அசுவமேத யாகம் செய்த முதுகுடுமியின் மகன், யாகங்களை வெறுத்து, பௌத்த சமயத்தைத் தழுவி, கடல்கடந்து பௌத்த மதப்பிரச்சாரம் செய்யச் சென்றார் என்று தோன்றுகிறது.

மதத்தைத் தழுவினார் என்று கருதலாம்.

உயிர்ப் பலி கொடுத்து அசுவமேத யாகம் முதலிய பல வேள்விகளைச் செய்தும், படைபலத்தால் பல ஊர்களையும் உயிர்களையும் அழித்தும் ஆட்சி புரிந்து வந்த முதுகுடுமியின் போக்கை விரும்பாத இளம் பெருவழுதி, இளவரசுப் பதவியைத் துறந்து பௌத்தரானார்; சங்கமித்திரையோடு சேர்ந்து புத்த தர்மத்தைப் போதிக்க இலங்கைக்குப் புறப்பட்டார்; செல்லும் வழியில் கடல் விபத்தில் இறந்து போனார் என்று நாம் கொள்ள வேண்டியுள்ளது.



முதுகுடுமிப் பெரு வழுதி பாண்டிய நாட்டை ஆண்ட கால நிலையில் (கி.மு். 250–225இல்), அசோகரின் மகளான சங்கமித்திர பாண்டிய நாட்டில் பொதியமலைப் பகுதியில் போதி தர்மத்தைப் பிரசாரம் செய்து வந்தாள். பொதிய மலையில் உள்ள சங்கமித்திரை மேடு இதற்குச் சான்றாகும்.

முதுகுடுமியின் மகனான இளம் பெருவழுதி, சங்கமித்திரையின் போதனையால் கவரப்பட்டுப் பௌத்த

### ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் (கி.மு. 225-200):

இளம் பெருவழுதி பௌத்த துறவியான பிறகு, பாண்டிய நாட்டை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆட்சி புரிந்தான். கி.மு. 225 – அளவில் ஆந்திர சாதவாகனர் (ஆரியர்) தமிழ்நாட்டின் மேல் படையெடுத்தனர்.



ஆரியர் படை பல பகுதிகளாகப் பிரிந்து தமிழ்நாட்டின் பல பகுதிகளில் புகுந்து தாக்கியது ஒரு பகுதி, சோழநாட்டில் புகுந்து நல்லடி என்பவன் ஆண்டுவந்த வல்லத்தைத் தாக்கியது. சோழர் மழைபோல அம்பை எய்து ஆரியர்படையை உடைத்தனர். ஆரியருக்குத் துணையாக வந்த வடுகரைச் சோழன் உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னி முறியடித்தான்.

சேரநாட்டுக்குள் புகுந்த ஆரியர் படையை எதிர்த்துச் சேரமான் நெடுஞ்சேரலாதனும், அவன் மகன் செங்குட்டுவனும் யானைப் படை நடத்திச் சென்று, ஆரியப்படையின் முன்னேற்றத்தைத் தடுத்தனர். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆரியப் படையைச் சின்னாபின்னமாக்கித் தோற்கடித்தான். அதனால் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்று அழைக்கப்பட்டான்.

மும்முனைகளிலும் தோற்றுப்போன ஆரியர் படைகள் ஒன்றுகூடி மலையமானின் முள்ளூரைத் தாக்கியது. மலையமான் தன் வேற்படையால் ஆரியரை ஓட ஓட விரட்டினான். தமிழகத்தை எளிதில் வெல்லலாம் என்று வந்த ஆரியர் படை பெருந்தோல்வியுற்றுத் திரும்பியது.

மூவேந்தர்களும் மலையமானும் முனைந்து ஆரியரை விரட்டிய போதும், நெடுஞ்செழியன் சிறப்பாகப் போர் செய்து ஆரியர் படையைச் சிதைத்ததால், ஆரியப்படை கடந்தவன் என்ற சிறப்புப் பெயர் அவனுக்கு நிலைத்துவிட்டது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் சிறப்பை ஒரு பாடலில் கூறுகிறான். சங்ககாலத் தமிழகத்தில் நால்வருணப் பாகுபாடு இல்லை. ஆனால், ஆரியரிடையே இந்தப் பாகுபாடு கடுமையாக இருந்தது. இருந்த போதிலும், கீழ் வருணத்தான் ஒருவன் கல்வியில் சிறந்தவனானால், மேல்வருணத்தானும் அவனை நாடிச் செல்வான் என்று ஆரியரிடையே தான் கண்டதை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூறுகிறான்:

*வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்,*
*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,*
*மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே.*

(புறம். 183:8–10)

### அறிவுடை நம்பி (கி.மு. 200-175) :

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்குப் பிறகு அறிவுடை நம்பி பாண்டிய நாட்டை ஆட்சி செய்தான். பிசிராந்தையார் இவனிடம் சென்று, "அறிவுடை வேந்தன் நெறி அறிந்து வரி வசூலிக்க வேண்டும்'' என்று ஒரு பாடலில் கூறுகிறார். வேறொரு பாடலில், தன் வேந்தன் முறையல்லாதவற்றைச் செய்யமாட்டான்; மக்களைப் பாதுகாப்பான் என்று கூறுகிறார். பிசிராந்தையார் பாடலில் வரும் 'அறிவுடை வேந்தன்' என்ற தொடரால் இவன் அறிவுடை நம்பி என்று அழைக்கப்பட்டான் என்றும், இவனது பெயர் செழியன் என்றோ, வழுதி என்றோ இருந்திருக்க வேண்டும் என்றும் கொள்ளலாம்.

அறிவுடை நம்பி எழுதிய நான்கு பாடல்களைச் சங்க இலக்கியத்தில் காணலாம். அவற்றுள் மூன்று காதல் பாடல்களாகும் ஒன்று மழலைக் குழந்தையின் விளையாட்டை அழகாகச் சித்திரிக்கிறது. இந்தக் குழந்தைதான் தலையாலங்கானத்தில் ஏழு பேரைத் தோற்கடித்த நெடுஞ்செழியன் ஆகும்.



### தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் (கி.மு. 175-150):

சங்ககாலப் பாண்டியர்களில் தலைசிறந்தவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆவான். இவன் அறிவுடை நம்பிக்குப் பிறகு பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்தான்.

இளம் வயதில் ஆட்சிக்கு வந்த நெடுஞ்செழியனை எளிதில் வென்று பாண்டிய நாட்டையும் அதன் செல்வத்தையும் பங்கு போட்டுக் கொள்ளத் திட்டமிட்டுச் சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேள், பொருநன் என்ற எழுவர் கூடிப் பாண்டிய நாட்டின் மேல் படையெடுத்தனர். நெடுஞ்செழியன் இளைஞனாக இருந்தாலும் எதிரிகளை விரட்டி அடிப்பேன் என்று வீரசபதம் செய்தான். பகைவர்களைப் பாண்டிய நாட்டிலிருந்து ஓடச் செய்ததுமல்லாமல், சோழ நாட்டிலுள்ள தலையாலங்கானம் வரை துரத்திச் சென்று, தன்னை எதிர்த்துவந்த எழுவரையும் முறியடித்தான். ஆலங்கானப் போரில் 'முதுவெள்ளிலை' என்னும் ஊரினர் அவனுக்கு உதவி செய்தார்கள் . தலையாலங்கானத்துப் போரில் நெடுஞ்செழியனோடு போர் செய்த சோழன் நலங்கிள்ளி போர்க்களத்தில் இறந்து போனான். சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை சிறைப்பட்டான். எஞ்சிய குறுநிலத் தலைவர் ஐவர் நெடுஞ்செழியனுக்கு அடங்கி வாழ்ந்தார்கள்.

ஆலங்கானப்போரே நெடுஞ்செழியனின் முதல் போர். அதுவே அவன் செய்த பெரிய போருமாகும். அதன்பிறகு ஆய்குடியினர் ஆண்டுவந்த பொதியமலை அவன் வசமாகியது . எவ்வியின் மிழலைக் கூற்றமும், வேளிரின் முத்தூறும், சாலியூர் என்ற துறைமுகப்பட்டினமும் நெடுஞ்செழியனால் கைப்பற்றப்பட்டன.

சேரநாட்டிலிருந்த முசிறியை நெடுஞ்செழியன் முற்றுகையிட்டான். அங்கிருந்த முருகன் சிலையைக் கைப்பற்றி, திருப்பரங்குன்றத்துக் கொண்டுவந்து, நிலைநிறுத்தி வழிபாடு செய்தான்.

போர் செய்வதில் மட்டுமன்றி ஆட்சி நிர்வாகத்திலும் நெடுஞ்செழியன் வல்லவனாக இருந்தான். இக்காலத்தில் அரசின் மூன்று அங்கங்களாக அமைச்சரவை, சட்டப் பேரவை, நீதிமன்றம் ஆகியவை அமைந்திருப்பதுபோல, நெடுஞ்செழியன் காலத்தில் காவிதிமாக்கள் (அமைச்சர்), நாற்பெருங்குழு, அறங்கூறு அவையம் (நீதிமன்றம்) என்ற அமைப்புகள் நாட்டை நிர்வாகம் செய்ய அரசனுக்குத் துணை புரிந்தன. நாட்டு மக்களின் பாதுகாவலுக்காக நகர்க் காவல் படையும், வழிக்காவல் படையும் இருந்தன. மதுரை மாநகர் மக்கள் திருடர் பயமின்றி நன்றாக உறங்க, சிறந்த காவல் படை ஒன்று மதுரை மாநகரில் இயங்கி வந்தது. வணிகர் குழுக்களும், தொழிலாளர் குழுக்களும் நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்தன. மாங்குடி மருதனாரைத் தலைவராகக் கொண்ட புலவர் குழு தமிழை வளர்த்தது. நெடுஞ்செழியன் நாடெங்கும் நீர்நிலைகளைத் தோற்றுவித்து நாட்டை வளம் பெறச் செய்தான்.

நெடுஞ்செழியன் 'கூடல்' என்று வழங்கிய தலைநகரின் பெயரை 'மதுரை' என்று மாற்றினான்.

சேரர்களில் செங்குட்டுவனைப் போலவும், சோழர்களில் கரிகால் வளவனைப் போலவும், சங்ககாலப் பாண்டியர்களில் நெடுஞ்செழியன் தலைசிறந்தவன் ஆவான்.

### கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி (கி.மு. 150-125):

கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி நெடுஞ்செழியனின் மூத்த மகனாக இருக்க வேண்டும். தந்தையைப் போலவே மாறன் வழுதியும், பல போர்களில் ஈடுபட்டான். 'தமிழ்நாடு பிறருக்கும் பொது' என்ற சொல்லைப் பொறுக்காமல், இவன் மற்ற தலைவர்களிடம் திறை பெற்றான். எதிர்த்த பகைவரைப் புறமுதுகிட்டு ஓடும்படி செய்தான். வடபுல மன்னர் வாடப் போர் செய்வதற்குத் திட்டமிட்டான்.


மாறன் வழுதி நற்றிணையைத் தொகுப்பித்தான் என்று அத்தொகையின் இறுதியிலுள்ள குறிப்புக் கூறுகிறது. குறுந்தொகையும் இவன் காலத்திலேயே தொகுக்கப்பட்டிருக்கலாம். மாறன் வழுதி எழுதிய பாடல்கள் இவ்விரு தொகை நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.

### இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் (கி.மு. 150-125):

இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் நெடுஞ்செழியனின் இளைய மகனாக இருக்க வேண்டும். மாறன் வழுதி இளவயதிலேயே இறந்து போனதால் நன்மாறன் பாண்டிய நாட்டின் அரசனானான்.

மருதன் இளநாகனார் என்ற புலவர், மூவேந்தர்களில் மேம்பட்டவனான நன்மாறன் அறநெறிப்படி ஆட்சி செய்ய வேண்டுமென்றும், வேண்டியவர்களுக்காகச் சட்டத்தை வளைத்துச் சலுகைகள் தரக்கூடாது என்றும், வேண்டாதவர்கள் என்பதனால் அவர்கள் நற்குணங்களை ஒதுக்கித் தள்ளித் துன்புறுத்தக் கூடாதென்றும் கேட்டுக் கொள்கிறார். நக்கீரரோ நன்மாறனைச் சிவன், முருகன், கண்ணன், பலராமன் என்ற கடவுளரோடு ஒப்பிட்டுப் பாடுகிறார். நன்மாறனிடம் பரிசு பெறலாம் என்று நம்பி வந்து ஏமாந்துபோன இரண்டு புலவர்கள் பாடல் களிலிருந்து, இவன் செல்வம் மிகுந்தவன் என்பதும், படைபலம் உடையவன் என்பதும், வளர்ந்த புதல்வர்களை உடையவன் என்பதும், ஈயாத கஞ்சன் என்பதும் புலனாகின்றன.

இவன் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனோடு போர் செய்து கொண்டிருந்தபோது, காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்ற புலவர் இருவரையும் அமைதி செய்ய முயன்றார். புலவர் முயற்சி பலனளிக்கவில்லை. நன்மாறன் சோழனைத் தோற்கடித்து, சோழநாட்டை விட்டு ஓடச் செய்தான். சோழன் மலையமானின் முள்ளூரில் ஒளிந்திருந்தான். நன்மாறன் இறந்தபின், அவன் மகனான வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி பாண்டிய அரசனானபோது, காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்



கண்ணனார் சோழனும் பாண்டியனும் நட்புப் பூண்டு வாழச் செய்தார்.

### வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி (கி.மு. 125-100):

நன்மாறனுக்குப் பிறகு அவனுடைய இரு புதல்வர்கள் பாண்டிய நாட்டைப் பங்கு போட்டுக்கொண்டு ஆட்சி செய்தனர். வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி மதுரையைச் சூழ்ந்த பகுதியை ஆட்சி செய்ய, உக்கிரப் பெருவழுதி கானப்பேரைச் சூழ்ந்த பகுதியை ஆளலானான்.

நன்மாறன் இறந்த பிறகு, பாண்டிய நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. இக்குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் மலையமான் கண்ணன் உதவியோடு இழந்த அரசை மீண்டும் பெற்றான். வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி சோழனோடு சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டான். உறையூர் தர்பார் மண்டபத்தில் சோழனும் பாண்டியனும் ஒன்றாக வீற்றிருந்து மகிழ்ந்தார்கள்.

### கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதி (கி.மு. 125-100):

நன்மாறனின் மற்றொரு மகனாகிய உக்கிரப் பெருவழுதி, வேங்கைமார்பனிடமிருந்து கானப்பேர் கோட்டையைக் கைப்பற்றினான். கானப்பேர் இப்போது காளையார்கோயில் என்று வழங்குகிறது. சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி செய்த வேள்வியில் சேரமான் மாரிவெண்கோவுடன் உக்கிரப் பெருவழுதியும் கலந்து கொண்டான். அத்தருணம் ஔவையார் மூவேந்தரையும் வாழ்த்திப் பாடினார்.

உக்கிரப் பெருவழுதி உருத்திர சன்மன் என்பவனைக் கொண்டு அகநானூற்றைத் தொகுப்பித்தான். உருத்திரசன்மன், மதுரை உப்பூரிகுடி கிழான் மகன் என்று கூறப்படுகிறான். குறுந்தொகையைத் தொகுத்தவன் பெயர் பூரிக்கோ என்று காணப்படுகிறது. பூரிக்கோவும், உப்பூரிகுடி கிழானும் உறவினராக இருக்கலாம். அவ்வாறானால் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகிய மூன்று தொகைகளும் உப்பூரிகுடி கிழான் குடும்பத்தவரால் மாறன்வழுதி காலத்திலும், உக்கிரப் பெருவழுதி காலத்திலும் கி.மு. **150–100** என்ற காலநிலையில் தொகுக்கப்பட்டிருக்கலாம்.

உக்கிரப் பெருவழுதியின் இரண்டு பாடல்கள் சங்கத் தொகைகளில் இடம் பெற்றுள்ளன.

### சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் (கி.மு. 100-75):

சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனின் பேரன் என்பதை நன்மாறன் என்ற பெயரால் அறிகிறோம். வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதிக்குப் பிறகு மதுரைப் பகுதியை இவன் ஆண்டிருக்கலாம்.

இவன் காலத்திற்குப் பிறகு பாண்டியநாடு தன் சுதந்திரத்தை இழந்து களப்பிரர்க்கு அடிமைப்பட்டு விட்டது.

**- சங்ககால மன்னர்களின் காலநிலை** *நூலிலிருந்து...*

*வெளியீடு :* உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

□ □ □





# தயிர்க்காரி

*~ மாஸ்தி வெங்கடேச ஐயங்கார்*

பல வருடங்களாய் மங்கம்மா எங்களுக்குத் தயிர் ஊற்றி வருகிறாள். எங்கள் உறவு இந்த நகரில் வழக்கத்திலிருக்கும் வகையைச் சேர்ந்தது. மற்ற இடங்களில் அன்றாடம் உங்களுக்குத் தேவையான தயிரைக் கொண்டு வந்து ஊற்றி விட்டுத் தயிர்க்காரி மாதக் கடைசியில் பணம் வாங்கிக் கொள்ளுவாள். இங்கோ தயிரை ஊற்றிய கையோடு அன்றன்றைக்கே பணப் பட்டுவாடா நடப்பதோடு, தினம் இவ்வளவு தயிர் வாடிக்கையென்ற கட்டாயம் இல்லை.

அநேகமாய் எல்லா நாட்களிலும் தயிர்க்காரி எங்கள் வீட்டின் வழியே போவாள். அப்போது வீட்டுக்குள் நுழைந்து தயிர் வேண்டுமா என்று கேட்பாள். தேவையானால் வாங்கிக் கொண்டு, அன்றைய நிலவரத்தில் அது என்ன விலையோ அதை அன்றைக்கோ அல்லது மறுநாளோ அவளுக்குக் கொடுத்து விடுவோம். அவளுடைய கிராமம் ஆவலூருக்குப் பக்கத்திலிருக்கிறது. அதன் பெயர் எனக்கு மறந்து விட்டது. வெங்காபுரமோ என்னவோ, நான் பரிவோடு பேசினதால் மங்கம்மா சில சமயம் தன் கிராமத்திலிருந்து நகருக்குப் போகையிலும் திரும்பி வருகையிலும் என்னைச் சந்திப்பாள். முற்றத்தில் உட்கார்ந்து எதைப்பற்றியாவது பேசுவாள். வெற்றிலையிருந்தால் மெல்லுவது, இல்லாவிடில் அதைக் கேட்டு வாங்கிக்கொள்ளுவாள். பிறகு கொஞ்ச நேரம் ஒய்வெடுத்துக் கொண்டு, தன் ஊருக்குப் போய்விடுவாள். எனக்கு ஒழிச்சலிருந்தால் அவள் தன் வீட்டுக் கஷ்டங்களை என்னிடம் ஒரு பாட்டு அழுதுவிட்டு என் கஷ்டங்களைத் தனக்குச் சொல்லும்படி கேட்பாள். அவளிடம் சொல்லும்படி எனக்கு என்ன கஷ்டம் இருக்கிறது? பகவான் புண்ணியத்தில் எனக்கு எல்லாமே நல்லபடியாயிருக்கிறது. மிஞ்சிப் போனால், பூனை வந்து பாலைக் குடித்து விட்டதென்றோ, இரவில் எலிகள் வெள்ளரிக்காயைத் தின்று விட்டனதென்றோ தான் நான் சொல்லக் கூடியதாயிருக்கும். அம்மாதிரி விஷயங்களை அவளிடம் நான் சொன்னால், “அட, அதுதான் உலகப் போக்கு'' என மங்கம்மா சொல்லுவாள். பிறகு அதுவே அவளேச் சமாளிக்க முடியாத இந்த உலகை நிர்வகிப்பதற்கான குறிப்புகளோடு தன் சொந்த அனுபவம் பற்றிப் பேச வைக்கும். இப்படியாக நானும் மங்கம்மாவும் மிக நெருங்கிய சிநேகிதிகளானோம்.

ஒரு மாதத்திற்கு முன் ஒரு நாள் மங்கம்மா வழக்கம்போல் வந்து தயிர் வேண்டுமா என்று கேட்டாள். நான் உள்ளேயிருந்தேன். “ஆமா, எங்களுக்குத் தயிர் வேணும்'' என்று சொன்ன என் குட்டிப் பையன் அவளிடம் சென்று, “தா'' என்று கையை நீட்டினான். மங்கம்மா கீழே உட்கார்ந்து நல்ல கட்டித் தயிராய் ஒரு விண்டு எடுத்து அவனுடைய கையில் வைத்தாள்.

“அம்மாவை ஜல்தியா வரச் சொல்லு, நா போகணும்'' என்று அவனிடம் கூறினாள், அதே சமயம் நான் வெளியில் வந்தேன்.

“தங்கமாட்டமா ஒரு புள்ளையப் பெத்து வச்சிருக்கே, தாயீ, நீ ரொம்ப நல்லவ. அதுக்கேத்த மாதிரியே புள்ளையும் அமைஞ்சிருக்கு. ஆனா, தாயீ, இதனாலெல்லாம் என்ன பிரயோசனம்? அது பெரிசாரமட்டுந்தான். பெரியவனானா எதாச்சும் ஒரு மிருகம் வந்து அவனைச் சொந்தம் கொண்டாடும். அம்மா அம்மானு அழகா கூப்புடற புள்ளை, அப்போ அம்மா இருக்காளா செத்துட்டாளானு கூடக் கேக்க மாட்டான்'' என்றாள் மங்கம்மா.

"ஏதோ நடந்திருக்கு போலயிருக்கே மங்கம்மா. ஒம்மகன் ஒன்னை நல்லபடியாத்தானே நடத்தறான்? என்றேன் நான்.

"ஒ, அந்த மாதிரியெல்லாம் எதிர்பாக்கறதுக்கு, ஒருவேளை நா முட்டாளா தான் இருக்கணும். எம் புருசன் என்னைக் கை வுட்டிட்டான். எம் மவங்கிட்டேயிருந்தும் பெரிசா நா ஒண்ணும் எதிர்பாக்கல்லே''.

"ஏன் மங்கம்மா, நீ ஒம் புருஷனோடே சந்தோஷமாயிருக்கிறதால்லே நா நினைச்சேன்''.

"பாரு, தாயீ, நல்ல சேலையா கட்டிக்கிட்டு அழகாயிருக்கணும்னெல்லாம் நா ஒண்ணும் பண்ணிக்கில்ல. அதை இன்னொரு பொம்பளை செஞ்சா. எம்புருசன எங்கிட்டேயிருந்து இழுத்துக் கிட்டுப் போயிட்டா. பேசாம அதைப் பொறுத்துக்கறதே நல்லதினு நா நினைச்சேன். தனக்குனு ஒரு வூடு, பொண்டாட்டினுயிருக்கு. எப்ப வேணுமின்னாலும் அங்கே வரலாம்னு அவன் உணரணும்னு வுட்டுப் போட்டேன். யம்மா, நா சும்மா முணகக் கூடாது. பாலுந் தயிரும் அமிருதம், அதை நாம்ப காசுக்கு விக்கக் கூடாதினு சொல்லுவாங்க. அந்தப் பாவத்த நா செஞ்சிட்டேன். அதுக்கு அனுபவிக்கிறேன். எம் புருசன் போயிட்டான். எந்தலையெழுத்து, ஆனா, பாரு, நீ சாக்ரதையாயிருக்கணும் தாயீ, ஒங்கூட்டுக்காரு ஆபீசிலேந்து வூட்டுக்கு வாரயிலே அழகான சேலையா கட்டிக்க. ஆம்பளைங்களுக்குச் சபல புத்தி. அழகா சேலை, ரவிக்கைனு போட்டுக் கிட்டுத்தான் அவங்களை ஒங்கிட்ட புடிச்சி வைக்கமுடியும். பூவும் வாசனை செண்டும் வாங்கி வச்சி ஒன்னைப் பளிச்சினு வச்சிக்க'' என்று சொல்லிவிட்டு, நான் கட்டியிருந்த புடவையை நோட்டம் விட்ட அவள் தன் தலையை ஆட்டிக் கொண்டாள்.

"தனியா வூட்டுக்குள்ளே இருக்கப்ப, சோறுகீறு ஆக்கறப்பெல்லாம் இது போதும். ஆனா, சாயந்தரம் நீ இதை மாத்தியாவணும். எதனாச்சி அழகாயிருக்கறதா பாத்து கட்டு''.

நான் சிரித்தேன். அதில் நல்ல அர்த்தம் இருக்கிறது தான். ஆனால் இந்த ஞானோதயம் வர அவள் எத்தனை வருடம் துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது.

"நீ சொல்றது வாஸ்தவந்தான் மங்கம்மா'' என்றேன்.

"பாரு தாயீ, நமக்குத் துரோகம் பண்ணாம, நம்மகிட்டயே பிரியமாயிருக்கறாப்பல புருசனை வச்சிக்கிறதுக்கு நாலு வழியிருக்கு. சில பேரு சொல்லுவாங்க, இந்த வேரு, இல்லேனா அந்தப் பச்சிலையை சாப்பாட்ல வச்சிக் குடுனு. அதெல்லாம் அவங்களை நேரா சுடுகாட்டுக்கே கொண்டு போவற மாதிரி. அந்த மாதிரி யோசனையெல்லாம் கேட்டுக்காதே. அப்பப்ப அவருக்கு எதனாச்சி தின்றதுக்கு நல்லதா குடு. எவ்வளோதான் வூட்ல கஸ்டமிருந்திச்சினாலும் நல்லதா உடுத்து. அவுங்க ஆசைப்படறாப்பல வச்சிக்க.... சிரிச்ச முகமாவே இரு. சும்மா – சும்மா கடைக்கண்ணிக்கு அவரை அனுப்பாம, ஒனக்கு வேணுங்கற மளிகைச் சாமான் எல்லாத்தையும் மாசா மாசம் ஒரேவாட்டியா வாங்கியாந்திடு. கொஞ்சம் பணத்தை மிச்சப்படுத்தி வச்சி, அவரு கேக்கையில ஒண்ணோ ரெண்டோ குடு. இதெல்லாந்தான் அந்தப் பச்சிலையும் வேரும். ஒரு பொம்பளை இதைமட்டும் செய்யட்டும் பாரு, அவ புருசன் ஒரு நாயாட்டம் அவ பின்னுக்காவே சுத்துவான். இதை மறந்தியோ, அவனோட யோசனையெல்லாம் அலைய ஆரம்பிச்சிடும்''.

"புத்திசாலிப் பொம்மனாட்டி இவ'' என்ற எண்ணம் அவளுக்கு விடை தரும்போது எனக்குள் ஓடியது.

இரு வாரங்களுக்கு முன் ஒரு நாள் காலை மிகவும் உற்சாகம் இழந்தவளாய் அவள் வந்தாள்.

"என்ன சமாச்சாரம், மங்கம்மா?'' என்று கேட்டேன்.

அவள் தன் முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டே, "ஒண்ணும் சந்தோஷமில்லே தாயீ, எதுக்கு அதைப் பத்திப் பேச்சு, யாருக்கும் நா வேண்டாதவளாட்டம் இருக்கேன்'' என்றாள்.

"என்ன நடந்திச்சு? ஒம் மகனோட சண்டை போட்டயா?''

"போதும்மா பேச்சு. அந்தச் சின்னக் குழந்தையப்பத்தி ஒனக்குச் சொல்லியிருக்கேனே. அதா யெம் பேரன். அது என்னவோ செஞ்சிருச்சினு அவங்கம்மாகாரி போட்டு அடிச்சா. என்னால தாங்க முடியல்லே. ராச்சஸியாட்டம் அந்தப் புள்ளையப் போட்டு அடிக்கிறியே, மிருகத்தனமான்னு கேட்டேன். என்னை நிமிர்ந்து முறைச்சிப் பாத்திட்டு மோசமா திட்டிப் போட்டா. ஒம் புருசனைப் பெத்தெடுத்த என்னைப் பாத்தா இந்த மாதிரிப் பேச்சு பேசறேனு கேட்டிட்டு, அவன் வரட்டும்,



அதைப்பத்தி அவனே எதாச்சும் சொல்லணும்னு சொன்னேன். அவன் வூட்டுக்கு வந்தப்ப நடந்ததெல்லாம் சொல்லி, பாவம் அந்தப் புள்ளையப் போட்டு இரக்கமில்லாம அடிக்கறா, அவ. ஏன்னு நா கேட்டா



எவ்வளோ தெகிரியமா என்னைத் திட்டறா. அவளுக்குப் புத்தி வர்ராப்பல நீ எதனாச்சி சொல்லமாட்டே? அப்படீனு கேட்டேன். ''எனக்குப் புத்தி சொல்லணுமா?''னு நடுவிலே பேசின அவ, "நா பெத்த புள்ளைய நல்லபடியா வளக்கறதுக்கு எனக்கு உரிமையில்லையா? நீ ஒம் மவனைப் பெத்த மாதிரி நா இதைப் பெக்கலியானு கேட்டா''.

"வாஸ்தவந்தான். அவ அவனுக்குப் பொண்டாட்டி. நா அவனுக்கு வெறும் அம்மாதானே! அவ எப்பவேணுமினாலும் எம்மேல பாயலாம். நா ஒண்ணும் செய்யமுடியாது''.

"சரிம்மா, அது அவ புள்ளை, நீ எதுக்குத் தலையிடறே? ஒழுங்காயிருனு யாருக்காச்சும் நீ உத்தரவு போடணுமினா, தோ, நான் இருக்கேன்'' அப்படினு சொன்னான்.

"அப்படினா, எம்மேலதான் தப்புனு நீ நினைக்கிறியா?''

"சரியா தப்பாங்கறத பத்தி எனக்குத் தெரியாது. ஆனா அவளோட புள்ளைய அடிக்கக் கூடாதுனு நீ சொல்ல முடியாது.''

"ஒஹோ. நீ சுத்தமா அவ கைக்குள்ளயிருக்கே. அவ தன்னோட புள்ளைய போட்டு அடிக்கலாம். என்னை எவ்வளவு வேணுமினாலும் திட்டலாம். அதெல்லாம் ஒனக்குத் தப்பா தெரியாது. நாளைக்கு, என்னை வெளிலே துரத்துடானு ஒன்னைக் கேப்பா, நீ செஞ்சாக் கூட ஆச்சரியப்படறதுக்கு இல்ல''.

"சரிம்மா, என்னை என்ன செய்யணுங்கறே? ஒருவேளை, எம் பொண்டாட்டி இங்கிருக்கிறதால ஒன்னால இங்கே இருக்க முடியாதினு நீ சொல்ல, நீ இங்கிருந்தா தன்னால இருக்க முடியாதினு அவ சொன்னா, ரெண்டில ஒண்ணை நா செய்யணும். பாவம், அவதான் கதியத்த பொம்பளை''.

"அப்ப எனக்குக் கதியிருக்கா? என்னை யாரு வச்சி காப்பாத்துவாங்க?''

"சரிதான், நீ பணம் சேத்தி வச்சிருக்கே. மாடுகன்னு நிறைய இருக்கு.... என்னையே நம்பி நீ இல்லையே''.

"அதனால என்னைத் தனிவூடு பாத்துக்கிட்டுப் போங்கிறியா?''

"அது ஒன் சௌகரியத்தப் பொறுத்தது. தனியாத்தான் போயிருப்பேனு நீ ஒத்தைக் காலிலே நின்னா, நா வேணான்னு சொல்லமாட்டேன். இந்தச் சண்டை சச்சரவெல்லாம் போதும் எனக்கு''.

"அப்ப ரொம்ப சரி, இன்னிக்கி மதியத்திலேந்து நா தனியா போயிக்கறேன். நீயும் ஒம் பொண்டாட்டியும் சந்தோசமாயிருங்க''.

"இதைச் சொல்லிப்போட்டுத் தயிரை எடுத்துக்கிட்டு நா வந்திட்டேன்'' என்று நடந்ததை விவரித்து முடித்த மங்கம்மா தாங்கமுடியாது அழுது தீர்த்தாள். என்னால் முடிந்த அளவு அவளைத் தீர்மானம் செய்தேன்.

"மறந்துடு அதை மங்கம்மா, வீட்டுக்குப் போய் முன்னே மாதிரி அவங்களோடயே இருப்பேனு எனக்குத் தெரியும். இதெல்லாம் தானா சரியாயிடும்''.

அவளிடம் பழைய உற்சாகம் இல்லாவிடினும், மறுநாள் சிறிது அமைதியாகக் காணப்பட்டாள். மகனோடு சமாதானமாயிற்றா என்று அவளைக் கேட்டேன்.

"சமாதானம்! இவ இருக்காளே, எம் மருமவ... இவ தாயும் புள்ளையும் சுமுகமாயிருக்க வுடுவாள்னு நினைக்கறே? நேத்து நா வூட்டுக்குப் போனா, எஞ்சட்டிப் பானைங்க், கேவுரு ஒரு பானை, அரிசி ஒரு பானை, உப்பு மொளவா கொஞ்சம்னு எல்லாத்தையும் ஒரு பக்கமா அவ எடுத்து வச்சிருந்தா. அவளும் அவ புருசனும் சாப்புட்டாச்சி. அவ ஒலகத்தில் எந்தக் கவலையுமில்லாம பாய்மேல தூங்கிட்டிருந்தா. நல்லாத் தெரியிது. என்னை வெளியிலே தள்ளறதுக்கு எதாவது சால்ஜாப்பு கிடைக்குமானு அவங்க காத்திருந்தாங்கன்றது, நானே அதைக் குடுத்திட்டேன். பரவால்லே, நானா அவங்ககிட்டே வலுவிலே போகமாட்டேன். இப்ப நா தனியாத்தானிருக்கேன். எவ்வளோ தூரம் போறாங்க, பாத்தியா தாயீ? தினம் நா வெளிலே போறதுக்கு முன்னாலே அந்தப் புள்ளைக்குக் கொஞ்சம் தயிர் குடுப்பேன். இன்னக்குச் சரியா அந்த நேரம் பாத்து, அவ குழந்தைய வெளில தூக்கிட்டுப் போயிட்டா. நா அவ புள்ளையோட பேசறதே சுத்தமா அவளுக்குப் புடிக்கல்லே''.

கேவலம் சாதாரணமான ஒரு சம்பவம் இவ்வளவு பெரிதாகப் போயிருக்க வேண்டுமா என்று நான் ஆச்சரியப்பட்டேன். ஆனால் அதைப் பொறுத்தவரை நான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. வழக்கமாய்ச் சொல்லும் சில சமாதான வார்த்தைகளைக் கூறி அவளை அனுப்பி வைத்தேன்.

இதற்குப் பின் ஓரிரு நாட்களுக்கு மங்கம்மா இதைப்பற்றி மீண்டும் பேசவில்லை. சரி, அவள் தனியாகக் குடும்பம் நடத்துகிறாள் என்று இருந்தேன். பிறகு ஒரு நாள் அவள், நான் அணிந்திருந்த வெல்வெட் ரவிக்கையின் விலை என்னவென்று கேட்டாள்.

'இதிலே என்ன அவ்வளோ இதா கேக்கிறே, மங்கம்மா?'' என்று நான் கேட்டேன்.

"பாரு தாயீ, இதுவரை எம்மவனுக்கும், பேரனுக்கும் பணம் சேத்திகிட்டிருந்தேன். இனிமே அப்படிச் செய்யறதிலே அர்த்தமேயில்லேனு புரிஞ்சிகிட்டேன். எனக்கொரு வெல்வெட் ரவிக்கை வாங்கலாமேனு நினைச்சேன்.

"அது ஏழெட்டு ரூபாயிருக்கலாம்.''

வீட்டுக்குப் புறப்பட்டுப் போன அவள், வழியிலேயே ரவிக்கை வாங்கிவிட்டாள். மறுநாள் வரும்போது அதை அவள் அணிந்திருந்தாள்.

"தாயீ இதப் பாத்தியா, எம்புருசன் எங்கூட இருக்கையில ஒரு நல்ல சேலையினு நா எடுத்ததில்லே, அவன் இன்னொரு பொம்பளை பின்னால போயிட்டான். எம்மவனுக்குனு நா பணத்தைச் சேத்து வச்சேன். ஒனக்கு தெரியும் அவன் எப்படி மாறிப் போயிட்டானு. இப்ப நா வெல்வெட்ல ரவிக்கை போட்டுக்கிட்டு ஜம்பமாக ஜமாய்க்கறேன்.''

தன் மகனால் நிராகரிக்கப்பட்ட அதிர்ச்சியால், அவளுடைய மனம் அலைக்கழிக்கிறதோ என நான் நினைத்தேன். மித மிஞ்சிய பாசம் சில சமயம் அம்மாதிரி ஆகிவிடும். எப்படியிருந்தாலும் நான் ஒன்றும் சொல்லவில்லை.

வெல்வெட் ரவிக்கையின் கதை அத்தோடு முடிந்துவிடவில்லை. கிராமத்திலுள்ள சிலரோடு சண்டை போடவும் அது இட்டுச் சென்றது. கிராமத்துப் பையன்களில் ஒருவன் பெங்களூரிலுள்ள பள்ளிக்கூடம் ஒன்றுக்குப் போய் வருபவன், காலர், கழுத்து டை முதலான மேனாட்டுப் பாணியில் உடுத்தியிருந்தான் அவன். அவன் மங்கம்மாவை எதிர்கொண்ட போது தமாஷாகச் சொன்னான், "அட, மங்கம்மா, இப்ப என்ன பண்டிகை? இந்த வெல்வெட் ரவிக்கைக்குச் சொல்றேன்...''

மங்கம்மாவிற்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. "டேய், அதிகப் பிரசங்கி! வாயை மூடு! ஒங் கழுத்த சுத்தியிருக்கிற அந்தத் துணியால நீயே அமுக்கி மூச்சத் திணர்றே. அப்பிடியிருந்துகிட்டு என் வெல்வெட் ரவிக்கையைப் பாத்துச் சொல்றே? சூடான வார்த்தைகள் வீசப்பட்டு, சிறிய கூட்டம் கூடிவிட்டது. அவளைப் பார்த்துக் கேலி செய்து சிரித்தனர்.

மறுநாள் தவறாமல் எனக்கு இது தெரிவிக்கப்பட்டது. மங்கம்மாவின் காதில் விழுமாறு அவளுடைய மருமகள் அவளைப்பற்றி இஷ்டத்திற்கு மற்றவர்களிடம் விமர்சிக்க இத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டாள்.

"எனக்கொரு ரவிக்கை வாங்கறதுக்கு எம் மாமியாருக்கு முடியாது. ஆனா, அவளை நீ பாத்தியா?'' என்று அக்கம் பக்கத்திலெல்லாம் அவள் சொன்னாள். தன் மகன் கல்யாணத்தின் போது மணப் பெண்ணுக்கு ஒரு நெக்லெஸ், தோடு, வளையல்கள், அட்டிகைப் பதக்கமெல்லாம் மங்கம்மா கொடுத்திருக்கிறாள். மேலும், வருடா வருடம் அவளுக்காக இவள் ஏதாவது ஒரு நகை வாங்கிக் கொண்டுதான் இருக்கிறாள். மருமகள் இதையெல்லாம் மறந்துவிட்டாள்.

முதல் இரண்டு தடவைகளில் அவளுடைய வியாக்கியானத்தையெல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாத மங்கம்மா, அதற்குப் பிறகுதான் தன் மகனிடம் முறையிட்டாள்.

"ஓம் பொண்டாட்டி என் ரவிக்கையைப் பத்தி மத்தவங்ககிட்டே மோசமா பேசிக்கிட்டு வர்ரா. அவளுக்கு நா எதுவுமே வாங்கிக் குடுக்கலேனு சொல்லிக்கிட்டே போறா. அவளுக்கு நா வளையல், நெக்லெஸ், தோடு, தொங்கட்டானெல்லாம் குடுக்கல்லியா?''

ஏதாவது சொல்லலாமென மகன் வாயெடுப்பதற்குள் அவனுடைய மனைவி குறுக்கிட்டுப் பேசினாள்.

"கிழட்டு முண்டச்சிக்குத் தோடும் வளையலும் வேணும் போலயிருக்குது. போட்டுக்கிட்டு அவ மினுக்கட்டும்''.

"தா, ஜாஸ்தி பேசாதடி'' என்று மெல்லக் கண்டித்துவிட்டு அவளுடைய கணவன், தன் அம்மாவைப் பார்த்துச் சொன்னான், "யம்மா, போதும் இந்தச் சண்டையெல்லாம். எம் பொண்டாட்டிக்கு நீ குடுத்த நகை நட்டெல்லாம் ஒனக்கு வேணுமினா, திருப்பி நீயே எடுத்துக்க''.

மங்கம்மா தன் மகன் பேச்சைக் குறித்துச் சொன்னாள், "பாரு தாயீ, அக்கம்பக்கத்திலே என்னைப் பத்திப் பேசறதை நிறுத்துனு அவன் பொண்டாட்டிய கேக்க மாட்டேங்கிறான். நா தப்பு செஞ்சாப்பல, என்னைப் பாத்து நகையெல்லாம் எடுத்துக்கனு சொல்றான். வாழ்க்கையே வெறுத்துப் போச்சு''.



அவளுக்காக நான் மிகவும் வருத்தப்பட்டேன். அவள் வயதானவள், இவன் அவளுக்கு ஒரே மகன். தாராளமாய் அவனுடைய மனைவி தன் மாமியாருடன் சரி செய்து கொண்டு போகலாம். அவளுடைய குழந்தையை அடிக்க வேண்டாமென்று கிழவி சொன்னதால்தான் இதெல்லாமே வந்தது. ஜனங்கள் ஏன் அதிக விவேகம் இல்லாதிருக்கிறார்கள்? ஆனால், பொதுவாகச் சண்டைகள் உருவாவதே இப்படித்தான். இரண்டு பேர் ஒருவருக்கொருவர் பிடிக்காமலிருந்தால், ஒன்றுமேயில்லாத விஷயம் கூடச் சண்டையைக் கிளப்பிவிடும். பிறகு சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் முடிவில்லாத கஷ்டம்.

இது நடந்து கொஞ்ச நாள் கழித்து வந்த மங்கம்மா என்னிடம் வேண்டினாள். "நீங்கெல்லாம் நல்ல மனுசங்க தாயீ. ஒன்னை நம்பலாம். நா கொஞ்சம் பணம் சேத்தி வச்சிருக்கேன். பாங்க்னு சொல்றாங்களே அதில நீ அதைப் போடமுடியுமா? ஜனங்க கண்ணு அது மேலே விழுந்து கிட்டேயிருக்கு''.

'என்னாச்சு?'

'எங்க வூர்ல ரங்கப்பானு ஒராளு இருக்கான். டம்பாச்சாரி. அதோட சூதாடி. நேத்துத் தயிரை வச்சிக்கிட்டு வந்தப்ப இவன் எங்கூடவே வந்து, நல்லாயிருக்கியா மங்கம்மானு கேட்டான். ஏதோயிருக்கேன். எங்கூட்டு விஷயம் எப்பிடினுதான் ஒனக்குத் தெரியும். அப்படினேன்''.

"ஆமா மங்கம்மா, எனக்குத் தெரியும். நீ சொல்றது சரிதான். இஷ்டத்துக்கு நடந்துகிறவங்களோட யாராலயும் சந்தோஷமாயிருக்க முடியாது. இந்த இளசுங்க வாயை அடக்கிட்டு இருக்க முடியல்ல. ஆனா வயசான நாமதான் அதெல்லாம் அப்படியிருக்கணுமினு எதிர்பார்க்கறோம். ஆனா அப்படித்தான் உலகம் போகுது மங்கம்மா''.

''நாங்க மேலே நடந்தோம். எதுக்கு இவன் எம்பின்னாலேயே வர்ரானு எனக்கு மனசு பக்குபக்குனு அடிச்சிட்டது. அந்தத் தோப்புக்குப் பக்கமா ஒரு ஆழமான கிணறு இருக்குது. அத்தோட எம் பையிலே கொஞ்சம் பணமும் வச்சிருந்தேன். ஆனா ஒண்ணும் நடக்கல்ல. அவன் எங்கிட்டே கொஞ்சம் சுண்ணாம்பு கேட்டான். வாங்கிக்கிட்டு அவம் பாட்டுக்குப் போயிட்டான். இன்னைக்கு மறுபடியும் அவன் அங்கே இருந்தான். இது அதுனு பேசிட்டு, அப்புறம் சொல்றான், 'மங்கம்மா எனக்குப் பணம் அவசியமா தேவைப்படுது. நீ கொஞ்சம் எனக்குக் கடன் தாமுடியுமா? வர்ர அறுப்புக்கு என்னோட கேவுரை வித்து ஒம்பணத்தத் திருப்பிடறேன், அப்படீனு. பணமா, எங்கிட்ட எப்படியிருக்கும்னு கேட்டேன். ஆ, எங்க எல்லோருக்கும் தெரியும். பணத்தப் பொதைச்சி வச்சிருக்கிறதாலே என்ன பிரயோசனம், மங்கம்மா? நீ எனக்கு ஒதவலாம். அது போல கொஞ்சம் வட்டியும் சம்பாரிக்கலாம். அப்படீனுட்டு கொஞ்ச நேரங்கழிச்சி சொன்னான். 'நீ, ஒம்மவன், மருமவ எல்லாம் ஒண்ணாயிருந்தா நா ஒன்னைக் கேட்டிருக்க மாட்டேன். சகஜந்தான் நீ அவங்களுக்கு அப்பப்ப ஏதாச்சும் வாங்கிக் குடுக்க பிரியப்பட்டிருப்பே. ஆனா இப்ப நீ அவங்க கிட்டேயிருந்து பிரிஞ்சி தனியாயிருக்கே'' அப்படினு.

'பாரு தாயீ, ஒரு பொம்பள தனியாருந்தா மத்தவங்களுக்கு அவமேல கவனம் போவுது''.

அதைப்பற்றி என் கணவரிடம் பேசுவதாகச் சொன்னேன்.

மறுநாள் தயிரை அளந்து ஊற்றிவிட்டு, "உள்ளே போலாமா தாயீ? நீ பணத்த எண்ணிக்கலாம்'' என்றாள்.

''நா இன்னும் எங்க வீட்டுக்காரர்கிட்டே இதைச் சொல்லல்லே மங்கம்மா, இன்னொரு சமயம் பார்க்கலாம்.''

''ஆனா, நா பயந்துகிட்டேயிருக்கேன் தாயீ, இன்னைக்கிக் காத்தாலே தோப்புகிட்டே என்னை மறுபடியும் ரங்கப்பா வழிமறிச்சான். ஒக்காரு மங்கம்மா, ஒண்ணும் அவசரமில்லையேனு சொன்னான். நா உட்கார்ந்தேன். அவன் பலவந்தம் செய்வானோன்னு பயந்தேன். கண்டது போனதையெல்லாம் பேசிட்டு அவன் எங்கைய தொட்டுத் தூக்கி, "மங்கம்மா, பார்க்க நீ எவ்வளவு நல்லாயிருக்கே'னு சொன்னான்.

"தாயீ, நா இளம் வயசாயிருந்தப்ப, என்புருசங்கூட எங்கையப் புடிக்கமாட்டான். எவனும் எப்பவும் அதைப் புடிச்சதில்லை. இப்ப அது நடந்திருக்கு! உடனே சட்டுனு தூர இழுத்துக்கிட்டு பட்டுனு சொன்னேன். "போதும் இந்தப் பேத்தல் ரங்கப்பா, நீ எம்புருசனுமில்ல, நா எப்படியிருக்கேங்கறது ஒனக்கு அவசியமுமில்ல''. நேத்து அவன் எம் பணத்துக்கு ஆசைப்பட்டான், இன்னைக்கு— எம் —மானம். —என்னோட கண்ணாலத்தண்ணிக்கு எம் பக்கத்திலே ஒக்காந்து, மத்தவங்க அட்சத அரிசி தூவ, என்னைப் பொஞ்சாதினு சொன்னவன், என்னை இளம் வயசிலேயே வுட்டிட்டுப்



போயிட்டான். வேற எங்கெயோயிருந்த இன்னொரு பொம்பளை அவன் தேடிட்டுப் போனதைக் குடுத்திருப்பா, ஆனா, நா எங்கௌரவத்தைப் பத்திரமா காப்பாத்திட்டேன். இன்னைக்கு இந்தப் பொறுக்கி எங்கையைப் புடிக்கிறதுக்கு வந்திட்டான்?''

மங்கம்மாவின் விவகாரம் ஆபத்தானதொரு திசையில் திரும்புவதாய்த் தோன்றியது. "கவனி மங்கம்மா, நீ வம்புல மாட்டிக்கப் போறே. இதைப்பத்தி ஒம்மகன் கிட்டே சொல்லு. பழசையெல்லாம் மறந்துட்டு ஏன் நீ அவங்ககிட்டே திரும்பிப் போகமாட்டேங்கறே?''

"அப்பறம் என்னைப் பத்தி வூர்ல கதை கட்டிவுட்டு என்னை வூரைவுட்டே தள்ளி வைக்கிறதுக்கு எம் மருமவளுக்கு ஒரு சந்தர்ப்பம் குடுக்கிறதா?.. சரி, நேரமாவுது தாயீ, தயவு செஞ்சி ஒங்கூட்டுகாரருகிட்டே விசயத்தச் சொல்லி எனக்கு நாளைக்குச் சொல்லு''.

ஒரு மணி நேரம் கழித்து மீண்டும் திரும்பி வந்த அவள், "ஒரு விசித்திரமான விசயம் இன்னிக்கு நடந்திச்சு...'' என்று ஆரம்பித்தாள்.

"என்ன?''

"குழந்தக்கி நா கொஞ்சம் முட்டாய் வாங்கினேன்''.

எனக்கு இது விளங்கவில்லை. பேரக் குழந்தையை அவளிடம் நெருங்க விடுவதில்லையென்று என்னிடம் அவள் சொல்லியிருக்கிறாள்.

"எந்தக் குழந்தை?''

''ஏன், எம் பேரப்புள்ளைதான். வேறெந்தக் குழந்தையாயிருக்க முடியும்?''

''ஆனா, அதை ஒங்கிட்ட வர வுடறதில்லேனு சொன்னியே நீ...?

"மெய் தான். அம்மாகாரி அதைத் தடுக்கறா. ஆனா குழந்தை எங்கிட்டேருந்து பிரிஞ்சிருக்குமா? அவங்கம்மா பாக்காதப்ப, எங்கிட்ட ஓடி வந்திடறான், கொஞ்சம் பாலைக் குடிக்கிறான். தயிர் கேக்கிறான். நா அதைக் குடுத்திட்டா டான்சாடறான். அதையிதை உருட்டி லூட்டி செஞ்சா, அவங்கம்மா வந்து அவனைத் தூக்கிட்டுப் போப்போறான்னு நா சொல்லுவேனா, கப்சிப்னு அடங்கிப் போயிடுவான். புள்ளைங்களோட குறும்பைப் பாக்கறதே ஒரு சந்தோசம் தாயீ. அதனால இன்னைக்கு அவனுக்குக் கொஞ்சம் முட்டாய் வாங்கி எங்கூடையிலே வச்சேன். சங்கராபுரத்துகிட்டே மாமரத்திலேந்து ஒரு காக்கா பறந்து வந்து முட்டாய் பொட்டலத்த தூக்கிப் போயிடுச்சி''.

"அதைப்பத்தி கவலைப்படறதுக்கு ஒண்ணுமில்ல. இன்னும் கொஞ்சம் நீ வாங்கிட்டா போச்சு''.

"வாங்கிக்கலாம் அதுக்கென்ன, அதில்லேம்மா, காக்கா மேலே பட்டதுன்னா அது கெட்ட சகுனம்னு சொல்றாங்களே''.

"ஏன், பட்டா என்ன ஆகுமாம்?''.

''அப்படினா சாவுனு சொல்றாங்க தாயீ. அதனாலத்தான் நா கலங்கிப் போயிட்டேன். ஆனா அடுத்த நிமிசம், அதுவே நல்லதினு எனக்குப் பட்டது. என் உசிரைப் பத்தி யாருக்குமே கவலையில்ல. பகவான் கிட்டே சீக்கிரம் போயிடறதுதான் நல்லது. எப்பிடியோ, அதுதான் நடந்திச்சு...''

"முட்டாள்தனமாயிருக்காதே மங்கம்மா, காக்கா வந்து தூக்கிறாப்பல மிட்டாய் பொட்டலத்தை நீ வச்சிட்டு அதைக் காக்கா தூக்கிட்டுப் போன பின்னாடி, அதையே சாவுக்கு அறிகுறினு சொல்றியே! அசட்டுத்தனமாயிருக்காதே, வீட்டுக்குப் போ''.

''அப்போ, வேறே அர்த்தம் எதுவும் அதுக்கு இருக்காதினு நீ நினைக்கிறியா?''

"முட்டாளே, அதை மறந்துட்டு வீட்டுக்குப் போ''.

இந்தப் பெண் யோசிக்கும் விதம் அதிசயமாயிருக்கிறது. இவளுக்குத் தன் மகன் வேண்டும். மருமகளும் பேரனும் வேண்டியதாயிருக்கிறது. குடும்பத் தலைவியாக மற்றவர்களால் கௌரவமாய் நடத்தப்பட விரும்புகிறாள். எல்லாமே இயற்கையாய் மனிதனுக்கே உள்ளதுதான். இப்பொழுது அவளுக்கு அவள் வேண்டுவதெல்லாம் மறுக்கப் படுவதால், வாழ்க்கையே கசந்து விட்டது. இருப்பினும் அவள் மரணத்தைக் கண்டு பயப்படுகிறாள்! மேலும் அவள், அந்தப் பயத்தை மறைக்க விரும்புகிறாள், இந்தக் கிராமத்து ஜனங்களை எளிமையானவர்கள், ஒளிவு மறைவு இல்லாதவர்கள் என்று சொல்லுகிறோம். ஆனால், இவளுடைய மனம் எவ்வளவு சிக்கலானது. எண்ணங்களும் அடுக்கடுக்காக, ஒன்றின்மேல் ஒன்றாய் எவ்வளவு சிக்கலானவை! வாழ்க்கை என்று நாம் அழைக்கும் இது, ஒரு விசித்திர விளையாட்டாயிருக்கிறது.



அடுத்த தடவை மங்கம்மா வந்தபோது, புதியதாய் ஏற்பட்டுள்ள சில விஷயங்களைப் பற்றிச் சொன்னாள். அவளுடைய பேரன் அவளிடம் தங்கியிருக்க வந்திருந்தான். அவள் மகிழ்ச்சியுடன் இருந்தாள், "பையன் துணிச்சல் பாத்தியா!'' என்று சொல்லிவிட்டு, "அவ்வளோ சின்ன பையன் அவன், இவ்வளவு உயரங்கூட இல்லே, இருந்தும் அவங்கம்மாளை வுட்டிட்டு எங்கிட்ட வர்ரான்! அவன் ரகசியமா வர்ரான். ஆனா அவங்கம்மாகிட்ட திரும்பிப் போமாட்டேனு நேத்து வந்து சொன்னான். அவ வந்து அடிக்கிறேம் பாருன்னு அவனைப் பயங்காட்டினா, கலாட்டா பண்ணினான். ஆனா குழந்தை எங்காலோட ஒட்டிக்கிட்டு அஜைசய மாட்டேனிட்டான். நான் என்னமோ அவனைத் திரும்பிப் போன்னுதான் விரட்டினேன். அவங்கப்பாவுங்கூட அவனைத் தாஜா கீஜானு பண்ணினாரு. ஆனா, பையன் கேக்கவேயில்லே. அதென்னமோ விசித்திரமாயிருக்கு தாயீ, இந்தப் பத்து நாளா வூட்ல தனியா படுத்துத் தூங்கறதுக்கு நா கொஞ்சம் பயந்திட்டேன். ஆனா இந்தக் குட்டிப் பையன் இருக்கிறது எனக்குத் தெகிரியம் குடுத்திருக்குது – எனக்கு ஆம்பிளை, பாதுகாப்பிரக்கிறாப்பல இருந்திச்சி, என்னோட வளர்ந்த மவன் என்னை அவங்கூட வச்சிக்கமாட்டான். ஆனா எம்பேரப் பய எம்பக்கம் நிக்கறதா சொல்றான். கடவுள்தான் அவன் புத்தியில இதையெல்லாம் வச்சியிருக்கணும். ராவெல்லாம் எம்மருமவ ஆத்திரமாயிருந்தா. ஆனா குழந்தைய அது ஒண்ணும் பாதிக்கலே. இன்னைக்குக் காத்தாலே, தயிர் வூத்தறதுக்கு நா வெளியே போயிருக்கப்ப குழந்தைய தனியா வுட்டிருக்கக் கூடாதினு எனக்கு இருந்திச்சி. நா அவளோட வூட்டுக்கு அதை எடுத்திட்டுப் போனேன். அவன் உள்ளே போயிட்டான்''.

"ஆனா, ஒருவேளை அவ குழந்தையை அடிச்சா?''

இல்ல, அவ செய்யமாட்டா, அவன் எப்பவும் அவளோடயே இருக்கான் பாரு, அப்ப எப்பனாச்சி அவனை அடிப்பா, ஆனா, குழந்தை குறைஞ்சது ஒரு அரை நாளாச்சி கூட இருக்குதேனு சந்தோசமாயிருப்பா. அது அப்படித்தான் தாயீ. பாரேன், நாங்க ஒண்ணாயிருந்தப்ப, எம் மருமவ எவ்வளவு அழகுனு நா கவனிச்சதேயில்லே. நிச்சயம், அவ கோவப்படும்போது பாக்கறதுக்கு விசித்திரமாயிருக்கா. ஆனா, இப்ப நா அவளைத் தூரத்திலேந்து பாக்கறேன் – நீ சொல்ற மாதிரி அவ பாக்க அழகாத்தானிருக்கா. அதனால்தான் எம்மவன் அவளுக்கு அடிமையாயிருக்கான். எம்மவன் செய்யறதும் சரின்னே நா எடுத்துக்கிட்டேன். எப்ப அவன் உள்ளே வந்தான், எப்ப வெளியோ போனான்னு நா கவனிச்சதேயில்ல. இப்ப நா என் வூட்டு வாசப்படிலே உக்காந்துகிட்டு இன்னைக்கு அவன் வர்ரதுக்கு ஏன் இவ்வளவு நேரம் ஆச்சி, எதுக்கு இவ்வளவு சீக்கிரமா வூட்டை வுட்டு வெளியே போறான்னு ஆச்சரியப்படறேன். அவளுக்கும் தன் குழந்தையைப் பத்தி அதே மாதிரி தானிருக்கணும். அவ அவனை அடிச்சா, நாளைக்கு அவன் என்னோட பட்டணத்துக்கு வந்திடுவான். தாம் பெத்த குழந்தைய வுட்டிருவாளா அவ?''.

சிந்திக்கத் தெரிந்த பெண் – என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன். அவர்களுடைய கருத்து வேறுபாடுகள் சீக்கிரமே சுமுகமாகத் தீர்ந்துவிடும் என்று நான் உணர்ந்தேன்.

அதே தான் நடந்தது. இரண்டு காலைப் பொழுதுகளைத் தன் பெற்றோர்களோடு கழித்த அந்தக் குழந்தை மூன்றாவது நாள் காலை, தன் பாட்டியோடு பட்டிணத்தைச் சுற்றிப் பார்க்கப் போவதாய் அடம் பிடித்தான். நிச்சயமாய்க் கிழவியால் பையனையும் தயிர்க் கூடையையும் சேர்த்துத் தூக்க முடியாது. இது ஒரு பிரச்சினையாகத் தோன்றியது. பிறகு அவளுடைய மகனும் மருமகளும் வந்து, "அம்மா, எங்க பக்கமே தப்புன்னு வச்சிக்க, இவ்வளவு தூரம் நீ கோவிச்சிக்கணுமா?'' என்று சொன்னார்கள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் அவர்களுக்குச் சார்பாகப் பேசினார்கள். திரும்பி அங்கேயே போக மங்கம்மாவே ஏங்கிக் கொண்டிருந்ததால் இப்போது தன் கௌரவம் கெட்டுப் போகாமல் அவள் திரும்பிச் சென்றாள். ஆனால் குழந்தையை அவளோடு பட்டிணத்திற்கு எடுத்துச் செல்லுவதென்பது இன்னும் ஒரு பிரச்சினையாகத் தானிருந்தது. எனவே அவர்கள் ஒரு ஏற்பாட்டிற்கு இசைந்தனர். இதுவரை பால் – தயிர் வியாபாரத்தை மங்கம்மாதானே வைத்துக் கொண்டிருந்தாள். அதற்கு வெளியில் சொல்லிக் கொள்வது என்னவென்றால், மருமகள் சமையலைக் கவனிக்க வேண்டும் என்பது. உண்மையான காரணம் பணப் பையை மங்கம்மா தன்னிடமே வைத்திருக்க விரும்பியதுதான். இப்போது அவளோடு கூடப் போவேன் என்று குழந்தை அடம் பிடித்ததால் நிலைமை மாறவேண்டியிருந்தது.

"இந்த வயசான காலத்திலே, பதைக்கிற வெயில்லே எதுக்கு தினமும் நீ வெளிலே போவணும்? நீ வேலை செய்யாம சும்மாயிருக்க வேண்டிய நேரம் இது. நீ வூட்டுக்குப் பெரியவ, வூட்லயேயிருந்து அதது ஒழுங்காயிருக்கானு பாக்கறதுதான் சரியானது. தயிர் வியாபாரத்தை நா பாக்கறேன்'' என்றாள் மருமகள். மங்கம்மா அதற்கு ஒப்புக்கொண்டாள். "நீயே அதைப் பாத்துக்க, எண்ணிக்காச்சி எனக்குப் போவணுமினுயிருந்திச்சின்னா, வாரத்தில் ஒரு நா–ரண்டுநா போறேன்'' என்றாள் அவள்.

ஒரு நாள் மங்கம்மாவும் அவளது மருமகளும் ஒன்றாகச் சேர்ந்து வந்தார்கள். ஒருத்தி குழந்தையையும் இன்னொருத்தி கூடையையும் தத்தம் கைகளில் தூக்கி வைத்திருந்தனர்.

"இதுதான் எம் மருமவ, தாயீ, அவளோட வயசான மாமியா இனிமே வேலை செய்யறது அவளுக்குப் புடிக்கல்ல. அவ என்னை மறுபடியும் வூட்டுக்குள்ளே சேத்திகிட்டா, இந்த வயசில, பத்திக்கிற இந்த வெயில்ல இவ்வளோ தூரம் நா நடக்கக் கூடாதினு அவ சொல்லறா, இனிமேற்பட்டு ஒனக்கு அவ தயிர் ஊத்துவா'' என்றாள் மங்கம்மா.

ஆக, எங்களைத் தன் மருமகளிடம் ஒப்படைத்தாள் மங்கம்மா. நான் அவர்களோடு சிறிது நேரம் பேசிவிட்டு, ஒருவரையொருவர் நல்ல மாதிரி நடத்தும்படி புத்தி சொல்லி, வெற்றிலை பாக்கு கொடுத்து அனுப்பி வைத்தேன்.

இதுவரை சச்சரவு பற்றி மங்கம்மா சொல்லுவதை மட்டுமே கேட்டிருந்த நான், அடுத்த பக்கத்தையும் கேட்டறிய ஆவலோடிருந்தேன். எனவே ஒரு நாள் நான் மருமகளிடம் கேட்டேன். "நஞ்சம்மா, நீ நல்லவளாயும் புத்திசாலியாயுமிருக்கே. எப்படி ஒன்னோட சொந்த மாமியாரை வெளியில வெரட்ட முடிஞ்சது?''

"அந்த மாதிரி நா செய்யவே மாட்டேம்மா. நான் ஒண்ணும் ராட்சசியில்ல. ஆனா நீயே பாரு, எல்லா விஷயத்திலயும் தன்னோட வழியிலேயே போயாகணுமினு

அடம் புடிச்சி, அவ எம்புருஷனை ஒண்ணுமேயில்லாத ஆளா ஆக்கிட்டா.இந்த வூட்ல அவருக்கு ஆம்பிளைனு மதிப்பில்லேன்னா புருசங்கறதுக்கு என்னயிருக்கு ? எனக்குந்தான் பொண்டாட்டிங்கறதுக்கு என்னயிருக்கு ? அப்புறம் நா எப்படிக் குடும்பத்தை நடத்த முடியும் ? கொஞ்ச காலத்துக்கு நானும் அதைத் தாங்கிட்டிருந்தேன் – அட அவதான் யாரு, அவரைப் பெத்து ஆளாக்கினவதானேன்னு. ஆனா எம்புள்ளைய அடிக்கக்கூடாதினு அவ சொல்ல ஆரம்பிச்சப்ப தான், இதை எதுத்துக் கேக்கணுமினு நா நினைச்சது, அம்மான்னு எனக்கு உரிமை யில்லையா ?''

நான் புன்முறுவல் செய்தேன்.

''அப்படினா,ஒங்குழந்தையைப் போட்டு அடிக்கறதுதான் பெத்தவள கடமைனு அர்த் தங்கறியா ?''

''நா அவனை அடிக்கவும் செஞ்சேன், அணைச்சிக்கவும் செஞ்சேன். அவனை நா அடிக்கறதுக்கு எதுத்துக் கேக்கறவ, நா அவனைக் கொஞ்சறதுக்கும் கூட ஆட்சேபணை சொல்லலாமே. நா எது செஞ்சாலும் அதுக்கு என்னையே அவ பொறுப்பாக்குவா. எம்மவன் எனக்குத்தான் மவன். எம்புருசன் எனக்குத்தான் புருசன். எம் புருசங்கிட்டே ஒரு வார்த்தை சொல்றதுக்கோ, எம்புள்ளைய தப்புப் பண்ணினா அடிக்கறதுக்கோ எனக்கு உரிமையில்லேன்னா, நா வாழறது என்ன மாதிரி வாழ்க்கை ?''

மங்கம்மாவின் பேச்சைப் போலவே அவளுடைய மருமகளின் பேச்சும் விவேகமுள்ளதாகவே இருந்தது.

"இப்போ ஒனக்கு விடுதலை கிடைச்சிடுச்சு ?''

''எவ்வளவோ பரவாயில்லே, அட, இதெல்லாம் அனுசரிச்சி போக வேண்டிய ஒண்ணுதான். கடேசிவரை விடாப்பிடியா நா இருந்தா, யாராச்சி வந்து இச்சகம் பேசி அவ கிட்டேயிருக்கற பணம் பூராத்தையும் ஏமாத்தி அடிச்சிட்டுப் போயிடுவான்.

ரங்கப்பான்னு ஒராள் இருக்கான். மாமியா தனியாயிருந்தப்ப அந்தாளு பணம் கடன் கேட்டிருக்கான். இந்தம்மாவும் குடுக்கறதுக்கிருந்ததா கேள்விப்பட்டேன். அப்புறம் எம்பையன் கிட்டே சொன்னேன். ஒங்க பாட்டிகிட்டே போடா, அவ ஒனக்கு முட்டாய் குடுப்பா, நாஞ் சொல்லறவரை திரும்பி வராதேனு. சண்டைக்கு ஒரு முடிவு கட்டணமினு நா ஆசைப்பட்டேன். இந்த வழியைத்தான் யோசிச்சேன்.

''அப்போ, குழந்தை தானாவே அவகிட்டே போகலையா ?''

"போனான், ஆனா நாந்தான் அவனுக்குக் குறிப்பா சொன்னேன்''.

"இதைப்பத்தி ஒம்புருசங்கிட்டே சொன்னயா ?''.

"சொல்லவேயில்லே. இதையெல்லாம் ஆம்பளைங்க புரிஞ்சுக்க மாட்டாங்க.''

புத்திசாலித்தனத்தில் மங்கம்மாவிற்கு நஞ்சம்மா நிச்சயம் குறைந்தவளல்ல. அந்த வீட்டில் இன்னும் போராட்டம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அந்தப் பெண்ணின் மகனும், இந்தப் பெண்ணின் கணவனுமான இந்த மனிதனுக்காகத்தான் யுத்தம் நடந்து வருகிறது. தாயானவளுக்கு அவனைத் தன் பிடியிலிருந்து விட்டுவிடக் கூடாதென்று. அதே மாதிரி மனைவிக்கு அவனைத் தன்னிடம் பிடித்துப் போட்டுக் கொள்ள வேண்டுமென்ற உறுதி. வெற்றி தோல்விகளை இது மாதிரி விஷயத்தில் கணித்துச் சொல்லுவது கஷ்டமானது.

குழந்தையின் காலைப் பிடித்துக் கொள்ளும் மருமகள், தண்ணீருக்கடியில் பாதுகாப்பாயிருக்கும் முதலையைப் போன்றவள், கூரை மீதிருந்து கொண்டு குழந்தையைக் காப்பாற்றும் உத்தேசத்தில் மாமியாரானவள் அதனுடைய கைகளைப் பிடித்து இழுக்கிறாள். குழந்தையின் நிலை மிகப் பரிதாபமாயிருக்கிறது. கிராமத்தில் தயிரை விலைக்கு வாங்கும் தங்கம்மாவின் வீட்டிலும் அதே யுத்தம் தான் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. இந் நாடகத்தின் இறுதிக் காட்சி எழுதப்படப் போவதேயில்லை.

வெளியீடு : *"சாகித்திய அக்காதெமி''*

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் – ***விட்டல்ராவ்***

◆ ◆ ◆



# குடிநீர்த் தன்மை -
## பரிசோதனை

நமது இரத்தத்தில் என்ன என்ன உப்புக்கள் / தாதுப் பொருட்கள் கலந்திருக்கின்றன என்பதை எவ்வாறு பரிசோதனையின் மூலமாக கண்டறிகிறோமோ, அவ்வாறுநீரில் கரைந்திருக்கும் பொருட்களை முறையாக சோதனை செய்து கண்டறிய இயலும். சில உப்புக்கள் / தாதுப் பொருட்கள் அதிக அளவில் நீரில் கலந்திருந்தால் நாம் அப்படிப்பட்ட நீரைப் பருகுவதினால் உடல் நலத்திற்குத் தீங்கு ஏற்படும். ஆதலால் நாம் உபயோகிக்கும் குடிநீரைப் பரிசோதனை செய்து அதனுடைய உட்பொருள்களை அறிந்து கொள்வது மிக அவசியம். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மாவட்டம் தோறும் ஒரு இரசாயன ஆய்வுக் கூடத்தை ஏற்படுத்தியுள்ளது. உரிய கட்டணம் செலுத்தி நீர் மாதிரிகளை நாம் இங்கு சோதனை செய்து கொள்ளலாம். கடலூர் மாவட்டத்தில் கடலூரிலும், விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனத்திலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நீர் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் அமைந்துள்ளன.

தண்ணீரின் வெளித்தோற்ற இயல்புகளான நிறம், மணம், தெளிவு மற்றும் வேதியியல் குணங்களான கரைந்திருக்கும் உப்புகளின் அளவு, மேலும் நுண்ணுயிர்க் கிருமிகளின் இருப்பு ஆகியவற்றைப் பரிசோதனை மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.


சில உப்புக்கள் (உதாரணம் : புளூரைடு, நைட்ரேட்) அதிக அளவில் கரைந்திருந்தால் நீர் குடிக்க உகந்ததாக இருக்காது. மேலும் நம் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும். புளூரைடு அதிகம் உள்ள நீர்–1.5 மி.கி./லி. மேல் பற்களைக் கெடுத்து விடும். எலும்புகள் கோணலாகி விடும். நைட்ரேட் அதிகம் கலந்த நீர் (45 மி.கி./லி. மேல்) சிசுக்களுக்கும், கைக்குழந்தைகளுக்கும் மிகுந்த ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது.

கடினத் தன்மை அதிகம் உள்ள நீர் ருசியாக இருக்காது. மற்ற சாதாரண உபயோகங்களுக்கும் ஏற்றது அல்ல. பாத்திரங்களில் உப்புக் கோர்வை படியும். துணிகளை சோப்பு போட்டுத் துவைத்தால் நுரை வராது. பழுப்பு ஏற்படும். நுண்ணுயிர்க் கிருமி கலந்த நீரை நாம் அருந்தினால், மஞ்சள் காமாலையும், பேதியும், டைபாய்டு, காலரா போன்ற வியாதிகளும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

குடிநீரில் என்னென்ன உப்புக்கள், அதிகபட்சம் எந்த அளவில் என்பதை அட்டவணையில் கொடுத்திருக்கிறோம்.

| | குணம்/உப்புக்கள் | விரும்பக் கூடியது | அதிகபட்ச அளவு |
|---|---|---|---|
| 1. | நிறம் | நிறமற்றது தெளிவானது | — |
| 2. | கரையாத துகள்கள் | 5 என் டியு | 10 என் டியு |
| 3. | கரைந்திருக்கும் எல்லா உப்புகளின் மொத்த அளவு | 500 மிகி/லி | 2000 மிகி/லி |
| 4. | பி.எச். | 6.5 – 8.5 | தளர்த்த இயலாது |
| 5. | காரத்தன்மை கால்சியம் கார்பனேட் | 200 மிகி/லி | 600 மிகி/லி |
| 6. | கால்சியம் | 75 மிகி/லி | 200 மிகி/லி |
| 7. | இரும்பு | 0.3 மிகி/லி | 1 மிகி/லி |
| 8. | குளோரைடு | 250 மிகி/லி | 1000 மிகி/லி |
| 9. | சல்பேட்டு | 200 மிகி/லி | 400 மிகி/லி |
| 10. | புளூரைடு | 1 மிகி/லி | 1.5 மிகி/லி |
| 11. | நைட்ரேட் | 45 மிகி/லி | தளர்த்த இயலாது |
| 12. | நுண்ணுயிர்க் கிருமிகள் குழுமம் | 100 மி.லிட்டரில் ஒரு கிருமி குழுமம் கூட இருத்தல் கூடாது | தளர்த்த இயலாது |

குடிநீர் மாசுபட்டிருப்பதை நாம் அறிவோமானால், அவற்றை குறைக்க சில எளிய நடவடிக்கைகளை நாம் எடுக்கலாம்.



நீர் ஆதாரங்களைச் சுற்றி கழிவுநீர் மற்றும் விணாகும் தண்ணீர் தேங்கி இருக்கக் கூடாது.

நீர் நிலைகளின் / நீர் ஆதாரங்களின் தளம் ஒட்டைகள், விரிசல்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.


நீரைக் காய்ச்சி, பின் சுத்தமான வடிகட்டியில் அடிகட்டி சேமித்து கொள்ளலாம்.

சேமித்த நீரைச் சுத்தமாகக் கையாள வேண்டும். பாதுகாக்க வேண்டும்.

நமது வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகவும், தூய்மையானதாகவும் வைத்திருக்க வேண்டும்.

## வேதியியல் சோதனைக்கு நீரைச் சேகரித்தல் :

வேதியியல் சோதனைக்காக எடுக்கப்படும் நீரை ஒரு லிட்டர் அல்லது இரண்டு லிட்டர் கொள்ளளவு உள்ள பாலித்தீன் கலனில் (ஜெர்ரி கேனில்) சேகரிக்க வேண்டும்.



பாலித்தீன் கலனின் நிறம் வெண்மையானதாக இருக்க வேண்டும். மற்ற நிறங்களுடைய கலனில் "மாதிரி நீர்'' சேகரித்தால், அந்த நிறம் நீருக்கு ஏற்பட வாய்ப்பு உண்டு. வெண்ணிற பாலித்தீன் கலன் தூய்மையானதாக இருக்க வேண்டும். நீர் ஆதாரத்தை நன்கு இறைத்து, பின்னரே நீரைச் சேகரிக்க வேண்டும். எடுக்கப்படும் நீரினால், பாலித்தீன் கலனை இரண்டு மூன்று முறை நன்கு கழுவிக் கொள்ள வேண்டும். பின்பு நீரை அந்தக் கலனில் முழுமையாக வெற்றிடம் மற்றும் நீர்க்குமிழிகள் எதுவும் இல்லாமல் நிரப்பிக் கொள்ள வேண்டும். நீரைச் சேகரித்த அன்றே அதை ஆய்வுக்கூடத்தில் சேர்க்க வேண்டும்.

## நுண்ணுயிர்க்கிருமிகள் சோதனைக்கு நீரைச் சேகரித்தல்:


ஆய்வுக் கூடத்திலிருந்து, இதற்கென தனியாக உள்ள சோடா பாட்டில் கண்ணாடி சீசாவை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த சீசா பழுப்பு நிற தடித்த காகிதத்தினால் சுற்றப்பட்டிருக்கும். மின் வெப்ப பத அறையில் வைக்கப்பட்டு எடுக்கப்பட்டிருக்கும். இதனால் கண்ணாடி சீசாவில் ஏதேனும் நம்மை அறியா நுண்கிருமிகள் இருந்தாலும் அவை செயல் இழக்கப்பட்டிருக்கும். தடித்த பழுப்பு காகித உறையில் ஒரு வரைகுறி இடப்பட்டிருக்கும். இந்த வரை குறியில் ஒரு கத்தியினாலோ, பிளேடினாலோ சீசாவைச் சுற்றி அறுத்து வைத்துக்கொள்ள வேண்டும். இதனால் சீசாவின் மேல் மூடியை எளிதாக எடுத்துக் கொள்ளலாம். இந்த சீசாவை நாம் பரிசோதனைக்கு எடுக்கும் நீர் ஆதாரத்தின் நீரினால் சுத்தப்படுத்த வேண்டியதில்லை. அப்படியே நீர் ஆதாரத்திலிருந்து நீரை இதில் நிரப்பிக் கொள்ள வேண்டும். பின் சீசாவை அதனுடைய மூடியினால் மூடிவிட வேண்டும். "மாதிரி நீர்'' சேமித்த 6 மணி நேரத்திற்குள் அதை ஆய்வுக்கூடத்தில் சேர்த்து விட வேண்டும். இதற்கு மேலும் நேரம் ஆகிறதென்றால் ஒரு சிறிய, பனிக்கட்டிகளால் ஆன குளிர்சாதனப் பெட்டியில் பாதுகாத்து, 24 மணி நேரத்திற்குள் ஆய்வுக்கூடத்தில் ஒப்படைக்க வேண்டும்.

## பொது:

வேதியியல் சோதனையானாலும், சரி நுண்ணியிர்க் கிருமிகள் சோதனையானாலும் சரி, மாதிரி நீரை சேகரித்த 8 மணி நேரத்திற்குள் ஆய்வுக் கூடத்தில் ஒப்படைப்பது சாலச் சிறந்தது.

"டேனிடா குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்ட''த்தின் கீழ் வரும் ஊராட்சிகளில், எல்லா நீர் ஆதாரங்களில் இருந்தும், நீர் மாதிரிகள் எடுத்துப் பரிசோதனை செய்யப்படுகின்றன.





என்பதை அறிகிறோம்; குடிநீர் மாசு அடைவதற்கான காரணங்களைக் கண்டு அறிகிறோம்.

இந்தச் செய்திகளை, ஊராட்சியில் உள்ள மக்களுக்கு எடுத்துரைத்து அவர்களுக்குக் குடிநீர் தன்மை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறோம். நீர் நிலைகள் / நீர் ஆதாரங்களை எப்படிச் சுத்தமாகப் பாதுகாக்க வேண்டும்; மாசுபட்ட நீரை அருந்துவதினால் ஏற்படும் தீமைகள்ள் மற்றும் நம் உடல் நலத்திற்குச் சுத்தமான குடிநீர் எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை விளக்கிக் கூறுகிறோம். ஒவ்வொரு குடும்பத்துக்கும் சுகாதார வீட்டுக் கழிவறை எவ்வளவு சிறந்தது, எவ்வளவு பயனுள்ளது என்பதைத் தெளிவாக்குகின்றோம்.

*"தண்ணீர் நமது உயிர் நாடி*



இந்தப் பரிசோதனைகளின்ன் முடிவுகளை நாங்கள் கவனித்து வருகிறோம். 1997 ஏப்ரல் முதல் மார்ச் 2001 வரை நாங்கள் பரிசோதனை செய்த 642 நீர் மாதிரிகளில் 88 மாதிரிகளில் (14%) விரும்பத் தகுந்த அளவுக்கு மேல் நைட்ரேட் கலந்துள்ளன. நுண்ணிய கிருமிகளில் இருப்பு பற்றிய சோதனையில் (காலம் – அக்டோபர் 2000 – மார்ச் 2001) 196 மாதிரிகளில் 84 மாதிரிகள் (43%) நுண்கிருமிகளால் மாசு பட்டிருக்கின்றன. ஓர் ஊராட்சியில் எந்த இடத்தில் நல்ல குடிநீர் கிடைக்கும், எந்த நீர் ஆதாரங்கள் நல்லபடியாக இருக்கின்றன, எந்த நீர் ஆதாரங்கள் மாசுபட்டு விட்டன



*அதை விணாக்க வேண்டாம்; மாசுபடுத்த வேண்டாம்''*

*"தண்ணீரைச் சேமிப்பீர்''*

*"தண்ணீர் மாசுபடுதலைத் தவிர்ப்பீர்''*

*"தடுத்தல் நிவர்த்தியை விடச் சிறந்தது''*

*"நமக்காகவும் நமது சந்ததியினர்க்காகவும் நீரை*


*நாம் பாதுகாப்போம்; சேமிப்போம்''*

★ ★ ★



# அன்றும்

ஏற்றத்தின் எருதுகள் ஏறியும் இறங்கியும்
இறைக்கின்ற வெள்ளம் பாய
இஞ்சி கதிர் நெல்வாழை மஞ்சள் கரும்பு
என்றபொருள் எங்கும்நி றைந்திருக்க
சோற்றுப்பை நிறைய ஒரு சுறுசுறுப்
பை வாழ்வின் துணையாக்கிக் கொண்ட உழவன்
சொல்கின்ற ‘பொங்கலோ பொங்கலெனும்’
சொற்கேட்டுச் சூரியன் தலைஅசைக்க
நாற்றெலாம் முடிசூடக் காற்றதைக்
கவிபாட நாணல் அதை வானில்எழுத
நாரைமுதற் பறவைகள் ஆர்வமுற
அதுகேட்டு நாலாதி சைக்கும் சொல்ல
ஆற்றல் சால் உழவனின் புகழ்கேட்டு
ஒளிவெள்ளம் ஆகாயம் எங்கும் பாய
அருவிஎனக் கவிதைஎன தகமுழுதும்
பெருகிவர அகிலமதில் நீராடுமே....



# இன்றும்

ஏற்றச்சாலை அருகிலோர் இறைக்கும்யந்
திரவீணை எழிலாகச் சாய்ந்திருக்க
இலவசமின் சாரமெனும் விரலால்நம்
அரசாங்கம் இனியகீ தத்தைமீட்ட
நாற்றங்கால் மேலாண்மை ஆற்றல்தேர்
அறிஞர்கள் நல்லதோர் சுருதிகூட்ட
நடுவயலில் உழுதிடும் யந்திரம்
அதிர்ந்திட நடுபொறியும் தாளம்போட
ஊற்றம்மி குந்திடும் உழத்தியர்
குலவையாம் உயர்மத்த ளம்முழங்க
உரியநற் சுவைஞராய்க் கதிரெலாம்
வரம்பின்மேல் ஒருமுழம் உயர்ந்துபார்க்க
ஆற்றல்சேர் உழவரின் புதுவாழ்வில்
எழும்கீதம் ஆகாயம் எங்கும்பாய
அருவிஎனக் கவிதைஎனது அகம்முழுதும்
பெருகிவர அகிலமதில் நீராடுமே.

கவிஞர்
இரா. இராமமூர்த்தி



# மருத்துவமனைகள் ஒவ்வொன்றிற்கும் ஆலோசனைக்குழு

சட்டமன்ற கூட்டத்தொடரில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி மாநிலத்தில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமையக மருத்துவமனைகள், வட்ட அளவிலான மருத்துவமனைகள் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஆலோசனைக்குழு அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

மேலும், மருத்துவமனை ஆலோசனை குழுக்கள் தவிர ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு மாவட்ட அளவிலான ஆலோசனைக்குழு அமைத்திடவும் அரசு ஆணையிட்டுள்ளது. மருத்துவமனை ஆலோசனைக்குழுக்களில் மருத்துவமனை மருத்துவ அலுவலர் தலைவராகவும், அத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், மக்களவை உறுப்பினர் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் ஆகியோரின் பிரதிநிதிகள் இருவரும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தைச் சார்ந்த பிரதிநிதிகள் (மகளிர் உட்பட) ஆகியோர் உறுப்பினர் பட்டியலில் இடம் பெறுவோரில் சிலர். இந்தக்குழு மருத்துவமனைகளின் செயல்பாட்டை மேற்பார்வையிடுவதோடு, நோயாளிகளுக்கு தரம் வாய்ந்த சிகிச்சை கிடைப்பதற்கும் மருத்துவமனை மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை வழங்கும்.

மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படவிருக்கும் மாவட்ட ஆலோசனைக் குழுவில் மருத்துவமனை முன்னேற்றத்திற்கு தொடர்புள்ள ஏனைய துறை அலுவலர்களும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதிகளும், மக்களவை சட்டமன்ற மற்றும் நகராட்சி உறுப்பினர்கள் ஆகியோரும் இடம் பெறுவார்கள். இந்தக் குழு மருத்துவமனை ஆலோசனைக்குழுக்களின் செயல்பாட்டினை சீராய்வு செய்து தேவையான ஆலோசனைகள் வழங்கும். மருத்துவமனை ஆலோசனை குழுக்களின் ஆலோசனைகளைச் சம்பந்தப்பட்ட இயக்குநர்களுக்கு மேல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்படும். குறிப்பாக மருத்துவமனைகள் சிறப்பாக செயல்படவும், தரமான மருத்துவ வசதிகள் தேவைப்படுவோருக்கு முறையாக சென்றடையவும் இக்குழுக்களின் பணிகள் உதவிகரமாக அமையும்.

• • •



# பொன்னேரி அரசு மருத்துவமனையில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆய்வு

பொன்னேரி அரசு மருத்துவமனையை 10.1.2002 அன்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பார்வையிட்டார். அங்கு கடலோர கிராமப் பகுதிகளில் சமீபத்தில் பெய்த மழையினால் குடிதண்ணீரில் அசுத்தம் கலந்து, அதனால் அந்தப் பகுதி மக்கள் வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்டனர். அவர்களுள் 3 குழந்தைகள் உட்பட 18 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு அவர்களுக்குத் தேவையான சிகிச்சை அளிக்குமாறு மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், அந்தக் கிராமப்பகுதிகளுக்கு பொன்னேரி சட்ட மன்ற உறுப்பினர் திரு ஏ.எஸ். கண்ணன் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, துணை இயக்குநர் தலைமையில் மருத்துவக் குழுவை அனுப்பி குடிதண்ணீரில் குளோரினேஷன் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். பொன்னேரி மருத்துவமனையில் போதுமான படுக்கை வசதி இல்லாததை பொது மக்கள் சுட்டிக்காட்டியதை கேட்டறிந்த அமைச்சர் அவர்கள் கூடுதல் படுக்கை வசதி அளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். நோயாளிகளுக்கு உணவு சரியாக வழங்கப்படுவதில்லை என்ற புகார் அமைச்சரிடம் சொல்லப்பட்டது. அது குறித்து, நிர்ணயிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை என்றால், சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் எச்சரித்தார்.

மருத்துவமனையில் வார்டுகள், கழிப்பிடங்கள் இவற்றை மேலும் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்று அமைச்சர் அறிவுரை வழங்கினார். சமையல் கூடம் சுகாதார முறையில், சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார். மருத்துவமனையில் மின்சாரக் கசிவு, மின் விளக்குகள், மின் விசிறிகள் செயல்படாது இருப்பது குறித்தும், பொதுப்பணித் துறையினரால் செய்யப்படும் பணிகள் தாமதப்படுவது குறித்தும் கேட்டறிந்த அமைச்சர் சம்பந்தப்பட்ட துறையினரை உடன் சீர் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டார்.

அமைச்சர் அவர்கள் பின்பு மீஞ்சூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை பார்வையிட்டார். அங்குள்ள புறநோயாளிகளைச் சந்தித்து அங்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். அங்கு போதுமான கருவிகள் பற்றாக்குறையைக் கண்ட அமைச்சர், அவற்றினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். பேரூராட்சி நிர்வாக அதிகாரியிடம், பிரசவ வார்டுக்கு உடனடியாக தண்ணீர் வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அமைச்சருடன் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.எஸ்.கண்ணன், ஒன்றிய செயலாளர் திரு.தேவராஜ், பேரூராட்சி உறுப்பினர்கள் திரு. பட்டாபி, உபயதுல்லா, ஒன்றிய பேரவைச் செயலர் திரு சுந்தரம், மாவட்ட ஊராட்சித் தலைவர் தமிழ்ச் செல்வி, திரு தத்தை அருள் ஆகியோர் உடன் இருந்தனர். •





# எச்ஜவி/எயிட்ஸ் மற்றும் மனநலம் குறித்த மண்டல கருத்தரங்கம்

தமிழ்நாட்டில் நிலவும் எச்ஜவி/எயிட்ஸ் மற்றும் மனநலம் குறித்த நிலைமைகளை உங்களிடையே சில வார்த்தைகள் பரிமாறி கொள்வதற்கு, வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த, மைய அமைச்சர் டாக்டர் தாகூர் அவர்களுக்கும், ஒருங்கிணைப்பாளர்களுக்கும் இத்தருணத்தில் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இருபது ஆண்டுகளுக்குள்ளாகவே, எச்ஜவி/எயிட்ஸ் மருத்துவ எதிர்பார்ப்பு நிலைகளையெல்லாம் கடந்து சர்வதேச அவசரதன்மையினை பெற்றுள்ளது. இது சாதாரண உடற்கூறு சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல... ஏற்கெனவே முழு வளர்ச்சி பெற்ற பேரழிவு நிலை எனலாம். உலகம் முழுவதிலும் ஏறத்தாழ 34 மில்லியன் மக்கள் எச்ஜவி/எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 24.5 மில்லியன் மக்கள் ஆப்பிரிக்கா நாட்டில் உள்ளனர். அதில் பெருபான்மையோர் சகரன் ஆப்பிரிக்காவை சார்ந்தவர்கள்.

எயிட்ஸ் என்னும் உயிர்கொல்லி நோயினால் 30.2 மில்லியன் குழந்தைகள் அனாதைகளாகி விட்டனர் என்பது அதிர்ச்சித் தரத்தக்க உண்மையாகும். இவர்களில் பாதிக்கு மேற்பட்டோர் ஆப்பிரிக்கா நாட்டில் உள்ளனர். இத்தகைய சுகாதார சீரழிவு சமூக பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. 4 மில்லியன் இந்தியர்கள் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிக அளவில் எச்ஜவி/எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இதில் வருந்தத்தக்க செய்தி யாதெனில், இவர்களில் 15–லிருந்து 49 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். தனிநபர் வருமானம் குறைதல் மற்றும் உற்பத்தித் திறன் குறைதல் ஆகியவற்றுடன், இந்த எச்ஜவி/எயிட்ஸ் நோயாளிகள் மைய மற்றும் மாநில அரசுகளுக்கு பெரும் நிதி சுமையை ஏற்படுத்துபவர்களாகவும் உள்ளனர். வாழ்வின் எதிர்பார்ப்பு குறைவதுடன், மனித வளங்களினால் பெறப்படும் பயன்பாடுகளும், கடந்த 50 ஆண்டுகளில் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளன. இதனை நான் மிகைப்படுத்தி சொல்லவில்லை, எச்ஜவி/எயிட்ஸ் நோயாளிகளால், தேசிய பொருளாதாரம் எந்த அளவிற்கு சீர்கேடான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது என்ற உண்மை நிலையை விளக்கவே உங்களுக்கு தெரிவிக்கின்றேன். எந்த நோய் ஒழிப்பு திட்டத்திலும், அதனை தடுக்கும் முறைகளே முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த குறிக்கோளை மனதில் கொண்டு, தமிழகத்திலுள்ள தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனமும் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு சங்கமும் இணைந்து சீரிய செம்மையான நல்ல திட்டங்களை வகுத்து செயல்படுத்தி





வருகின்றன. 1994–இல், எயிட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தை நிறுவிய முதல் மாநிலம் என சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். நாங்கள்தான், இந்த உயிர்கொல்லி நோயினை கட்டுப்படுத்துவதில் முன்னோடிகளாகவும், திறன் மிக்கவர்களாகவும் உள்ளோம் என்பதை இங்கு கூடியுள்ள அறிஞர் பெருமக்களுக்கு தெரிவித்துக் கொள்வதில் பேருவகை கொள்கிறேன். மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டிகளாகவும் விளங்குகிறோம். புதிய கண்டுபிடிப்பு உத்திகளாலும், நன்கு தெரிந்த வழிமுறைகளாலும் எச்ஜவி/எயிட்ஸ் பரவுதலை கட்டுப்படுத்துவதில் நாங்கள் பெருமளவு வெற்றி கண்டுள்ளோம்.

இந்நாட்டிலுள்ள மொத்த நோயாளிகளில் 50 விழுக்காடு எயிட்ஸ் நோயாளிகளை கொண்ட மாநிலத்திலிருந்து நான் வந்திருப்பினும், தமிழ்நாடு எயிட்ஸ் நோயினை கட்டுப்படுத்துவதில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை உங்களிடையே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அதன் விவரம் யாதெனில்,

★ தமிழ்நாட்டில், 80 விழுக்காட்டிற்கு மேலாக தகாத உறவுகளினால் எச்ஜவி/எயிட்ஸ் நோய் பரவுகின்றன.

★ தாங்கள் நோயால் பாதிக்கப்படுவோம் என்று அறியாமலேயே இவ்வித தவறுகள் செய்து, இந்த உயிர்கொல்லி நோய்க்கு பலர் ஆட்படுகின்றனர். இந்நிலையானது, எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வை மேலும் அதிகரிக்க வழி ஏற்படுத்தியுள்ளது.

★ 103 அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் உதவியில், ஊரகம் மற்றும் நகர்புறங்களில் இதுவரை 338 நோய் கண்டுபிடிப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

★ 1992ஆம் ஆண்டு 23 விழுக்காடு நிலையிலிருந்த எயிட்ஸ் தடுப்பு விழிப்புணர்வு, தற்போது 96.2 விழுக்காடாக உள்ளது. நகர்ப்புறங்களில் 98.2 விழுக்காடும் ஊரகப்பகுதிகளில் 94.4 விழுக்காடுகளும் உள்ளன.

★ எங்கள் மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் 51 பாலியியல் நோய் தொடர்பான மருத்துவ பிரிவுகள் உள்ளன. அத்தியாவசியமான கருவிகள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டு இவைகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

★ இரத்த மாற்று சிகிச்சை தொடர்பான 63அரசு இரத்த வங்கிகளும், 103 தனியார் இரத்த வங்கிகளும் உள்ளன. இவைகளின் செயல்பாடுகள் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

★ பாலியியல் தொழிலாளர்கள் மற்றும் முறையற்ற வழியில் உறவு கொள்வோர் தொடர்ந்து எயிட்ஸ் நோயால் பாதிக்கப்படும் அவல நிலையை சார்ந்தவர்களாக உள்ளனர். எனவே எங்களது ஒவ்வொரு செயல்பாடுகளும் இந்த பிரிவினர்களை கருத்தில் கொண்டே நடைபெற்று வருகின்றன.

★ எங்களது தொடர் நடவடிக்கைகளின் விளைவாக, பாலியியல் தொழிலாளர்கள் மற்றும் முறையற்ற வகையில் உறவு கொள்வோரிடம் செல்பவர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளது.

★ பாலியியல் தொழிலாளர்களிடம் உறவு கொள்வோர்களில் தடுப்புகளை பயன்படுத்துவோர்களின் எண்ணிக்கை 61 விழுக்காடுகள் என கண்டறியப்பட்டுள்ளது.

★ தேசிய அளவில், தமிழகத்தில்தான் முதன் முதலில் அனைத்து மாவட்டங்களிலும் தன்னார்வ கவுன்சிலிங் மற்றும் சோதனை மையங்கள் அமைக்கப்பட்டன.

★ தாயிடமிருந்து சேயிக்கு எயிட்ஸ் பரவுதலை தடுப்பது நான்கு மையங்களில் சோதனை முறையில் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் முடிவு பெருமளவில் ஊக்கமளிப்பதாக உள்ளது.

★ இந்திய முறை சிகிச்சையான, சித்த மருத்துவத்தின் மூலம் எயிட்ஸ் நோய்க்கு சிகிச்சையளிக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பெருமளவில் வெற்றியும் கிட்டியுள்ளது. இதன் மூலம் ஒரு மாபெரும் சாதனை சிகரத்தின் விளிம்பை தொட்டு விட்டோம் என பெருமிதம் கொள்கிறோம்.

★ உலக தன்னார்வ இரத்தத் தானம் செய்பவர்களின் நாளான 2001, அக்டோபர் 2, அன்று 4,200 இரத்தத்தானம் செய்பவர்களிடமிருந்து 3,083 யூனிட்ஸ் இரத்தம் பெறப்பட்டது. இது ஒரு உலகச் சாதனை ஆகும்.


எயிட்ஸ் என்னும் உயிர்கொல்லி நோய் மனித உயிர்களை பலிவாங்கும் பேரழிவான நிலையோடு, நாட்டின் சமூக பிணைப்பை பெருமளவில் பாதிக்கும் என்பதே வருந்தத்தக்க உண்மை நிலையாகும்.

எச்ஜவி நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை சமூக பாகுப்பாடு கொண்டு ஒதுக்கி வைக்காமல் தைரியமாக எதிர்கொள்ளதக்க எண்ணத்தை மக்களிடம் உருவாக்குதல் வேண்டும். இயல்பான மகிழ்ச்சி தரத்தக்க வாழ்க்கையை நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலையை, ஏற்படுத்தி தருவது நமது இன்றியமையாத கடமை ஆகும். வாழ்க்கையில் நம்பிக்கை. இழந்த எச்ஜ.வி./எயிட்ஸ்–சினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு நாம் பாதுகாப்பு கொடுக்கத் தவறினால் நமது கடமையிலிருந்து தவறிவிட்டோம் என்று வருங்கால சந்ததியினர் நம்மை குறை கூறக் கூடும். எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு தரும் நோக்கத்தின் அடிப்படையில் கொள்கை அளவில் எதிர்காலத் திட்டங்கள் எதிர்காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்நோயின் மீது உள்ள தவறான எண்ணத்தை போக்கும் வகையில் விவாதங்கள் நடத்தி, இந்நோய்களை சமூகப் பாகுபாடற்ற சுமூகமான வழியில் வாழ்வதற்குரிய வழிவகைகளை கண்டறியுமாறு இக் கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ள பிரதிநிதிகளை கேட்டுக் கொள்கிறேன். ஆண்டி–ரெட்ரோவியல் எனும் மாற்று மருந்து, இந்நோயின் தன்மையை வெற்றிகரமாக குறைப்பதோடு அவர்களது வாழ்நாளினை அதிகரிக்கவும் செய்கிறது என்று உலகளவில் பேசப்பட்டு வருகிறது. 'ஆண்டி–ரெட்ரோவியல்'' என்ற மாற்று மருந்து சௌதல் உகாண்டா ஸ்பெயின் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் வெற்றிகரமாக செயல்படுகிறது என்று தெரிய வருகிறது. இந்நோயின் மீது கொண்டுள்ள தவறான எண்ணத்தை அகற்றும் வகையில் தக்க வழிமுறைகளை கண்டறியப்பட வேண்டுமென்று மாண்புமிகு மைய அரசின் சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களை இந்த தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் இக்கொடிய நோயின் மீதுள்ள பயத்தை போக்க வேண்டும். தமிழ்நாட்டை பொறுத்தவரை, 'நானே' பச்சை விளக்கு காட்டுவதோடு உலக அமைப்புகளிடமிருந்து தேவையான நிதி ஆதாரங்கள் கிடைக்குமேயானால் முன்னோடித் திட்டமாக தமிழகத்தில் சில இடங்களில் இச்சீரிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் பெருமை கொள்வோம்.

இந்திய அரசின் அனுமதியோடு, 'ஆண்டி ரெட்ரோவியல்' என்ற மாற்று மருந்தை எச்ஜவி நோயாளிகளுக்கு பயன்படுத்துவதற்கான வழிவகைகளை சர்வதேச அமைப்புகளான சி.டி.சி., அட்லாண்டா, அமெரிக்கா, சர்வதேச எய்ட்ஸ் கல்வி பயிற்சி நிறுவனம், நெதர்லாண்ட்ஸ், அமெரிக்காவில் உள்ள தேசிய சுகாதார நிலையம் ஆகியவற்றுடன் கலந்தாய்வு செய்யப்பட்டது. இவற்றிற்கு உதவிகரம் நீட்டும் நிறுவனங்கள் தாராளமாக நிதியுதவி செய்வதாக உறுதியளித்துள்ளது. உலக அமைப்புகளிடமிருந்து நிதியுதவி பெறும் வகையில் மாண்புமிகு மைய அரசின் சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் புதிய கோணத்தில் அணுக முயல வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன். மன நலத்தைப் பொறுத்தவரை ''மனநோய் என்ற தத்துவம்'' பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது என்பது நீங்கள் அறிந்ததே. 1950 ஆம் ஆண்டு முதல் மனநலம் பாதித்த நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனைகளில் அடைக்கலம் தந்து நடைமுறைக்கு உகந்த வகையில் சீரான முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நுண்ணுயிர் அடிப்படையிலும், மனோதத்துவ அடிப்படையிலும், உடற்கூறு அடிப்படையிலும் மன நலம் பாதிக்கப்படக் காரணமான மூளையின் தன்மை மெல்ல மறைந்து விடுகிறது. தற்கொலை முயற்சி, மதுவிற்கு



அடிமையாதல், போதை பொருட்களுக்கு அடிமையாதல் ஆகிய தன்மைகளை போக்கும் வகையில் அதன் தேவையை அறிந்து அரசு மருத்துவமனைகளில் மனோதத்துவ ரீதியில் சிகிச்சை அளிப்பது அவசியமாகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மன நலம் சிகிச்சையளிப்பதில் நன்முறையில் தேர்ச்சி பெற்றுள்ளோம். பல்வகையில் மனநல நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கென்றே 1800 படுக்கை வசதிகளுடன் சென்னையில் மனநலக் காப்பகம் இயங்கி வருகிறது.

அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் மனநலத்துறை உள்ளன. 11 மாவட்ட தலைநகரங்களிலுள்ள மருத்துவமனைகளில் மனநல மருத்துவப்பிரிவு இயங்கி வருகிறது. 3 மாவட்டங்களில், இந்திய அரசின் நிதி உதவியுடன் மனநலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். மற்ற எல்லா மாநிலங்களை காட்டிலும்,



தமிழ்நாட்டில், அதிக எண்ணிக்கையில் 250 மனநல மருத்துவர்கள் உள்ளனர். அவர்களில் 80 சதவிகிதம் பேர் அரசு பணிகளில் உள்ளனர். திருச்சிராப்பள்ளியில் மாவட்ட மனநலத் திட்டத்தை நிறைவேற்றி முடிக்கும் நிலையில் உள்ளோம். வெளிமுகமைகள் மூலம் தனி மதிப்பீடு செய்து பார்த்ததில், இத்திட்டம் பெரும் வெற்றியென தெரியவந்தது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 32,025 மன நோயாளிகள் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளனர். தீவிர நடவடிக்கையின் விளைவாக, மக்கள் மனதில் மனநோய் குறித்த விரும்பத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், மனநோயாளிகளை கண்டறியும் வகையில் சுகாதார களப் பணியாளர்களுக்கு போதுமான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கையின் விளைவாக, மருத்துவர்கள் மற்றும் சுகாதார களப்பணியாளர்களின் விடாமுயற்சியினால் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. மனநோயின் அறிகுறி தென்பட்டவுடன் மக்கள் தானாகவே அரசு மருத்துவமனைக்கு கொண்டு வருகிறார்கள். திட்ட மதிப்பீட்டுக் குழுவின் வெற்றிக்கு மக்கள் மன மாற்றமே எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

### இயல், இசை, நாடக மன்றத்தின் புதிய உறுப்பினர்கள்

அரசாணை (டி) எண்.12, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலைய (பண்2)த்துறை, 22.1.2002 நாளிட்ட ஆணையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றப் பொதுக்குழுவிற்கு கீழ்க்கண்ட ஒன்பது கலைஞர்களை, அரசு நியமன உறுப்பினர்களாக நியமனம் செய்து பொதுக்குழுவை மாற்றியமைத்து ஆணை வெளியிட்டுள்ளது.

1. திருமதி. எம்.என். ராஜம்
2. திரு. பிலிம் நியூஸ் பி.ஜி. ஆனந்தன்
3. திருமதி. வீணை காயத்ரி
4. திருமதி. சுதா ரகுநாதன்
5. திருமதி. சித்ரா விசுவேசுரன்
6. குமாரி சச்சு
7. திருமதி. வாணி ஜெயராம்
8. திரு. மேண்டலின் ஸ்ரீனிவாஸ்
9. திரு. டெல்லி கணேஷ்

முன்னேறிய நாடுகளைபோல் அல்லாமல், மனநோயாளிகளை மருத்துவமனைகளிலும், தனி வீடுகளிலும் வைக்காமல், அவர்களை மனநலக் காப்பகங்களில்வைத்து, பராமரிக்கப்படுகிறது என்பதை கூறிக்கொள்வதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். சர்வதேச அமைப்புகளின் மூலம், சமீபத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள், மனநோயாளிகளுக்கு மறுவாழ்வு அமைத்து கொடுக்க, மிக்க உதவிகரமாய் அமைந்துள்ளது.

மனநோயாளிகளை பற்றிய ஒரு தவறான கருத்து, நம் சமுதாயத்தில் இப்பொழுதும் நிலவி வருகிறது. தீவிர முயற்சிக்கு பிறகும், மனநோயாளிகளை மதபோதனைகள் மூலம் மாற்ற முடியும் என்ற மக்களின் நம்பிக்கையை முழுவதுமாக மாற்ற முடியவில்லை. மனநலம் குறித்த சட்ட விதிகளை தீவிரமாக நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, தற்பொழுது தனிப்பட்ட மனநலக் காப்பகங்கள் இல்லை. உறவினர்களால் கைவிடப்பட்டு, மனநோய் நீங்கியவர்களுக்கு தமிழக அரசு முதியோர் ஒய்வூதியம் வழங்கி வருகிறது. தென்கிழக்கு ஆசியாவின் பல பகுதிகளிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளை நான்கேட்டுக் கொள்வது யாதெனில், எச்ஜவி/எயிட்ஸ் நோயை ஒழிப்பதை மட்டும் குறிக்கோளாக கொள்ளாமல் மனநோயாளிகளை பராமரித்து, அவர்கள் மறுவாழ்விற்காக ஆழ்ந்த விவாதம் நடத்தப்பட வேண்டும் என்பது நமது எதிர்கால திட்டமாக இருக்கவேண்டும்.

எச்ஜவி/எயிட்ஸ் மலிந்துள்ள நமது நாடுகளில், அவைகளை ஒழிக்கும் வகையில் தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்பதோடு, உலக அளவில், "உலக எயிட்ஸ் நிதி'' என்ற அமைப்பை ஏற்படுத்த பெரும்பங்காற்ற வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்.

*- 19.12.2001 அன்று புதுதில்லியில் நடைபெற்ற எச்ஜவி/எயிட்ஸ் மற்றும் மனநலம் குறித்த மண்டல கருத்தரங்கில், நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.* ●

## உயிரிழந்த இராணுவ வீரருக்கு உதவி முதல்வர் அறிவிப்பு

இந்திய எல்லையில் எதிரிகளுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் வேலூர் மாவட்டம், லத்தேரி எல்.எம்.சி. காலனியைச் சேர்ந்த ராணுவ வீரர் திரு கே.ராஜேந்திரன் வீர மரணம் அடைந்துள்ளார். நாட்டின் பாதுகாப்புப் பணியில் தனது இன்னுயிரை ஈந்த தமிழக வீரர் திரு கே.ராஜேந்திரனுக்கு அஞ்சலி செலுத்துகிறேன். அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு தமிழக அரசின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது உடல் அவரது குடும்பம் வசித்து வருகின்ற வேலூர் அருகே உள்ள லத்தேரி எல்.எம்.சி. காலனியில் வைக்கப்பட்டு, பின்னர் மாலை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் ஆகிய அரசு அதிகாரிகள் முன்னிலையில் உரிய அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

வீரமரணம் அடைந்த போர் வீரர் திரு கே.ராஜேந்திரனின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு சார்பாக சிறப்பு நிதி உதவி ரூ.5 இலட்சம் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் உயிரிழந்த போர் வீரர் திரு கே.ராஜேந்திரனின் மனைவிக்கு அவரது கல்வித் தகுதியில் அடிப்படையில் உரிய அரசுப் பணி அளிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## உலமா ஓய்வூதியம்

உலமா ஓய்வூதிய (கு.நா.) திட்டம் 1981–ன்படி உலமாக்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/– ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. உலமா ஓய்வூதியம் பெற கீழ்க்காணும் தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

1.இஸ்லாமிய மத போதகர் அல்லது அரபி மொழி ஆசிரியர் அல்லது பேஷ் இமாம் அல்லது மோதினார் அல்லது முஜாவர் ஆக தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட அல்லது அளவை செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசிதழில் அறிக்கை வெளியிடப்பட்ட வக்ஃபுகளில் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்.

2. மிகவும் நலிந்த நிலையில் மாத குடும்ப வருமானம் ரூ.1000/–க்கு மிகாமல் உள்ளவர்.

3. அறுபது வயது பூர்த்தியானவர்.

உலமா ஓய்வூதியம் ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரம் 27.07.2001 முதல் தமிழ்நாடு வக்ஃபு வாரிய முதன்மைச் செயல் அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, தகுதியுள்ள உலமாக்கள் இத்திட்டத்தின் கீழ் உலமா ஓய்வூதியம் பெற, தமிழ்நாடு வக்ஃபு வாரிய முதன்மைச் செயல் அலுவலரை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



## சிமெண்ட் உற்பத்தியாளர்களுடன் ஆலோசனை

பொது மக்கள் நலன் கருதி சிமெண்ட் விலையைக் குறைக்கும் நோக்கத்துடன், தலைமைச் செயலகத்தில் சிமெண்ட் உற்பத்தியாளர்களுடன் நடந்த கூட்டத்தில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.கே.பாண்டுரங்கன் அவர்கள் தலைமை தாங்கினார். தொழில்துறை செயலாளர், தொழில்துறை சிறப்புச் செயலாளர் மற்றும் டான்செம் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தனியார் சிமெண்ட் கம்பெனிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

1. மெட்ராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட்
2. செட்டிநாடு சிமெண்ட்ஸ் லிமிடெட்
3. எல் அண்டு டி சிமெண்ட்ஸ் லிமிடெட்
4. ஏ.சி.சி. லிமிடெட்
5. இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
6. கிராசிம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
7. டால்மியா சிமெண்ட்ஸ் (பாரத்) லிமிடெட்

கூட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய தொழில்துறை செயலாளர், சென்ற 12.11.2001 மற்றும் 29.11.2001 தேதிகளில் நடந்த கூட்ட விபரங்களையும் அதன்பின் தற்போது ஏற்பட்டுள்ள சிமெண்ட் விலை ஏற்றத்தையும் பற்றி விரிவாக முன்னுரை செய்தார்.

தொழில்துறை அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, கடந்த 3 மாதங்களில் இது 3-வது கலந்துரையாடல் கூட்டம் என்பதைச் சுட்டிக்காட்டி, கடந்த 6 மாதங்களுக்கு முன்பு சிமெண்ட் மூட்டை ஒன்று ரூ.120 - ரூ.130 என்ற அளவில் இருந்த விலை தற்போது படிப்படியாக உயர்ந்து ரூ.190 என்ற அளவை எட்டி இருக்கின்றது. இது மேலும் உயர்ந்து ரூ.200/-ஐ பொங்கலுக்கு முன்பு தொட்டுவிடுமோ என்ற மக்களின் அச்சத்தை எடுத்துக்கூறி, உற்பத்திப் பொருட்களின் விலை மற்றும் உற்பத்திச் செலவு ஆகியன எந்த வித அதிகரிப்பும் இல்லாதிருக்கும் பொழுது சிமெண்டின் விலை மட்டும் ஏறு முகத்தில் இருப்பது குறித்து தம்முடைய கவலையைத் தெரிவித்துக் கொண்டார்.

நாட்டின் பல்வேறு நகரங்களில் நிலவும் சிமெண்ட் விலை பற்றிய அட்டவணை விவாதிக்கப்பட்டது. ஆந்திராவில் ரூ.140 - ரூ.150-க்கு விற்கப்படும் சிமெண்ட் தமிழ்நாட்டில் ரூ.180 - ரூ.190-க்கு விற்கப்படுகின்றது என்ற புள்ளி விவரங்களை அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார். தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் தமிழ்நாட்டில் தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்கள், அதிக விலைக்கு விற்பதை அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டினார்.

சமீப காலத்தில் இது சம்பந்தமாக வெளி வந்துள்ள பத்திரிக்கைச் செய்திக் குறிப்புகளையும் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார். அதற்குப் பதிலளித்த நிர்வாகிகள், இந்த ஆண்டில் இதுவரை சிமெண்ட் ஆலைகள் மிகுந்த நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாகக் கூறினர். மிகவும் குறைந்த உற்பத்திச் செலவுகளைக் கொண்ட தனியார் நிறுவனங்கள் மிக அதிக விலைக்கு சிமெண்ட்டை விற்கும்பொழுது நட்டத்தில் எப்படி இயங்க முடியும் என அரசு அதிகாரிகள் வினவினர்.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஆலைகளான அரியலூர் மற்றும் ஆலங்குளம் தொழிற்சாலைகள் மிகவும் பழமையானவை. மேலும், மிக அதிக தொழிலாளர்களைக் கொண்டு உற்பத்திச் செலவு மிகவும் அதிகமாக உள்ளது. ஆனால், பெருமளவு நவீனமயமாக்கப்பட்டுள்ள தனியார் சிமெண்ட் தொழிற்சாலைகள் மிகக் குறைந்த விலையில் சிமெண்ட்டை உற்பத்தி செய்து மிகக் குறைந்த விலையில் விற்க முடியும். மேலும் தமிழ்நாட்டிலுள்ள முக்கிய தனியார் சிமெண்ட் ஆலைகள் தமிழக அரசாங்கத்திடமிருந்து 10 ஆண்டு காலம் நீட்டிக்கக் கூடிய முழு விற்பனை வரிச்சலுகைகளை கடந்த சில ஆண்டுகளாக பெற்று வருகின்றார்கள். இவற்றைக் கருத்தில் கொண்டு சிமெண்ட் உற்பத்தியாளர்கள் விலையைக் குறைக்க முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

தமிழர் திருநாளான பொங்கல் திருநாளை முன்னிட்டு சிமெண்ட் விலையைக் குறைக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் முனைப்பாக இருக்கின்றது. கூட்டத்தின் முடிவில் பேசிய தொழில்துறை செயலாளர் மற்றும் அமைச்சர் அவர்களும், தனியார் சிமெண்ட் கம்பெனிகள் அரசின் எண்ணத்தைப் புரிந்து கொண்டு, பொது மக்களின் நலனையும் பல இலட்சக்கணக்கான கட்டடத் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பையும் கருத்தில் கொண்டு உடனடியாக விலையைக் குறைப்பார்கள் என்று நம்புவதாகத் தெரிவித்தனர். இது சம்பந்தமாக மேலும் தொடர் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டது.

★ ★ ★

**த**மிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆண்டுதோறும் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையினை யொட்டி சென்னை தீவுத்திடலில் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை நடத்தி வருகின்றது.

இச்சுற்றுலாப் பொருட்காட்சி 1974ஆம் ஆண்டு "பொங்கல் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி'' என்ற பெயரில் முதன்முறையாக தொடங்கப்பட்டது. சென்னையில் வாழும் பொதுமக்களுக்கு ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் இப்பொருட்காட்சி ஒரு சிறந்த பொழுதுபோக்கு அம்சமாக திகழ்கின்றது.



இவ்வாண்டு பொருட்காட்சியில் மத்திய, மாநில அரசுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனங்கள் தங்களுடைய அரங்குகளை அமைப்பதற்கு 7 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு இவ்வரங்குகளை நிறுவுவதற்கு 30.14 இலட்சம் ரூபாய் வழங்கி உள்ளது.


பிற மாநில அரசுகளின் வரிசையில் இமாசல பிரதேசம், கர்நாடகம், பாண்டிச்சேரி மாநிலங்களும், மத்திய அரசின் நிறுவனங்களான காயர்போர்டு, துறைமுகம், சென்னை பெட்ரோலியம் நிறுவனம், தெற்கு ரயில்வே ஆகியவை தங்களுடைய அரங்குகளை நிறுவியுள்ளன. அனைத்து ரக அழகு சாதனப் பொருட்கள், மின் சாதனம் மற்றும் மின் அணு சாதனங்கள், தோல் மற்றும் கயிறு உற்பத்திப் பொருட்கள், துணி வகைகள், அழகிய பூச்செடிகள், விதைகள் போன்ற மக்களின் அன்றாட தேவைப் பொருட்கள் இப்பொருட் காட்சியில் அமைந்துள்ள 150க்கும் மேற்பட்ட கடைகளுடன் கூடிய வணிக வளாகத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

இவ்வாண்டு சுற்றுலாப் பொருட்காட்சியின் கருத்து உலக சுற்றுலா தின கருப்பொருளான ''சுற்றுலா'' – ''உலக சமாதானத்திற்கு ஒரு கருவி'' – ''அனைத்து மக்களாலும் விவாதிக்கப்பட வேண்டிய பொருள்'' என்பதனை பிரதிபலிக்கும் வகையில் சுற்றுலாப் பொருட்காட்சியின் பிரதான நுழைவு வாயில் அமைக்கப்பட்டுள்ளது.

புதுமைகள் நிறைந்த இவ்வாண்டு சுற்றுலாப் பொருட்காட்சியில் ஒரு சிறப்பு அம்சமாக தனியார் உடன் இணைந்து "சென்னையில் எகிப்து'' என்ற ஓர் புதிய அரங்கு சிறுவர் இரயில் ஒருபாதைக்குட்பட்ட பகுதியில் 20,000 அடி சதுர பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வரங்கின் சிறப்பு அம்சமாக எகிப்து பிரமிடு மற்றும் மம்மிகள் ஆகியவற்றை நேரில் பார்வையிடுவது போன்ற ஓர் உணர்வு மற்றும் சூழலில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வரங்கில் ''புதையல் வேட்டை'' என்ற ஒரு போட்டி ஏற்பாடு செய்திருப்பது இவ்வரங்கினை கண்டுகளிக்கும் பொதுமக்களுக்கு திகைப்பூட்டும் நிகழ்ச்சியாக அமைந்துள்ளது.

சுற்றுலாப் பொருட்காட்சி அரசு விடுமுறையற்ற காலங்களில் நண்பகல் 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும், அரசு விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 11.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை நடைபெறும்.



## 28–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2002

28–வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி, 2002, 11–1–2002 அன்று பொதுமக்கள் பார்வைக்காக திறந்துவிடப்பட்டது. •


ஆசிரியரும் வெளியிடுபவரும் : **தேவ. ஜோதி ஜெகராஜன்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5364906



223670



கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.



**உ**ங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, "**பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்**"

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் 1 | மாதச் சந்தா ரூ. 2 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. 3 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 4 | கூடுதல் தொகை (3+4) ரூ. 5 | அரசு தள்ளுபடி * ரூ. 6 | அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 7 |
|---|---|---|---|---|---|---|
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20% க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டாம்பூச்சி, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.


இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.

கோ-ஆப்டெக்ஸ் தமிழ்நாடு கைத்தறி

பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.


தமிழரசு

R.N.I.No.21446/70
Licence No.G/TN/CPMG/190,WPP-130




தமிழரசு

பிப்ரவரி - மார்ச், 2002




செல்வி ஜெ ஜெயலலிதா தலைமையிலான
அமைச்சரவை பதவியேற்பு விழா
SWEARING-IN CEREMONY OF





# ‘வெற்றி’க்குப் பிறந்த நாள் வாழ்த்து



வண்டுகள் பாடிய செந்தமிழ்ப் பாடல்
வானை நிறைக்கிறது
வள்ளல் தென்றல் பூக்களின் வாசம்
வாரி இறைக்கிறது

எல்லா முகமும் தாமரைப் பூவாய்
இன்று மலர்கிறது
எல்லோர் இதழும் ‘வாழிய’ என்று
வாழ்த்தி மகிழ்கிறது

‘ஜெய ஜெய’ என்னும் பேரிகை ஓசை
திசைகளில் கேட்கிறது
செஞ்சொற் புலவர்கள் தந்திடும் சிந்துகள்
சிந்தையில் பாய்கிறது

வீரத் திருமகள் பிறந்த திருநாள்
வெற்றியின் நாளாச்சு
வெற்றித் திருமகள் பெருமையை உலகம்
முற்றும் உணர்ந்தாச்சு

எத்தனை தீமைகள் சுற்றி வளைத்தன
எல்லாம் கடந்தாச்சு
அத்தனை தீமையும் சத்துண வாகிய
அற்புதம் நடந்தாச்சு

சிங்கத் தலைவியின் சிறப்புக் கெல்லாம்
காரணம் ‘மக’ராசி!
செந்தமிழ் நாடினிப் புதுயுகம் காணும்
காரணம் மகராசி!

தங்கத் திருமகள் விழிகள் திறந்தது
மங்கல மாசியிலே
தன்னிகரில்லாப் பதவியை மக்கள்
தந்ததும் மாசியிலே

வரலாற் றுக்கொரு திருப்பம் தருகிற
வல்லமையே வருக!
வையத் தலைமை கொள்ளப் பிறந்த
வரமே நீவருக!

கவிஞர் இளந்தேவன்





## வாழ்நாளிலேயே கிடைத்த மிகச்சிறந்த பிறந்தநாள் பரிசு

பிப்ரவரி 24 அன்று, செய்தியாளர்களிடம் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கூறியதாவது :

"ஆண்டிபட்டியில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் 78 ஆயிரத்து 422 வாக்குகள் நான் பெற்றுள்ளேன். 41 ஆயிரத்து 200 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருக்கிறேன். பதிவான வாக்குடன் ஒப்பிடும்போது நான் பெற்றுள்ள வாக்கு 58.2 சதவீதம். என் வாழ்நாளில் கிடைத்த மிகச் சிறந்த பிறந்தநாள் பரிசு இதுதான்.

ஆண்டிபட்டி வாக்காளர்களுக்கு என் நெஞ்சார்ந்த உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆண்டிபட்டி மக்களுக்கு தேர்தல் நேரத்தில் நான் கொடுத்த வாக்குறுதிகள் அத்தனையும் நிறைவேற்றுவேன் என்று இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றைய தினத்தில் என் இலட்சியத்தை தமிழக மக்களுக்கு தெரிவித்துக் கொள்வது என் தலையாய கடமை.

தமிழ்நாட்டில் ஆண்டிபட்டி தொகுதியை முதன்மை தொகுதியாக மாற்றுவதே என்னுடைய இலட்சியமாகும். ஒட்டுமொத்த இந்தியாவில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலம் ஆக்கும் வரை ஓயமாட்டேன் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்".

பின்னர் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அளித்த பதில்களும் வருமாறு :

கேள்வி : எப்போது முதல்வராகப் பதவி ஏற்பீர்கள் ?

செல்வி **ஜெ ஜெயலலிதா** : விரைவில் தேதி அறிவிக்கப்படும்.

கேள்வி : தமிழக அரசியலில் உங்களை வீழ்த்த செய்த சதியை முறியடித்ததாக கருதுகிறீர்களா ?

பதில் : ஆம். இதுவரை எந்த அரசியல் கட்சித் தலைவரும் சந்திக்காத சோதனைகளையும், இடையூறுகளையும் சந்தித்து நடந்த தேர்தலில் வெற்றி பெற்று இருக்கிறேன்.

தொண்டர்கள் மிகவும் கட்டுப்பாட்டுடன், ஒற்றுமையுடன் செயல்பட்டு அவர்கள் அளித்த ஆதரவுதான் இந்த அளவிற்கு வெற்றி பெற்றதற்கு காரணம். என் பிறந்த நாளில் எல்லாத் துறைகளிலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றும் வரை ஓயமாட்டேன் என உறுதி பூண்டுள்ளேன்.

கேள்வி : நீங்கள் முதல்வர் பதவி ஏற்கும் போது மந்திரிசபையில் மாற்றம் உண்டா ?

பதில் : இன்னும் சில நாளில் உங்களுக்குத் தெரியும்.

கேள்வி : இந்த இடைத்தேர்தலில் தன்னந்தனியாக மக்களை சந்தித்து தேர்தல் பிரச்சாரம் செய்தீர்கள். இது எந்த ஸ்டைலாகும்.

பதில் : இது புதியதல்ல. இதுதான் என் ஸ்டைல்.

கேள்வி : ஆண்டிபட்டி தேர்தலில் உங்களின் வெற்றி அரசியலில் எப்படிப்பட்ட தாக்கம் உருவாக்கும் என்று கருதுகிறீர்கள் ?

பதில் : இந்த வெற்றி தமிழக அரசியல் வரலாற்றிலேயே கிடைத்த மிகப் பெரிய வெற்றி.

இந்தியாவில் மட்டுமின்றி உலகின் எந்த நாட்டிலும் இத்தனை துன்பம் – துயரங்களையும், சோதனை இடர்ப்பாடுகளையும் யாரும் சந்தித்து இருக்க முடியாது என்று என்னால் கூற முடியும். 5 ஆண்டுகளுக்கு முன்பு என் அரசியல் வரலாறு முடிந்துவிட்டது என்று சொன்னார்களே அந்த கூற்று தவறு என்பதை இன்று நிரூபித்து விட்டோம்.

நான் சந்தித்த வரலாறு காணாத சோதனை போன்று, சோதனைக்கு ஆட்படுத்தப்படுபவர்கள் துணிவு, உறுதியுடன் இருக்கவும், எவ்வளவு சோதனை வந்தாலும் எதிர்கொள்ளவும், வாழ்க்கையின் விரக்தி விளிம்பில் நிற்போருக்கு புதிய தெம்பு ஸ்தரியம் கொடுக்க இந்த வெற்றி உதவும். இதற்குக் காரணம் மக்கள் காட்டிய அன்பும் ஆதரவும்தான்.

நான் எப்போதும் சொல்வதையே இப்போதும் சொல்கிறேன். "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.







# அமைச்சரவை பதவி ஏற்பு

தமிழக அமைச்சரவை பதவியேற்பு விழா 2–3–2002 அன்று எளிய முறையில், சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது.

புதிதாகப் பதவியேற்க இருக்கும் அமைச்சர்கள் விழா மேடையில் காலை 10–50 மணிக்கு வந்து இருக்கையில் அமர்ந்தனர். இதனைத் தொடர்ந்து செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் விழா நடக்கும் அரங்கத்திற்கு வருகை தந்தார். அவரைத்தலைமைச் செயலாளர் திரு. சங்கர் வரவேற்றார்.

மேதகு தமிழக ஆளுநர் திரு. ராம மோகன்ராவ் விழா நடைபெறும் சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்துக்கு, சரியாக 10.55 மணிக்கு வருகை தந்தார். தலைமைச் செயலாளர் ஆளுநரை வரவேற்றார். ஆளுநர் அரங்கத்தில் நுழைந்தபோது குழலோசை இசைக்கப்பட்டது. ஆளுநர் அரங்கத்தில் நுழைந்த நிமிடத்தில் அரங்கத்தில் இருந்தவர்கள் அனைவரும் எழுந்து நின்றனர். மேடை அருகே ஆளுநரை முதலமைச்சராக பதவியேற்க இருந்த செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மலர்க் கொத்து கொடுத்து வரவேற்றார். தன்னுடைய அமைச்சரவையில் அமைச்சர்களாகப் பதவியேற்பவர்களை ஆளுநர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். இதன்பின்னர் பதவியேற்பு உறுதிமொழி, ரகசியக் காப்பு உறுதிமொழிப் படிகள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து தலைமைச் செயலாளர் திரு.சங்கர் முதலமைச்சராகப் பதவியேற்க விருக்கும் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்துவைக்குமாறு ஆளுநரைக் கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து ஆளுநர் அவர்கள் சரியாக 11.05 மணிக்கு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார்.

அதன்பின்பு தலைமைச் செயலாளர், அமைச்சர்களாகப் பதவியேற்பவர்களின் பெயர்களை ஒன்றன்பின் ஒன்றாக அறிவிக்க, ஆளுநர் அவர்கள் அமைச்சர்களுக்கு பதவியேற்பு உறுதிமொழியையும், ரகசிய காப்பு உறுதிமொழியையும் செய்துவைத்தார்.

பதவியேற்பு நிகழ்ச்சி முடிவடைந்ததும் நாட்டுப்பண் இசைக்கப்பட்டது. இதன்பின்பு, ஆளுநர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் மேடையில் ஒன்றாக புகைப்படமெடுத்துக் கொண்டார்கள். பிறகு, ஆளுநர் அவர்கள் புறப்பட்டுச் சென்றார். ஆளுநர் அவர்களை முதலமைச்சர் அவர்கள் வழியனுப்பி வைத்தார்.

பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சட்டமன்ற–நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். தமிழக சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து, எதிர்க்கட்சித்தலைவர் பேராசிரியர் க. அன்பழகன், மேயர் திரு. மு.க.ஸ்டாலின், திரு. கி.வீரமணி, புலவர் புலமைப்பித்தன், முன்னாள் மத்திய அமைச்சர்கள் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், திரு.வாழப்பாடி ராமமூர்த்தி, திரு.தங்கபாலு மற்றும் திரு. கிருபாநிதி, திரு. என். வரதராஜன், திரு. சுதர்சன நாச்சியப்பன், எம்.பி., திரு. ஜெகவீரபாண்டியன் உள்ளிட்ட பலரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.



திரு.கமல்ஹாசன், திரு.விஜயகாந்த், திரு.ராதாரவி, திருமதி. மனோரமா, விஜயசாந்தி, குஷ்பு உள்ளிட்ட ஏராளமான திரைப்படக் கலைஞர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், இசையமைப்பாளர்கள் உள்ளிட்ட திரையுலக பிரமுகர்கள் பலரும் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டனர். பதவியேற்பு நிகழ்ச்சிக்குப் பின்னர், அனைத்து பிரமுகர்களுக்கும், பெருந்திரளாகக் கூடியிருந்த பொதுமக்களுக்கும் முதலமைச்சர் அவர்கள் தமது வணக்கத்தையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டார்.

### வங்கக் கடலோரம் வந்து குவிந்த மக்கள் வெள்ளம்

ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றிபெற்று தமிழகத்தில் மீண்டும் முதலமைச்சராக செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பதவியேற்கும் காட்சியைக் காண வங்கக் கடலோரம் அருகே உள்ள சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் குவிந்தனர். பதவியேற்கும் நிகழ்ச்சியைக் காண விழாநடக்கும் இடத்திற்கு அதிகாலை முதலே வெளியூர்களிலிருந்து மக்கள் திரண்டு வந்திருந்தனர். விழா நடைபெறும் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபம் அமைந்துள்ள காமராசர் சாலை முழுவதும்

மனிதத் தலைகள். வங்கக் கடல் அலையா மக்கள் மனிதத் தலையா என்று வியக்கும் அளவுக்கு பதவியேற்பு நிகழ்ச்சியைக் காண உற்சாகமாக மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

### பெரிய திரைகளில் பதவியேற்பு நிகழ்ச்சி

பதவி ஏற்பு நிகழ்ச்சி நடைபெறும் அரங்கத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் அமர்ந்திருந்தனர். பல்கலைக்கழக மண்டப வளாகத்தில், மண்டபத்திற்கு வெளியே சாலையில், மண்டபத்தைச் சுற்றியுள்ள சுமார் 500 மீட்டர் தூரமெங்கும் மக்கள் வெள்ளம். மக்களின் வசதிக்காக பதவியேற்கும் காட்சியை வெளியே பெரிய திரைகள் வைத்து ஒளிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தத் திரையின் முன்பு மக்கள் திரண்டிருந்து பதவியேற்கும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

### கிரிக்கெட் மைதானத்திலும் மக்கள் வெள்ளம்

வெளியே அகன்ற திரை அமைத்து நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியும்கூட, மக்கள் கூட்டம் கட்டுக்கடங்கவில்லை. பதவியேற்பு விழா நிகழ்ச்சி நடைபெறும் சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலிருந்து சில நூறு மீட்டர் தூரத்தில் உள்ள சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் உள்ள பெரிய திரையில்



பதவியேற்பு நிகழ்ச்சி நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இதனால் சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில், பொதுமக்கள் பதவியேற்பு நிகழ்ச்சியைக் காணத் திரண்டனர். இதனால் மைதானம் நிரம்பி வழிந்தது.

★ ★ ★



மாண்புமிகு

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

தலைமையிலான

## புதிய அமைச்சரவை

## பதவி ஏற்பு

2-3-2002




செல்வி ஜெ ஜெயலலிதா

முதலமைச்சர்




திரு. ஓ. பன்னீர்செல்வம்
பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும்
ஆயத்துறை அமைச்சர்




திரு. சி. பொன்னையன்
நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்






டாக்டர் மு. தம்பிதுரை
கல்வி அமைச்சர்




திரு. டி. ஜெயக்குமார்
சட்டத்துறை அமைச்சர்





திரு. பி. சி. ராமசாமி
இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்




திரு. எஸ். செம்மலை
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்






திரு. சி. துரைராஜ்
உள்ளாட்சித்துறை அமைச்சர்




திரு. ப. தனபால்
கூட்டுறவு, உணவு, குடிமைப் பொருள்
மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர்




திரு. என். தளவாய் சுந்தரம்
வருவாய்த்துறை அமைச்சர்




திருமதி. பா. வளர்மதி
சமூகநலத்துறை அமைச்சர்

223670




திரு. இரா. ஜீவானந்தம்
வேளாண்மைத்துறை அமைச்சர்




திரு. சொ. கருப்பசாமி
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்




**திரு. இரா. விஸ்வநாதன்**
போக்குவரத்துத்துறை அமைச்சர்





**திரு. நயினார் நாகேந்திரன்**
மின்சாரத்துறை அமைச்சர்






**திரு. செ. மா. வேலுச்சாமி**
தொழில்துறை மற்றும் வணிகவரித்துறை அமைச்சர்




**திரு. ட மோகன்**
வனம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் அமைச்சர்




திரு. இரா. வில்வநாதன்
ஊரகத் தொழில்துறை அமைச்சர்




திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்
கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்




திரு. எம். சி. சம்பத்
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்




திரு. கே. சுதர்சனம்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்




திரு. வா. து. நடராஜன்
தொழிலாளர் நலத்துறை அமைச்சர்




திரு. எஸ். இராமச்சந்திரன்
பால்வளத்துறை அமைச்சர்






திரு. கே. கே. பாலசுப்பிரமணியன்
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்




திரு. வி. சோமசுந்தரம்
கைத்தறி மற்றும் ஜவுளித்துறை அமைச்சர்




திரு. **எம். ராதாகிருஷ்ணன்**
மீன்வளத்துறை அமைச்சர்




திரு. **ஏ. மில்லர்**
சுற்றுலாத்துறை அமைச்சர்



# தமிழக அமைச்சர்கள் பொறுப்பேற்றுள்ள துறைகள்

| | |
|---|---|
| செல்வி ஜெ ஜெயலலிதா<br>**முதலமைச்சர்** | நிர்வாகம், இந்திய நிர்வாகப் பணிகள், இந்திய துறைப் பணிகள், இதர அகில இந்தியப்பணிகள், வருவாய் அலுவலர்கள், உள்துறை, காவல்துறை, சிறுபான்மையினர் நலம். |
| திரு. ஓ. பன்னீர்செல்வம்<br>**பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை அமைச்சர்** | பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட்ட பாசனம், மது விலக்கு மற்றும் ஆயத்துறை, மொலாசஸ், லஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைத் துறை. |
| திரு. சி. பொன்னையன்<br>**நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்** | நிதி, திட்டம், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டம் இயற்றல், எடைகள் மற்றும் அளவுகள், கடன் வழங்கும் சட்டம் உட்பட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு மற்றும் தகவல் தொழில் நுட்பம் |
| டாக்டர் மு. தம்பிதுரை<br>**கல்வி அமைச்சர்** | கல்வி, தொழிற்கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் விளையாட்டு மற்றும் இளைஞர் நல்வாழ்வு, தொல்பொருள் துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் கலாச்சாரம், வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் மற்றும் அகதிகள். |
| திரு. டி. ஜெயகுமார்<br>**சட்டத்துறை அமைச்சர்** | சட்டம் மற்றும் நீதிமன்றங்கள் |
| திரு. பி.சி. ராமசாமி<br>**இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்** | இந்து சமயம் மற்றும் அறநிலையம் |

| | |
|---|---|
| திரு. எஸ். செம்மலை<br>மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் | மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் |
| திரு. சி. துரைராஜ்<br>உள்ளாட்சித்துறை அமைச்சர் | நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் ஊரக கடன், நகர்ப்புற மற்றும் ஊரக குடிநீர் விநியோகம் |
| திரு. ப. தனபால்<br>கூட்டுறவு, உணவு, குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் | கூட்டுறவு, உணவு, குடிமைப் பொருள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல். |
| திரு. என். தளவாய் சுந்தரம்<br>வருவாய்த்துறை அமைச்சர் | வருவாய், மாவட்ட வருவாய் நிர்வாகம், துணை மாவட்ட ஆட்சியர்கள், பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், பூதானம் மற்றும் கிராம தானம் மற்றும் பாஸ்போர்ட்கள். |
| திரு. இரா. ஜீவானந்தம்<br>வேளாண்மைத்துறை அமைச்சர் | வேளாண் துறை, வேளாண் பொறியியல், வேளாண் சேவை கூட்டுறவுகள், தோட்டக்கலை, கரும்பு செஸ், கரும்புத்துறை |
| திருமதி. பா. வளர்மதி<br>சமூக நலத்துறை அமைச்சர் | பெண்கள் நலம் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலத் துறை, சத்துணவு, உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வு, பிச்சைக்காரர்கள் விடுதிகள், அனாதை இல்லங்கள் சீரமைப்பு நிர்வாகம். |
| திரு. சொ. கருப்பசாமி<br>ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் | ஆதிதிராவிடர் நல்வாழ்வு, மலைவாழ் மக்கள், கொத்தடிமைகள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் நல்வாழ்வு |



| | |
|---|---|
| திரு. இரா. விஸ்வநாதன்<br>போக்குவரத்துத்துறை அமைச்சர் | போக்குவரத்து, தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகனங்கள் சட்டம் மற்றும் துறைமுகங்கள் |
| திரு. நயினார் நாகேந்திரன்<br>மின்சாரத்துறை அமைச்சர் | மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி |
| திரு. செ.மா. வேலுச்சாமி<br>தொழில்துறை மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் | தொழில்கள், இரும்பு மற்றும் உருக்கு கட்டுப்பாடு, சுரங்கம் மற்றும் தாதுப் பொருட்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரி. |
| திரு. ப. மோகன்<br>வனம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் அமைச்சர் | வனங்கள் மற்றும் சுற்றுப்புறச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு |
| திரு. இரா. வில்வநாதன்<br>ஊரகத் தொழில்துறை அமைச்சர் | விசைத்தறிகள் உட்பட்ட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், காதி மற்றும் கிராமத் தொழில் |
| திரு. எம்.சி. சம்பத்<br>வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் | வீட்டுவசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, நகரத் திட்டம், குடிசை மாற்று, நகர்ப்புற மேம்பாடு சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் |
| திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்<br>கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் | கால்நடை பராமரிப்பு |

| | |
|---|---|
| திரு. கே. சுதர்சனம்<br>பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| திரு. வா.து. நடராஜன்<br>தொழிலாளர் நலத்துறை அமைச்சர் | தொழிலாளர் நலம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி நகர்ப்புற மற்றும் ஊரக வேலைவாய்ப்பு கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபுக்கள். |
| திரு. எஸ். இராமச்சந்திரன்<br>பால்வளத்துறை அமைச்சர் | பால் மற்றும் பால் பொருள் மேம்பாடு |
| திரு. கே.கே. பாலசுப்பிரமணியன்<br>செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் | தகவல் மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பம் திரைப்படவியல் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு |
| திரு. வி. சோமசுந்தரம்<br>கைத்தறி மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் | கைத்தறி மற்றும் ஜவுளி |
| திரு. எம். ராதாகிருஷ்ணன்<br>மின்வளத்துறை அமைச்சர் | மின்வளம் |
| திரு. ஏ. மில்லர்<br>சுற்றுலாத்துறை அமைச்சர் | சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் |



# பதவியேற்றபின் கையெழுத்திட்ட முதல் கோப்பு



தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சராகப் பதவி ஏற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2–3–2002 அன்று தலைமைச் செயலகத்திற்கு வருகை தந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறையில் அமர்ந்து இரு கோப்புகளுக்கு ஒப்புதல் வழங்கி கையொப்பமிட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் அளித்து கையொப்பமிட்ட கோப்புக்களின் விவரம் பின்வருமாறு :

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக, தமிழ்நாட்டில் உள்ள, சென்னை நீங்கலாக, 29 மாவட்டங்களில் உள்ள ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் வகையில் "ஊரக குடிநீர் வழங்கும் திட்டம்" (Rural Water Supply Programme) அமல்படுத்தப்படவுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இத்திட்டத்தை உடனடியாக செயல்படுத்துமாறு, முதல் கோப்பாக கையொப்பமிட்டு, ஒப்புதல் வழங்கினார். மத்திய அரசு நிறுவனமான ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து (Life Insurance Corporation of India) ரூ.158 கோடி கடனாக பெற்று இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டத்தில் ரூ.98 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ள சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டமும் அடங்கும். இதன் மூலம் ஆண்டிபட்டி தொகுதியில் அடங்கியுள்ள கிராமங்களும் பயனடையும். தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறுகின்ற வகையில் செயல்படுத்தப்பட உள்ள இந்த "ஊரக குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு" முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதல் கோப்பாக கையொப்பமிட்டு ஒப்புதல் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இரண்டாவதாக கையொப்பமிட்டு, ஒப்புதல் வழங்கிய கோப்பு, தமிழ்நாட்டில் உள்ள ஊட்டக் குறைவினால் (Malnutrition) பாதிக்கப்பட்டுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து அளித்து,



நான்கு ஆண்டு காலத்திற்குள் அவர்களை ஊட்டச்சத்து நிறைவுடையவர்களாக மாற்றி, தமிழ்நாடு ஊட்டக் குறைவு அற்ற மாநிலம் (Malnutrition free State) என்ற குறிக்கோளை அடைவது பற்றியதாகும்.

ஆண்டு ஒன்றுக்கு ரூ.63.11 கோடி திட்டச் செலவில் மொத்தம் சுமார் 12 இலட்சம் குழந்தைகள் பயன் அடையும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள இந்த திட்டத்தின் வாயிலாக, மாநிலத்தில் சுமார் 46 சதவீதம் என்ற அளவில் தற்போது ஊட்டக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள், ஊட்டக் குறைவு அற்றவர்களாக மாற்றப்படுவதோடு, ஊட்டக் குறைவால் ஏற்படும் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் இறப்பு, கருவிலேயே மரணம் போன்ற நிகழ்வுகளும் முற்றிலும் அகற்றப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் வல்லுநர்கள் அடங்கிய குழு இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வுக் கூட்டம் நடத்தி கண்காணிக்கும்.

இந்த திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட கிராம அளவில் கிராமச் சபை, பஞ்சாயத்து போன்ற அமைப்புகள் ஈடுபடுத்தப்பட்டு, மக்களின் ஒத்துழைப்போடு செயல்படுத்தப்படும்.

இந்த திட்டத்தின் இதர அம்சங்கள் பின்வருமாறு :

1. அங்கன்வாடி சத்துணவுக் கூடத்தில் உணவு உண்கின்ற குழந்தைகளுக்கு கூடுதல் சத்துணவு அளித்தல்.

2. குழந்தைகள் வீட்டுக்கு எடுத்துச் சென்று சாப்பிடும் வகையில் கூடுதல் சத்துணவு அளித்தல்.

3. ஊட்டச்சத்து நிறைந்த உணவினை வீட்டிலேயே குறைந்த செலவில் தயாரிக்க தாய்மார்களுக்கு பயிற்சி அளித்தல்.


4. தாய்ப்பால் ஊட்டவும், குடும்பக் கட்டுப்பாடு முறைகளைப் பின்பற்றவும் தாய்மார்களை ஊக்குவித்தல்.

5. தாய்மை அடைந்துள்ள மற்றும் குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து வழங்குதல்.

இந்த திட்டம் சமூக நலம், கல்வி, மக்கள் நல்வாழ்வு ஆகிய துறைகளின் மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

வளர்கின்ற இளைய சமுதாயத்திற்கு வலுவூட்டுகின்ற இந்த திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்த கோப்பில் உத்தரவிட்டார்கள்.

★ ★ ★








# கொடுத்த வாக்குறுதிகள் காப்பாற்றப்படும் – நிறைவேற்றப்படும்

– மாண்புமிகு முதலமைச்சராகப் பதவியேற்ற பின்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
2–3–2002 அன்று பத்திரிகையாளர் சந்திப்பில்...

கேள்வி : இந்த அரசு முன்னேற்றப் பணிகளுக்கும், சமூக நலத்திட்டங்களுக்கும் முன்னுரிமை அளித்து அதில் கவனம் செலுத்துமா?

முதல்வர் : ஆமாம்.

கேள்வி : **கடந்த டிசம்பர் மாதம் அரசின் சார்பில் சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது இதுபோன்ற திட்டங்களை எவ்வாறு செயல்படுத்த இருக்கிறீர்கள் ?**

முதல்வர் : நான் சற்று முன்பு தெரிவித்ததைப் போல அடுத்த வாரத்தில் ஆளுநர் அவர்களின் உரை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. வருகிற ஆண்டிற்கான திட்டங்கள் அனைத்தும் அதில் தெளிவாகத் தெரிவிக்கப்படும். எனவே இப்போது நான் அதைப் பற்றித் தெரிவிப்பது உகந்ததாக இருக்காது.

கேள்வி : **தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்குவேன் என்று தெரிவித்துள்ளீர்கள். வேளாண்மைத் துறையிலா ? தொழில்துறையிலா ? எந்த முறையில் திட்டமிட இருக்கிறீர்கள் ?**

முதல்வர் : அனைத்துத் துறையிலும், அனைத்துப் பிரிவுகளிலும் தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன். அனைத்துத் துறைகளுக்கும், அனைத்துப் பிரிவுகளுக்கும் ஒரேமாதிரியான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் இல்லாத நிலை உருவாக வேண்டுமென்பதே என்னுடைய இலட்சியம், அதுவே எனது எதிர்காலக் கனவு. அந்த நிலையை அடையும்போது தமிழ்நாடு இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழும்.

கேள்வி : **தற்போதுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிக்க என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறீர்கள் ?**

முதல்வர் : இதற்கான விளக்கம் வருகிற நிதிநிலை அறிக்கையில் தெளிவுபடுத்தப்படும். ஆளுநர் உரைக்குப் பிறகு நிதிநிலை அறிக்கை மார்ச் மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கப்படும். அதுவரை சிறிது பொறுமையாகக் காத்திருங்கள்.

கேள்வி : **தமிழ்நாட்டில் ஊழல் இல்லாத ஆட்சி புரிய எந்தவிதமான நடவடிக்கை எடுக்க விருக்கிறீர்கள் ?**

முதல்வர் : அதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் படும்.

கேள்வி : **தற்போதுள்ள நிதி நெருக்கடியில் இத்தனை அமைச்சர்கள் அவசியமென்று கருதுகிறீர்களா ?**

முதல்வர் : இதற்கும் நிதி நிலைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. திறமையான நிர்வாகம் தான் முக்கியம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அமைச்சர் இருந்தால் தான் மாவட்டம் முழுவதும் உள்ள நிர்வாகத்தை சரிவர நிர்வகிக்க இயலும். அப்படிப் பார்த்தாலும் 30 மாவட்டத்திற்கும் பிரதிநிதித்துவம் அளித்திருந்தால் இன்னும் 3 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 27 அமைச்சர்கள்தான் நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

கேள்வி : **நிதி நெருக்கடியைச் சமாளிக்க மத்திய அரசிடமிருந்து தனியாக நிதியுதவி கோர இருக்கிறீர்களா ?**

முதல்வர் : நான் இன்றுதான் பதவியேற்றுள்ளேன். இப்போதுதான் என்னுடைய அலுவலகத்திற்கு வந்துள்ளேன். இதுகுறித்து, நான் அதிகாரிகளுடன் விவாதித்து மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பேன்.

கேள்வி : **காவிரிப் பிரச்சினையில் முன்புள்ள நிலையே தொடருமா ? தற்போது என்ன நிலையை எடுக்க உள்ளீர்கள் ?**

முதல்வர் : காவிரிப் பிரச்சினையில் அரசின் நிலையில் எவ்வித

மாறுதலும் இல்லை. இந்தப் பிரச்சினை நடுவர் மன்றத்தில் இருக்கும்போது அதைப் பற்றி விவாதிப்பது உகந்ததல்ல. தமிழக அரசின் உரிமையை எந்த நிலையிலும் நாம் விட்டுக் கொடுக்க முடியாது.

கேள்வி : **தமிழ்நாட்டில் நிதிநெருக்கடி இருக்கிறது. அதனால் இலவச மின்சாரம் ரத்து செய்யப்படுமா? நிதி நெருக்கடியிலிருந்து மீட்க என்ன நடவடிக்கைகள் எடுக்கவிருக்கிறீர்கள்?**

முதல்வர் : எப்படிச் செய்கிறோம் என்பதை நீங்களே போகப் போகப் பார்ப்பீர்கள். கொடுத்த வாக்குறுதிகள் காப்பாற்றப்படும். நிறைவேற்றப்படும்.

கேள்வி : **இன்று நடைபெற்ற பதவியேற்பு விழாவில், எதிர்க்கட்சித் தலைவர், ஸ்டாலின் மற்றும் இதர கட்சிகளைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டார்களே...?**

முதல்வர் : அவர்கள் விழாவில் கலந்துகொண்டது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

கேள்வி : **தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?**

முதல்வர் : தமிழ்நாடு ஏற்கெனவே தொழில் முதலீடுகளை ஈர்க்கும்வகையில் தான் உள்ளது. அது மேலும் தொடரும் வகையில் நடவடிக்கைகள் ஏடுக்கப்படும். அதுகுறித்த விவரங்கள் நிதிநிலை கூட்டத்தொடரில் விளக்கப்படும்.

கேள்வி : **நீங்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ளீர்கள். இதனை நீங்கள் எப்படி உணருகிறீர்கள்?**

முதல்வர் : அண்மையில் நீதிமன்றங்கள் வழக்குகளில் இருந்து என்னை விடுவித்து அளித்த தீர்ப்புகளும், ஆண்டிபட்டி மக்கள் எனக்கு வழங்கியுள்ள மகத்தான தேர்தல் வெற்றியும் தமிழ்நாட்டு அரசியலில் ஒரு ஸ்திரத் தன்மையை வரவழைத்துள்ளன. பொருளாதார வளர்ச்சி



எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் இருக்க வேண்டுமானால் அரசியல் ஸ்திரத்தன்மை மிகமிக இன்றியமையாததாகும். அத்தகைய ஒரு சூழ்நிலை ஒரு மகிழ்ச்சிகரமான சூழ்நிலை அந்த ஸ்திரத்தன்மை இப்போது உருவாகியுள்ளதை எண்ணி நான் மகிழ்கிறேன்.

கேள்வி : **வெளிப்படையான நிர்வாகமாக இருக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?**

**முதல்வர் :** ஏற்கெனவே இந்த அரசில் போதுமான அளவிற்கு வெளிப்படையான நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

**கேள்வி: நிருபர்களை நீங்கள் அடிக்கடி சந்திப்பீர்களா?**

**முதல்வர் :** வாரம் ஒரு முறை சந்திப்பேன். ★

# அமைச்சரவைக் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 3–3–2002 அன்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இக்கூட்டத்திற்குப்பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது தெரிவித்த விவரங்கள் வருமாறு :




"பல முக்கியமான முடிவுகளை இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்தோம். ஆளுநர் உரையில் என்னென்ன புதிய கொள்கை முடிவுகளை திட்டங்களை அறிவிக்கப் போகிறோம் என்பதைப் பற்றி இன்றைக்கு முடிவு செய்தோம்."



# சட்டப்பேரவை உறுப்பினராகப் பதவி ஏற்பு





தமிழகத்தின் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் (ஆண்டிபட்டி இடைத்தேர்தலில் வெற்றி பெற்று) சட்டப்பேரவை உறுப்பினராக 5–3–2002 அன்று பதவி ஏற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சிக்கு முதலமைச்சர் வந்தபோது அமைச்சர்களும் மற்றவர்களும் வரவேற்றனர்.

சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து முன்னிலையில் பதவி ஏற்பு உறுதிமொழியை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார். சட்டப்பேரவைத் தலைவர் முதலமைச்சருக்கு நூல்கள் பரிசளித்து பாராட்டுத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் துணைத்தலைவர், அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# முதலமைச்சரிடம் பொதுமக்கள் மனு



மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்று முதலமைச்சராக பொறுப்பேற்ற போது நாள்தோறும் கோட்டையில் பொதுமக்களைச் சந்தித்து மனுக்களை வாங்கி வந்தார். பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீது பரிசீலனை செய்து பல்வேறு உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முதியோர் உதவித் தொகை, கல்லூரிப்படிப்பு, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு ஓய்வூதியம் என்று பலவகையான உதவிகளை முதலமைச்சர் அளித்தார். இதனால் ஏராளமான பொதுமக்கள் திருவிழாக் கூட்டம்போல் தினமும் கோட்டையில் முதலமைச்சர் அவர்களிடம் மனுக்கள் அளித்தனர்.



தற்போதும் 4–3–2002 அன்று முதலமைச்சரிடம் கோரிக்கை மனுக்களை அளிக்க ஏராளமான ஆண்களும், பெண்களும் தலைமைச் செயலகத்தில் திரண்டிருந்தனர்.



முதலமைச்சர் வந்தபோது பொதுமக்கள் இருந்த இடத்துக்கு அருகிலேயே காரை நிறுத்தி, இறங்கி வந்து பொதுமக்களிடமிருந்து மனுக்களைப்பெற்றார். முதலில் பெண்களிடமும், அதைத் தொடர்ந்து ஆண்களிடமும் மனுக்கள் பெற்றார். மனுக்களைப் பெற்றுக்கொண்ட முதலமைச்சர் அவர்கள், கோரிக்கைகளைப் பரிசீலிப்பதாக மக்களிடம் தெரிவித்தார்.

★ ★ ★

உலக வரலாற்றில் வீரர்கள் அதிகம் தோன்றி இருக்கிறார்கள். ஆனால், வீராங்கனைகளின் எண்ணிக்கை குறைவுதான்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சரித்திரத்தில் எப்போதோ ஒரு முறை தோன்றுகின்ற வீராங்கனை ஆவார். அவரை வீராங்கனை என்பதைவிட "வீராங்கனைகளின் வீராங்கனை" என்பதே பொருத்தமாய் இருக்கும்.

அவர் வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்ற தன்னிகரற்ற தலைவி.

2000 ஆண்டு கால இந்தியப் பெண்மையின் எழுச்சி வடிவம்தான், நமது முதல்வர் அவர்கள்! வீரத்திலே – நெஞ்சின் ஈரத்திலே – தீரத்திலே – உபகாரத்திலே, அவருக்கு நிகர் அவரே! இது புகழ்ச்சியல்ல, இயல்புரை!

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இயல்புகளை எடுத்துரைக்க நினைக்கும்போது, நம் கண்முன் தோன்றுவது அவருடைய வீரம், அவருடைய தீரம், அவருடைய உபகாரம்!

நல்லது வாழ வேண்டும் என்பதற்காகவும், திக்கற்றோர் துயர் துடைக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், தமிழகத்தின் வளர்ச்சிக்குப் புதிய திசை நிர்மாணிக்க வேண்டும் என்பதற்காகவும் இறைவன் வழங்கியிருக்கும் அருட் கொடைதான் நமது முதலமைச்சர் அவர்கள்.

# இந்தியப் பெண்மையின் எழுச்சி வடிவத்துக்கு இதயம் கனிந்த வரவேற்பு





'நல்லோரைக் காக்கவும், அல்லோரை மாய்க்கவும் நான் யுகம்தோறும் அவதாரமெடுக்கிறேன்' என்ற கீதையின் நாயகனைப் போல வாராது வந்த மாணிக்கம் தான் நமது முதலமைச்சர் அவர்கள்.

கலை வாழ்வு, அரசியல் வாழ்வு, முதலமைச்சர் பணி – இப்படி எந்தத் துறையாக இருந்தாலும், அவருடைய பங்களிப்பு மகத்தானது.

எந்தத் துறையில் அவர் காலடி எடுத்து வைத்தாலும், அவருடைய முத்திரை அங்கே அழுத்தமானதாகவே அமைந்திருக்கும்; அற்புதமாய்ப் பதிந்திருக்கும்!

கலை உலகில் தமக்கென ஒரு சிறப்பிடம் பெற்றவர். 1972ஆம் ஆண்டில் தமிழ், தெலுங்கு இரு மொழிகளிலும் சிறந்த நடிகை எனத் தேர்வு செய்யப்பட்டு பாராட்டும், பரிசும் பெற்றார்.

கலை உலகின் உச்ச கட்டத்தில் இருந்த போதே பொது வாழ்விற்காகத் தமது கலை வாழ்வை நிறுத்திக் கொண்ட தியாகி அவர்.

பெயரும், புகழும் கலைத்துறையில் பெற்றுக் கொண்டிருந்த போதே புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் பொதுப் பணியாற்ற முன் வந்தவர்.

புரட்சித்தலைவருக்குப் பிறகு தமிழகத்தை யார் வழி நடத்துவார்கள் என்று உலகமே எதிர்பார்த்தபோது, இதோ நான் இருக்கிறேன் என்று மக்களைக் காக்க வந்த அன்புத் தலைவி தான் நமது முதல்வர்.



அவர் சென்ற இடமெல்லாம் மக்கள் கூட்டம் அலை மோதியது. பொது மக்கள் அலை அலையாய் வந்து புரட்சித்தலைவி அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்தார்கள். மக்களின் எண்ணங்கள், தேவைகள் ஆகியவற்றை புரட்சித்தலைவரிடம், அவர்கள் எடுத்துக் கூறியதால் மக்களின் வேண்டுகோள்கள் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டன.

அந்தச் சாதனை தந்த தக்க பரிசு தான் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் பதவி. 1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிட்டு ராஜ்ய சபை எம்.பி.யாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். பதவியேற்ற சில மணி நேரங்களிலேயே டெல்லி மாநிலங்களவையில் அவர் ஆற்றிய உரை – அவருடைய கன்னிப் பேச்சு – அனைவரையும் கவர்ந்தது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் எந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாலும் அவர் காட்டும் ஆர்வமும் ஈடுபாடும், கடமையுணர்வும் மற்றவர்க்கு மகத்தான பாடங்களாகவே அமையும்.

எதிர்ப்புகளும், தடைகளும் அவருக்கு அன்றும் இருந்தன. இன்றைக்கும் உள்ளன. ஆனால் இறுதி வெற்றி என்னவோ அவருக்கு மட்டுமே என்றென்றும் சொந்தம் என்பதைத்தான் வரலாறு நமக்குக் காட்டுகிறது.

அண்ணல் காந்தியடிகள் கூறுவார் :

*"நம்பிக்கை என்பது சிறு காற்றின் வேகத்தைத் தாங்காமல் துவண்டுவிடும் மெல்லிய மலர் அல்ல – அது அடிபெயரா இமயம் போன்றது"*



அப்படி, காந்தியடிகள் சொன்னபடி அடிபெயரா இமயமாய் இருந்து நம்பிக்கை வழங்குபவர்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள்.

ஏழை – எளிய மக்களின் கனவுகளை நனவாக்குவதே புரட்சித்தலைவி அவர்களின் குறிக்கோள்.

நீண்ட காலத் தொலைநோக்குத் திட்டங்களைச் சிந்தித்து, சிறப்புறத் தீட்டிச் செயல்படுத்தும் அதே வேளையில், அடித்தளத்து மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை மறந்து விடாமல், அவற்றிற்கும் பரிகாரம் காண்பவர் புரட்சித்தலைவி அவர்கள்.

நாட்டு முன்னேற்றத்திற்குப் பெரும் திட்டங்கள் அவசியம் தான், ஆனால் அதைவிட முக்கியம் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாடுகின்ற மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே!

புரட்சித்தலைவி நினைத்திருந்தால் எந்த சோதனையையும் சந்திக்க வேண்டிய அவசியமில்லாமல் சகல வசதிகளோடும், மகிழ்ச்சியோடும் வாழ்ந்திருக்கலாம். ஆனால், அவருடைய தியாக நெஞ்சம், அதை விரும்பவில்லை. தமிழகத்தின் பொறுப்பை ஏற்று, கோடானுகோடி மக்களுக்கு நம்பிக்கை வழங்கினார்.

புரட்சித்தலைவரின் ஆட்சியை மலரச் செய்தார். ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், முதலமைச்சராகப் பொறுப்பேற்று, பேரறிஞர் அண்ணாவின் வழியில், புரட்சித் தலைவர்

ஆட்சியை வெற்றி நடை போட வைத்த வீரப் பெருமையும், வித்தகப் புகழும் அவருக்கு மட்டுமே சொந்தம்!

அவர் வழிகாட்ட வந்த தீர்க்கதரிசி! ஒரு வீர வரலாற்றினை தமிழகத்துக்குச் சொந்தமாக்கிய வீராங்கனை!

தமிழகத்திற்கு நிலையான ஆட்சியையும், நினைவு கூரத்தக்க வரலாற்றுச் சாதனைகளையும் வழங்கியவர், இன்றும் வழங்குபவர், நாளையும் தொடர்ந்து வழங்க இருப்பவர் புரட்சித்தலைவி அவர்கள்!

தமிழக மக்கள் அனைவரும் அவரையே நிலையாக நம்பியிருக்கிறார்கள்.

தன்னை நம்பிய ஏழை – எளிய மக்களுக்காக அவர் தீட்டிய திட்டங்களும், நிறைவேற்றிய சாதனைகளும் ஏராளம்!

அரசுப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் இயந்திரம் போல் செயல்படலாம். ஆனால் இயந்திரமாகவே ஆகி விடக்கூடாது.

இந்தக் கருத்தை மிக அற்புதமாக நமது முதலமைச்சர் அவர்கள் தமது உரை ஒன்றில் குறிப்பிடுகிறார்கள்.

''ஓர் அரசினையும் அதன் செயல்பாடுகளையும் பற்றிக் குறிப்பிடுகையில், பொதுவாக அரசு இயந்திரம் என்று பலரும் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். இங்கு இயந்திரம் என்றவார்த்தை பயன்படுத்தப்படுவதை நான் குறை கூறவில்லை. ஆனால், அந்த அரசு இயந்திரத்தை இயக்கிடுபவர்கள், ஓர் இயந்திரமாக, மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் புரிந்து கொள்ளும் சக்தியின்றி,இயந்திரகதியில் செயல்படுவதைத் தான் என்னால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள இயலவில்லை''.

எத்தகைய ஒப்பற்ற கருத்து இந்தக் கருத்து! எந்த மக்கள் தங்களைத் தேர்ந்தெடுத்தார்களோ, அந்த மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதே ஆட்சியாளரின் தலையாய கடமையாக இருக்க வேண்டும் என்பதை ஆணித்தரமாகப் புரட்சித்தலைவி அவர்கள் வலியுறுத்துகிறார்.

இந்தத் தத்துவ ஞானத்தின் அடிப்படையில் புரட்சித்தலைவியின் மனிதாபிமான திட்டங்கள் அடங்கியிருக்கின்றன.

★ தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் நலம் காக்க 15 அம்சத் திட்டம்

★ தாழ்த்தப்பட்ட இன மாணவியர்க்கு பட்டமேற்படிப்பு வரை இலவசக் கல்வி

★ 11, 12ஆம் வகுப்புகளில் படிக்கும் தாழ்த்தப்பட்ட இனத்து மாணவியர்க்கு இலவச சைக்கிள்

★ 5 இலட்சம் பெண்கள் மேம்பாடு பெறத் தொழில் முனைவோர் பயிற்சி

★ தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

★ கிராமப்புற மகளிர்க்கு அடிப்படை வசதிகள்

★ ஆலயங்களைக் காக்கவும், அன்றாட பூஜைகளுக்கும் அருமையான திட்டங்கள்

★ ஊட்டி தேயிலை; சிறுவிவசாயிகள் துயர்துடைப்பு.

★ விவசாயிகள் வாங்கிய கடன் வட்டி ரூ.310.51 கோடி தள்ளுபடி

★ தரிசுநில மேம்பாட்டுத் திட்டம்

★ மகளிர் காவல்நிலையங்களுக்கு மறுமலர்ச்சித் திட்டங்கள்

★ சிறுதொழில் வளரச் சீர்மிகு திட்டங்கள்

★ குடிசைப் பகுதிகளில் ஆழ்குழாய்க் கிணறுகள்

★ பத்திரிகையாளர் நலன்

– இவையெல்லாம் 2001 இல் முதலமைச்சராக இருந்த குறுகிய காலத்தில் அவர் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்கள். இந்த அற்புதங்களைத் தொடர இயலாதபடி ஆயிரம் தடைகள் அடுக்கடுக்காய் வந்தன. புரட்சித்தலைவி அவர்களின் துணிவும், கனிவும், நெஞ்சின் ஈரமும், அதிசயத்தக்க அறிவும், ஆற்றலும், அவர் நிகழ்த்திக் காட்டிக் கொண்டிருக்கும் சாதனைகளுக்கு அடித்தளமாக அமைந்திருக்கின்றன.

“தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் – தர்மம் மறுபடியும் வெல்லும்'' என்னும் மகாகவி பாரதியின் மந்திர வரிகளையே உச்சரித்து உச்சரித்து, துணிவைத் துணையாக்கி, துன்பங்களையெல்லாம் 'அன்னை சக்தி'யாய் அவதாரமெடுத்து, அவர் தூள் தூளாக்கினார்.

2002ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நடைபெற்ற ஆண்டிபட்டி இடைத் தேர்தலில் 'திரும்பவும், புரட்சித்தலைவியின் ஆட்சியே எங்களுக்கு வேண்டும்' என்று தருமத்தை மறவாத தமிழ் மக்கள் தேர்தலில் நியாயத் தீர்ப்பை வழங்கினார்கள். மக்களின் மன அரியணையில் என்றுமே புரட்சித்தலைவிதான் என்று மக்கள் நிரூபித்தார்கள்.

புரட்சித்தலைவரின் வழியில் புரட்சித்தலைவி அறிவித்து, செயல்படுத்திக் கொண்டிருந்த திட்டங்கள் தொடர, தங்கள் மன அரியாசனத்தில் வீற்றிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை மீண்டும் முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்த பெருமை, தமிழக மக்களையே சாரும்.

மக்கள் தந்துள்ள மகத்தான தீர்ப்பின்படி மாநில முதல்வராய் மறுபடி பொறுப்பேற்றிருக்கும் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையில், பொன் எழுத்துகளில் புதிய அத்தியாயங்களை, வரலாற்று ஏட்டில் தமிழகம் வடிக்க இருக்கிறது.

இந்தப் பொற்கால வரலாற்றை வாழ்த்தி வரவேற்கிறோம்!

புரட்சித்தலைவி அவர்களை வணங்கி வரவேற்கிறோம்!

“எங்கள் பாதையும், பயணமும்
சத்திய சோதனைகள் பலவற்றை வென்ற
அண்ணாவுடையன;
புரட்சித்தலைவருடையன.
அந்தத் தியாக தீபங்கள் காட்டும்
ஒளிவழியே
வீறுநடை பயின்று வெற்றி பெறுவோம்”

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா

## ஆண்டிபட்டி இடைத்தேர்தல் முடிவு

ஆண்டிபட்டி தொகுதி ஒட்டு எண்ணிக்கை முடிவுகளை தேர்தல் அதிகாரி திரு. புலமாடன் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 2,08,214 |
| பதிவான வாக்குகள் | 1,34,703 |
| ஜெ ஜெயலலிதா (அ.இ.அ.தி.மு.க.) | 78,437 |
| வைகை சேகர் என்ற பாலசுந்தரம் (தி.மு.க.) | 37,236 |
| வி. ஜெயச்சந்திரன் (ம.தி.மு.க.) | 8,421 |
| கே. கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்) | 5,126 |
| அய்யர்தேவர் (சுயே) | 244 |
| கண்ணன் (சுயே) | 116 |
| சண்முகம் (சுயே) | 249 |
| சந்திரன் (சுயே) | 98 |
| செல்வமணி (சுயே) | 96 |
| சென்ராயன் (சுயே) | 74 |
| தேவராஜ் (சுயே) | 81 |
| நூர்முகமது (சுயே) | 136 |
| பத்மராஜன் (சுயே) | 201 |
| பரந்தாழ்வார் (சுயே) | 388 |
| பன்னீர் (சுயே) | 184 |
| பாலுச்சாமி (சுயே) | 728 |
| பால்ராஜ் (சுயே) | 894 |
| புஷ்பராஜ் (சுயே) | 287 |
| பெரிய சுப்பையன் (சுயே) | 860 |
| முருகேசன் (சுயே) | 114 |
| மன்மதன் (சுயே) | 213 |
| ராமநாதன் (சுயே) | 116 |
| ராமராஜ் (சுயே) | 85 |
| ஜெஹபர் அலி (சுயே) | 350 |



"ஆயிரமாயிரம் திறமைமிகு அலுவலர்கள் பணியாற்றினால் மட்டும் போதாது; ஆட்சி உண்மையிலேயே செம்மையானதாக அமைந்திட வேண்டுமென்றால் வயலில், தொழிற்சாலையில், அங்காடியில், பணிபுரிந்திடும் உற்பத்தியாளர்கள், உழைப்பாளர்கள் அனைவரும் ஆட்சி நடத்திடுவோர் நாமே என்ற உணர்வுடன் தத்தமது கடமையினைச் செய்ய வேண்டும். கற்றறிவாளர் எம்மை நல்வழி நடத்திடச் செய்ய வேண்டும். இதற்கு நடத்துவோர் உடனிருந்து முறை கூறிட வேண்டும். இவர் யாவரும் சேர்ந்து நடத்திடுவதே அரசு. நாங்கள் உங்களாலே அமர்த்தப்பட்டவர்கள், "நாமாகத் தேடிப் பெற்றுக் கொண்ட அரசு இது, நம்முடைய துணையை நம்பியே இயங்கும் அரசு இது. எனவே இது செம்மையாக நடந்திட நாம்தான் துணையிருக்க வேண்டும்" என்று ஒத்துழைத்திட மக்கள் முனைந்து நின்றிட வேண்டும்.

- பேரறிஞர் அண்ணா

(முதல்வர் பொறுப்பேற்றவுடன் 15-3-1967 அன்று வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து.)

223670
சென்னை-600 008

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2033
பிப்ரவரி-மார்ச் 2002
மலர் : 33 இதழ் 15 - 18
விலை ரூ.20

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தேவ். ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 5368926/5364906



Verified



தந்தை பெரியாரிடம் வாழ்த்து



பேரறிஞர் அண்ணாவிடம் விருது



புரட்சித்தலைவரிடம் செங்கோல்